# அன்பூ வாசம்

மேலாண்மை பொன்னுசாமி

கங்கை புத்தக நிலையம்



# அன்பூ வாசம்

மேலாண்மை. பொன்னுச்சாமி

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 2002

விலை: ரூ. 40—00

| | |
|---|---|
| Title | **ANPOO VAASAM** |
| Author | **Melanmai. Ponnusamy** |
| Subject | Short Stories |
| Language | Tamil |
| Edition | First Edition, December - 2002 |
| Pages | xii + 156 = 168 |
| Publication | **Gangai Puthaka Nilayam**<br>13, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>Chennai - 600 017. |
| Price | Rs.**40-00** |

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14

Printed at : PS. SP. Meyappan & Co., Chennai-17. ✆ 2814 1093

# சமர்ப்பணம்

மதச்சார்பின்மைப் பண்பு கொண்ட
பாரத தேசத்தில்
நிகழ்கிற மதக் கலவரங்களில்
உதிர்கிற மனிதப் பூக்களுக்காக
மதபேதமில்லாமல்
மனம் பதறிப் பதைக்கிற
சகல இந்தியப் பற்றாளர்களுக்கும்...

# முன்னுரை

“பரண் ஏறுவது என்றால் தவ்வித் தவ்வி ஏறலாம். ஏணி போட்டு ஏறலாம். ஒரு நீண்ட கம்பை தரையில் ஊன்றி, ஒரே எம்பாக எம்பிப் பாய்ந்தும் ஏறலாம். இறைவனை அடைவதுதான் முக்கியம். இஸ்லாமிய மார்க்கம், கிறிஸ்தவ மார்க்கம், இந்து மார்க்கம் எதன் மூலமும் அடையலாம்” என்று கூறிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் பிறந்து வாழ்ந்து அருள் பாலித்த அன்புதேசம், நம் தேசம். பரந்த நெஞ்சும் படர்ந்த அன்பும் சொந்தமாகக் கொண்ட தேசம்.

‘மிலேச்சர்கள், மாட்டுக்கறி தின்கிறவர்கள்’ என்று சனாதனவாதிகள் அருவெருத்து அசூயை செய்யப்பட்ட அமெரிக்க தேசமக்கள் மத்தியில் அருவெருப்பில்லாமல் - அசூயைப்படாமல் அன்பான புன்னகையோடு போய்... பாரம்பர்ய வலிமைமிகு இந்திய ஞானத்தைப் பிரசாரம் செய்தவர், பெருமைமிகு வீரத்துறவி விவேகா னந்தர். இஸ்லாமியர், கிறிஸ்தவர் என்ற மதபேதம் பார்க்காமல் சகல மக்களையும் சகோதரர்களாக பாவித்த மகான், விவேகானந்தர். அவர் வாழ்ந்த தேசம் பாரததேசம்.

அன்பால் மனித உள்ளங்களை நிரப்பவும், உணவால் சகல உயிர்களின் வயிறுகளை

நிரப்பவும் அணையா ஜோதியை ஆண்டவனாகவும், அணையாத அடுப்பை செயலாகவும் சிந்தித்த வள்ளலார் சுவாமிகள் அரும்பி மலர்ந்த இந்திய தேசம்.

'தாழக் கிடப்போரைத் தாங்கிப் பிடிப்பதே தர்மம்' என்று அகிலத்திரட்டு பாடிய ஸ்ரீ வைகுண்ட நாதர் சுவாமிகள் அவதரித்த தேசம்.

அருந்ததிச் சிறுவனை வளர்ப்பு மகனாக்கிக் கொண்ட வ.உ.சி. வாழ்ந்த தேசம். 'சகல ஜாதியினரும் சாமியின் முன் சமமே' என்று சகலரையும் ஆலயப் பிரவேசம் செய்ய அரும்பாடு பட்ட வைத்தியநாத அய்யர் வாழ்ந்த தேசம்.

மகாகவி பாரதி, ஈ.வே.ரா, ஜீவா, காமராசர், மகாத்மா காந்தி எல்லோரும் அன்பால் இயங்கியவர்கள். அன்பை விதைத்தவர்கள். சகல இந்தியரும் சகோதரர்களாகக் கை கோர்த்தால் தான் பாரத பூமி சுதந்திர பூமியாகும் என்ற லட்சியம் கொண்டவர்கள்.

தேசப்பற்றின் லட்சணமாக மதச்சார்பின்மை ஒளிர்ந்தது. மனிதநேயத்தின் முகமே மத நல்லிணக்கமாகத் திகழ்ந்தது.

இப்படிப்பட்ட மகான்களும், யோகிகளும், மனிதப் புனிதர்களும், தேசப்பிதாக்களும் தோன்றி அன்பை விளைவித்த இந்திய தேசத்தில், 'மதக்கலவரங்கள்' என்பது எத்தகைய ஆபாசம்? காந்தி மகான் அவதரித்த குஜராத்திலேயே

நிலநடுக்க சோகத்தை மறக்கடிக்கக்கூடிய மதக் கலவரங்களும், மனித உயிர் மரணங்களும் என்பது எத்தகைய வரலாற்று முரண்?

அல்லிக்கொடிக்கு விதை போட்டால், அரளிச் செடிகள் முளைக்குமா? அன்பை விதைத்த தேசத்தில் பகை முட்செடிகள் முளைத்திருக் கின்றனவே!

இந்திய நதிகளின் இணைப்பில்தான் எதிர்கால சுபிட்சம் ஒளிந்திருக்கிறது. இந்திய மனிதர்களின் இதயங்களே அன்பால் இணைய முடியாம லிருக்கிற பயங்கரத்தில் இந்தியாவின் நிகழ் காலமே நரகமாகிறதே...

மதத்தால் பகைத்தீ வளர்ந்து, எழுகிற புகைமூட்டத்தில் தேசத்தின் மூச்சே திணறுகிறதே...

கனிந்த மனசின் உயர் பண்புதானே பக்தியும், மதமும்? மனசுகளைப் பிளந்து, குரோதச் சிறுமை களைப் பெருகச் செய்கின்றனவே... அது மதமா? பக்தியா?

இந்திய மனிதர்களின் இதயங்களை மதத்தால் துண்டாடி, பகைத்தீ வளர்த்தால்... இந்தியாவின் ஒற்றுமை என்னாகும்? பாரம்பர்யப் பெருமைகள் என்னாகும்? அன்புத் தேசமே இந்திய தேசம் என்கிற புகழ்மிக்க மரபு என்னாகும்? மானுடப் பண்பு என்னாகும்?

மதப்பற்று என்ற நியாயம், மதவெறி என்கிற அநியாய நெருப்பாக பற்றிப் படர்கிற அபாயத்

தில்... தேசப்பற்று என்கிற உயர்பண்பு முக்கிய மற்று மங்கி மறைந்துவிடுகிறதே... இது நியாயமா? நாட்டுக்கு நல்லதா? எதிர்கால இந்தியா என்னாகும்?

மனித நேயமுள்ள தேசப்பற்றாளர்கள் அனைவரும் இந்தக் கேள்விகளை எதிர்கொள்ள வேண்டும். பதில் சொல்ல வேண்டும். தேசமும், மானுடமும் காப்பாற்றப்பட வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், வள்ளலார் போன்ற மகான்களின் ஞான வெளிச்சத்தில் இன்றைய பக்திமான்கள் அனைவரும் கருணை மனத்தினராகக் கனிய வேண்டும். சமய பேதமற்று சகோதரர்களாக சகலரையும் தழுவுகிற பரந்த இதயம் பெற வேண்டும்.

கொஞ்ச நஞ்சமாக மனமூலைகளில் பம்மிப் பதுங்கிக் கிடக்கும் மதக் குரோதம் என்கிற மூட்டைப் பூச்சியை நசுக்க வேண்டும். ஞான வெளிச்சம் அன்பொளியாக வேண்டும்.

இன்றைய இந்தியத் தமிழனின் பயணமும், மனமும் இவ்வாறே இருக்க வேண்டும்.

இந்தக் கனவுகளைச் சுமந்த சிறுகதைகள் இத்தொகுப்பில் அதிகம். ‘அன்பூவாசம்’ என்ற சிறுகதையே அதுதான். ‘கலவரமற்ற சமாதான தேசமாக இந்தியா மாற வேண்டும்’ என்ற பெருங்கனவை ஏந்தி நிற்கிறது, அந்தச் சிறுகதை.

பாரதத் தாய், பூமனசுகள், பாச நெருப்பூ போன்ற சிறுகதைகளும் அத்தகைய தன்மை வாய்ந்தவையே.

அன்புதான் பிரபஞ்சத்தை பேரழகு மிக்க தாக்குகிறது. உலகத்தை சொர்க்கமாக்குகிறது. பகையும், வெறுப்பும், சுயநலப் பேராசையும் ஓசோன் மண்டலத்தை ஓட்டையாக்கி, காற்றை அசுத்தமாக்கி, நீரை மாசாக்கி, பிரபஞ்சத்தையே நரகமாக்குகிறது.

அன்பு வற்றிப்போகிற பயங்கரத்தில் தான், வளர்த்து ஆளாக்கி வயதாகிப்போன அப்பாக் களும், ஆச்சிகளும் அனாதைப் பிச்சைக்காரர் களாகிப் போகிறார்கள்.

மனைவியின் கனவுகளைக் கருக்கிவிட்டு, ஒயின் ஷாப்புகளில் வாழ்வை அடகு வைக்கிற பரிதாபமும், அன்பு வற்றிப் போனதின் விளைவு தாம்.

ஆமாம்... அன்பில்லாத பாலைப் பயங் கரத்தையும் அன்புச்சுனை அரிய குளிர்மையை யும் ஒரு சேர உணர்த்துகிற பன்முகச் சிறுகதை களின் அணிவகுப்பாக இந்த ‘அன்பூவாசம்’ தொகுப்பு.

‘அன்பூவாசம்’ ஆனந்தவிகடனில் ஓவியக் கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை. அது மட்டுமல்ல... இன்னும் சில சிறுகதைகள் ஆனந்தவிகடனில் ‘முத்திரைச் சிறுகதைகள்’ என்ற பெருமையைப் பெற்றிருந்தன.

இத்தொகுப்பு, இக்காலத்தின் குரலாக உங்களிடம் வருகிறது.

இத்தொகுப்பை அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிற கங்கை புத்தக நிலைய உரிமையாளர் திரு. ராமு அவர்களுக்கும், அட்டை ஓவியம் அமைத்துத் தந்த திரு. ஷ்யாம் அவர்களுக்கும், சிறுகதைகளைப் பாதுகாத்து, வரிசைப்படுத்தித் தந்த என் மகள் வைகறைச் செல்விக்கும், எனது ஆணிவேராகவும், ஆதார பலமாகவும் இருந்து வருகிற என் தம்பி கரிகாலனுக்கும் அன்பான வணக்கங்கள் என்றென்றுக்கும்...

இனி... நீங்களும், 'அன்பூவாசமு'மாக...

வாசித்து முடித்துவிட்டு மௌனமாகிவிட வேண்டாம். அஞ்சல் வழியாகப் பேசுங்கள். நல்லதைப் பாராட்டுங்கள். தவறைச் சுட்டிக் காட்டுங்கள்.

பாராட்டு என்னை ஊக்கப்படுத்தும். சுட்டிக் காட்டல் செதுக்கி கூர்மைப்படுத்தும். இரண்டுமே இலக்கியத்துக்கு உரமாகும். நன்றி!

என்றும் உங்கள்
*மேலாண்மை. பொன்னுச்சாமி*

மேலாண் மறைநாடு
626127
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்
04562/271233

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அன்பூவாசம் *(ஓவியக்கதைப் போட்டி முதல் பரிசு)* | 1 |
| 2. | கடைசிப்பால் *(முத்திரைப் பரிசு)* | 14 |
| 3. | பூமனசுகள் *(முத்திரைப் பரிசு)* | 31 |
| 4. | பொய்ம்மையும் | 43 |
| 5. | சித்தாந்தம் *(முத்திரைப் பரிசு)* | 60 |
| 6. | பாரதத் தாய் | 74 |
| 7. | தீயாகின்ற பூ | 91 |
| 8. | நாட்டுக்கோழி | 106 |
| 9. | பாச நெருப்பூ | 118 |
| 10. | மழை தோற்றது | 128 |
| 11. | புனித வாசம் | 143 |

## ஆசிரியரின் பிற நூல்கள்

*சிறுகதைத் தொகுப்புகள்*

மானுடம் வெல்லும்

சிபிகள்

பூக்காத மாலை
*(அனந்தாச்சாரியார் அறக்கட்டளை விருது)*

மானுடப் பிரவாகம்

பூச்சுமை
*(லில்லி தேவசிகாமணி இலக்கிய விருது)*

கணக்கு

தாய்மதி

உயிர் காற்று...
*(பாரத ஸ்டேட் வங்கி இலக்கிய விருது)*

விரல்

காகிதம்

என் கனா

ராசாத்தி

மனப் பூ
*(தமிழக அரசின் மாநில விருது)*

ஒரு மாலை பூத்து வரும்
*(தமிழக அரசின் மாநில விருது)*

மானாவாரிப் பூ
*(அமரர் சி.பா.ஆதித்தனார் இலக்கிய விருது)*

வெண்பூ மனம்

*குறுநாவல் தொகுப்புகள்*

கோடுகள்
தழும்பு
ஈஸ்வர...
பாசத் தீ

*நாவல்கள்*

முற்றுகை
இனி
அச்சமே நரகம்
ஊர்மண்
ஆகாயச் சிறகுகள்
முழுநிலா

*இலக்கியம்*

சிறுகதைப் படைப்பின் உள் விவகாரம்

**ஆனந்தவிகடன் ஓவியக் கதைப் போட்டியில் ரூ. 12,500 பெற்ற முதல் பரிசுக் கதை.**

# அன்பூவாசம்

*அண்ணாந்து பார்த்தான் பூர்ணம், டீக்கடையை. ஆகாயத்தைப் பார்ப்பது போலிருந்தது. பிளாட்பாரத்தில் ஒரு மேஜை. அதில் மூன்று தட்டுகள். இனிப்பு கேக், உளுந்த வடை, பஜ்ஜி. எண்ணெய் மினுமினுப்பான பொன்னிறம். பக்கத்திலேயே டீப்பட்டறை.*

*மேஜை உயரம்கூட ஆகாயம் மாதிரிதான் பூர்ணத்துக்கு.*

*"ஒரு கேக் குடுங்க..."*

*சத்தம் வருகிறது. ஆள் தெரியவில்லை. டீக்கடைக் காரரர் கழுத்தை நீட்டிக் கீழே பார்க்கிறார். தரையோடு ஒட்டிய பலகைவண்டியில் பூர்ணம். இளந்தாடி, மீசை. எண்ணெய் கண்டிருக்காத பரட்டைத் தலை. குவித்த கூடைச்சாணம் போல பூர்ணம். மூஞ்சியும் மார்பும்தான் முழுசாக இருக்கிறது.*

*"நீதானா? ச்சே... இந்தா, கேக்..." குனிந்து தாழ்ந்து தர, அண்ணாந்து கையை உயர்த்திப் பெறுகிற பூர்ணம். கடைக்காரரின் சிடுசிடுப்பும் அருவருப்பும் அவனை*

ஒன்றும் செய்யவில்லை. கசந்த சிரிப்பாகச் சிரித்துக் கொண்டான்.

ஆயுள் முழுக்க அனுபவித்த அவமதிப்பு. புறங்கையால் துரத்தப்பட்ட அலட்சியம். அசிங்கப்பட்டு, சிடுசிடுக்கப்பட்ட வாழ்க்கை. அன்பற்ற பாலைத் தகிப்பு, பழகிப் பழகி மரத்துப் போயிற்று, பூர்ணத்துக்குச் சின்ன வயசிலிருந்து. 'அனல் வெக்கையே புறம்' என்று வெந்து வெந்து பழகிப்போன அடுப்பு மனசு.

வலது கையில் வாங்கிய கேக்கை வாயில் வைத்தான். கொஞ்சம் தள்ளி வந்துகொண்டிருந்த தெருநாய். தேன் கலர் நாய். இவனைக் கண்டதும் திகைத்தது. தேங்கியது. முகத்தில் ஓர் எதிர்பார்ப்பு.

பூர்ணம் கண்ணிலிருந்த அன்பு. பாச அழைப்பு. உதட்டில் பூத்த சிறு புன்னகை. கன்னமேடுகளின் கனிவு. அன்பை ருசிக்காத அவனுக்குள்ளிருந்து பீறிடுகிற அன்புப் பிரவாகம். அனலைச் சுமக்கும் பூமியின் அடிவயிறு, தோண்டும் மனிதருக்கு நீரையே வழங்குகிற மாதிரி. அவனிடம் வழங்குவதற்கு அன்பு மட்டுமே இருக்கிறது.

பெற முடியாத அன்பைத் தருவதில் ஒரு சுகம். ஓர் இதம். பூமி முழுவதும் அன்புக் காற்றால் நிரம்பிவிட வேண்டும் என்ற ஆசை அவனுக்கு. நிரப்ப வேண்டும் என்ற துடிப்பு. போலியோவினால் தாக்க முடியாத அன்புப் பிரதேசமாக அவனது ஆகாய மனம்.

அவனது முகத்தின் மொழியில்லாத வாஞ்சையில் நின்ற நாயின் முன்னால், கடித்த இனிப்புத் துண்டைத்

துப்பினான். அது நுகர்ந்து பார்த்துவிட்டு, நாக்கால் லாவியது. இவன் கடித்துக் கடித்துத் துப்பிய அன்பு, இனிப்புக் கருணை.

லாவிக்கொண்டே நிமிர்கிற கண்ணின் மின்னல். நன்றிக் குழைவு. ஆட்டும் வாலில் அதன் மகிழ்ச்சி மனசு.

கேக் சாப்பிட்ட வலது கையையே துடுப்பாகத் தரையில் அழுத்த... பலகை வண்டி ஊர்ந்தது. பலகை வண்டியில் உட்கார்ந்திருக்கிற பூர்ணம். உருளும் பலகைவண்டி.

பிளாட்பாரத்தில் ஒரு வெற்றிடம் வேண்டும். மனித மக்கள் நடமாடுகிற இந்த நெரிசலான சாலையோர நடை மேடையில், ஒரு சின்ன வெற்றிடம் வேண்டும்.

தோளோடு நனைந்த கயிறாகத் தொங்கித் துவண்டு கிடக்கிற இடது கையின் முழங்கையில் மட்டும் சிறு இயக்கம். மணிக்கட்டிலும் மெல்லிய இயக்கம். செயல்படாது. உயராது. எதையாச்சும் பற்றிக்கொள்ளும். அதுகூட அழுத்தமாகக் கவ்வ இயலாது. அந்தக் கையில் அழுக்கேறிப் போன சின்னப் பை. அந்தப் பைக்குள் பழைய துணிகள், கலர் சாக்பீஸ் துண்டுகள், கலர்ப் பெட்டிகள், கிண்ணங்கள் மற்றும் தொழில் சாதனம்.

தேடலுடன் பிளாட்பாரத்தையே பார்த்துக்கொண்டு வந்த பூர்ணத்துக்குள் ஒரு சின்ன ஆசுவாசம். விரிந்த இமைகளில் ஓர் இளமின்னல். 'அட... இந்தா... ஒரு இடம்...'

வண்டியை நிறுத்தினான். ஒதுக்கமான இடம். கடைகண்ணி இல்லை. ஆயினும் ஆள்நடமாட்டம்

இருக்கிறது. ‘சரியான இடம்தான். ஏதோ பரவாயில்லாமத் தொழில் நடக்கும்...’

மனம் கணக்குப் போட்டது. திருப்திப்பட்டது.

சுவரில் இடைத்தேர்தலின் ஆக்கிரமிப்பு. கட்சிச் சின்னங்கள் அடங்கிய வண்ண போஸ்டர்கள். வகை வகையான ‘அம்மா’, ‘அப்பா’ போஸ்டர்கள். வோட்டுப் பிச்சை கேட்கிற திருவோடுகள்.

இன்னிக்குத்தான் போலிங். என்னென்ன கூத்து நடக்கப் போகுதோ? எத்தனை வெட்டுக் குத்துகளோ? சண்டை சச்சரவுகள் அடிதடி கலவரங்கள்...

முந்தியெல்லாம்... இடைத்தேர்தல் என்றால் ஜனங்கள் பாடு ஒரே குஷி. மந்திரிகளே வாசல் தேடி வந்து சேவை செய்வார்கள். திடீர் ரோடுகள், திடீர் குழாய்கள், ஏகப்பட்ட திடீர் வசதிகள். அத்துமீறலான அரசு சேவைகள்.

இப்ப என்னடாவென்றால்... நிலைமையே தலைகீழ்! இடைத்தேர்தல் என்றால் ‘எத்தனை தலைகள் உருளுமோ?’ என்று நடுங்க வேண்டியிருக்குது. எல்லாம்... காலம் செய்கிற கோலக்கூத்து!

அன்பால் ததும்புகிற பூர்ணத்தின் மனசு திணறியது. இப்படியொரு பயங்கரக் கூத்தா என்ற சஞ்சலம். ‘பெருமூச்சை விட்டு ஆற்றிக் கொள்ளத்தான் முடியம்... வேறென்ன முடியும் — கால், கை இல்லாத ஊனப் பயலால்?’ என்று கசப்புடன் முணுமுணுத்துக் கொண்டான்.

‘என்ன ஓவியம் வரையலாம்?’

*ராமர்... ராமர்... ராமர்!*

*ராமர் பெயர் பீறிட்டு வந்ததற்குக் காரணம்.*

*பூர்ணத்துள் ராமர் நீலவண்ணமாக விசுவரூபமெடுக்கிறார். மூடிய கண்ணுக்குள் பூக்கிற ராமர். ராமர் முகச் சாந்தம். சிவப்பு உதட்டின் சிநேகப் புன்னகை. கருநீல நிறம். அங்கவஸ்திர வண்ணம். ஆபரண வண்ணம். வில்லின் நிறம்.*

*ஓவிய மனசு வண்ணம் பிரித்துப் பார்க்கிறது. வண்ணங்களினூடே ராமரைத் தரிசிக்கிற பூர்ணம். அவனுள் பூர்ணமாக நிறைந்து விம்முகிற ராமர் பேருரு.*

*கண்ணைத் திறந்தான். மனக்கற்பனை பிரமாண்டம்—கை வழியே வண்ணக் கோடுகளாக, வண்ண வளைவுகளாக இறங்கிக் கொண்டிருந்தது.*

*பலகைவண்டியில் உட்கார்ந்த நிலையிலேயே, வலது பக்கமாகச் சாய்ந்து, குனிந்து, வலது கை சுறுசுறுப்பாக இயங்குகிறது. மனசின் கை. கலர்ப் பொடியிலும் கலர் சாக்பீஸ்களிலும் எழுகிற ராமர்!*

*புருவ நுனியில் துளிர்த்து நிற்கும் வியர்வைத் துளிகள். கழுத்தடியில் வியர்வைக் கோடுகள். வளைகிற கைக்கேற்ப நெளிகிற மேல்உதடு. ராமருக்குள் மூழ்குகிற மனத்தீவிரம்—உணர்வுத் தீவிரம்.*

*எதையும் கவனிக்காமல்—நிமிராமல்—ஓவியம் வரைகிற மன ஈடுபாட்டைப் பார்க்கிற மனிதர்கள். பார்க்காமல் போகிற மனிதர்கள். பார்த்து, கவனித்து விட்டுப் பிரமிப்போடு நகர்கிறவர்கள். பேச்சுத் தீவிரத்திலேயே இதைக் கவனிக்காமலும் போகிறவர்கள்.*

இன்னும் சில நிமிஷங்கள்தான். ஓவியம் முடிந்து விடும். ராமர் பரிபூர்ணமாகி விடுவார். அடியில் கையெழுத்துப் போடணும். 'பூர்ணம்'னு போடவா, 'பூர்ண சந்திரன்'னு போடவா? அந்த நினைவே கசந்தது. வேதனைச் சிரிப்பாகச் சிரித்துக்கொண்டான். சுய பரிகசிப்பு.

தனக்கு வந்து வாய்த்திருக்கும் பெயரே, மிகப்பெரிய காமெடி. விதியின் நையாண்டி. பலகை வண்டியில் கால்வாசி உடல்சதையாகக் கிடக்கிற ஊனப்பிராணிக்குப் பெயர்... பூர்ணசந்திரன். விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டின மாதிரி.

அம்மா ஆசை ஆசையாக வைத்திருக்கிறாள். பெயரை மனசுக்குள் அடைகாத்துப் பொரித்திருக்கிறாள். வயிற்றில் கருவையும் நினைவில் பெயரையும் சுமந்து, வளர்த்து, ரத்தமும் சதையும் தந்து வடிவம் தந்திருக்கிறாள்.

"பொறந்தப்ப தங்கப் பழமா இருந்தேடா... பார்க்கப் பார்க்க ஆசையா இருக்கும். அம்புட்டு லட்சணமா யிருப்பேடா... பூர்ணசந்திரன்னா, உனக்குத்தான் செல்லும். பௌர்ணமி நிலா போல இருந்தேடா மூணு வயசு வரைக்கும்..."

பூரித்துப் பூரித்து அம்மா புல்லரித்த சொற்கள்.

அப்புறம் வந்த காய்ச்சல். கிராமத்து அறியாமை. உரிய மருத்துவம் பார்க்காமல், கைவைத்தியமும் திருநீற்றுப் பூச்சுமாக நாள் நீள... காய்ச்சல் முற்றி, கை—கால் வராமல் சூம்பிப் போக... போலியோ தாக்கி, இப்படியாகி... கிழித்துக் கசக்கிப் போட்ட காகிதச்சுருளாக உடம்பும்

தலையெழுத்தும் சீரழிய... உயிர்த் துயரமாகி... ஊர்கிற அவலமாகி...

"அடக்கூத்துவனே... உனக்கும் கண்ணு அவிஞ்சு போச்சா? ஈவு இரக்கமில்லாம மனசு காய்ஞ்சு போச்சா? எம்புள்ளைக்கா இந்தக் கோலம் பண்ணி, கூத்துக் கட்டணும்?"

அம்மாவின் கண்ணீர். அதன் வெதுவெதுப்பு. அதிலிருந்த பாச உணர்வு. கருணை. மனநெகிழ்வு. எல்லாமே பூர்ணத்துக்குள் இதம் பரப்பிய ஞாபகம். மயிலிறகால் வருடின மென்சுகப் பரவல்.

அந்த அன்புப் பேருரு... குடிகார வன்முறையால் தாக்குண்டு சிதைந்து, நொறுங்கி, நைந்து, மாண்டு மடிந்தது.

குடிகார அய்யா... அம்மாவை இழுத்துப் போட்டு அடித்து வதைப்பதைப் பார்த்து இவன் வீறிட்டு அழுதிருக்கிறான்.

ஓங்குகிற கையின் மூர்க்கம். உதைக்கிற காலின் குரூரம். தலைமுடியைக் கொத்தாகப் பற்றி வெடுக் கென்று இழுத்து, நெஞ்சில் உதைக்கிற கொடூரம். அம்மா... மரண ஓலமாகக் கதறுவாள். அவளது அடிவயிற்றிலேயே ஓங்கி ஓங்கி மிதித்து, மிதித்து... மிதித்தே கொன்று தீர்த்த வன்முறை ராட்சஸம்.

வன்முறையின் பயங்கர அசுரத்தை... பதறிச் சாகும் மனசால் ருசித்துத் துடித்ததே... ஒரு கொலைப்பாதகம் தான்.

பயந்தடித்து அலறிப்போய்... வீட்டு மூலையில் பம்மிக்கொண்ட பரிதாபம்.

சாதிக் கலவரம் நடந்த சமயம். ஊர் முழுக்க வன்முறை பயங்கரம். ஜனங்கள் பயத்தில் நனைந்து, நைந்துபோய்க் கிடந்த தருணம்.

"நம்ம பயல்கள்ல நாலு சாய்ஞ்சிருச்சு. குத்தி மலர்த்திட்டாக..."

"எதிர் சைடிலே பதினொண்ணு போட்டுத் தள்ளியாச்சு..."

மனித உயிர்கள் மலினமாகி... வன்முறைக்குப் பலியாகிக் கொண்டிருந்த சமயத்தில், வெட்டுண்டு... ரத்தச் சக்தியான பிரேதமாக அய்யாவைத் தூக்கி வந்தனர்.

நாதியற்றுப் போன பூர்ணம். கடன்காரர்கள் வீட்டைப் பிடுங்கிக் கொள்ள... தவழக்கூட முடியாத சதைக்கூள மாகத் தெருவில் கிடந்த பயங்கரம். அநாதைமை. பிரபஞ்சம் முழுக்க அன்புச் சூன்யவெளி.

விசும்பி விசும்பி அழுத அவனது துயரத்தில், மனித மனஇறுக்கம் தெரிந்தது. ஊரைவிட்டுத் தவழ்ந்தே நகர்ந்தான். மாவட்டத் தலைநகர் வந்தான்.

தீ வெக்கை போன்ற அநாதைமையிலேயே வளர்ந்த பூர்ணம். அவனுக்குப் பிச்சையெடுக்க மனசில்லை. சோறு போட்டது ஓவியம்தான்.

ஊனமானதால் முடங்கியவன், உட்கார்ந்திருந்த இடத்திலேயே—புழுதியில் வரைந்து வரைந்து பழகிய ஓவியம். குரு இல்லாமல், ஊனமே கற்றுத் தந்த கலை.

கைப்பழக்கமான சித்திரம். உடம்பெல்லாம் ஓடவேண்டிய ரத்தமும் எலும்பும் மூளைக்குள் வந்து சேர்ந்துகொண்ட மாதிரியான அசாத்திய கலைத்திறமை. கற்பனையாற்றல். விரல்களுக்குள் வசங்கி, வளைந்து, உயிர் பெற்றெழுந்த உணர்வோவியங்கள்!

வானமே கூரை... பலகையே தரை... ஓவியம் உயிர்.

அன்பில்லாத அனல் சூழல். ஓட்டலுக்குப் போனால் ஏளனம். படுக்க மரத்தடி போனால் அலட்சியம். ஊனத்தைப் பார்த்து முகம் சுளித்த மூர்க்கம். அசூயைப்பட்ட ராட்சஸம். வசவுகள். அடிகள். கோபம். ஆத்திரம். அவ மதிப்புகள். 'போடா... போடா... போடா...' எனும் துரத்தல்கள்.

மனசே மரத்துப் போயிற்று. காயம்பட்டு, காயம்பட்டு... தழும்பாயிற்று.

அன்பேயில்லாமல் பூமியில் வாழ முடியுமா? ஈரமேயில்லாமல் மனித நெஞ்சு துடிக்க முடியுமா?

பூர்ணத்துக்குள் அருஞ்சுனையாக ஊற்றெடுக்கிற அன்புச்சுனை. அவனுக்குக் கிட்டாமலேயே போய்விட்ட அன்பைத்தான், அவனுள் நிரப்பி வைத்திருக்கிறான். ஓவியங்கள் மூலம் அள்ளி வழங்க, அவனிடம் அன்பு மட்டுமே பெருக்கெடுக்கிறது. வன்முறைக்கெதிரான வாழ்க்கைமுறையாக... அன்பு!

சாந்தம், புன்னகை, கருணை, பாசம் — இவையே இவனது ஓவியங்களின் மொழி.

ராமர் ஓவியம் வரையணும் என்று ஆழ்மனப்பட்சி கூவியதற்குக்கூடக் காரணமே—'ராமர் அன்பின் வடிவம்' என்ற இவனது படிமம்தான்.

பூர்ணம், ராமாயணம் படித்ததில்லை. எல்லாம் கேள்வி ஞானம்தான். கேட்டறிந்த ராமாயணமே, ராமகாவியமல்ல—அன்பின் காவியம்!

ராமன் என்பதே அன்பின் பேருரு. அன்பின் பன்முகங்களை மலரச் செய்தவன்.

சாதியைப் பார்க்காத—இனபேதம் பார்க்காத—மொழி வித்தியாசம் பொருட்படுத்தாத—மதபேதம் நோக்காத... பிரபஞ்சப் பேரன்பு. மனிதனை மனிதனாக மட்டுமே நேசித்த மானுடப் பேரன்பு.

பேரன்புப் பேரழகான ராமனையும் வன்முறைக்கான ஆயுதமாக்க முடியுமா? மதப்பகைமைக்குரிய காரணமாக்க முடியுமா?

முடிந்திருக்கிறதே! ஜனநாயகத்தின் அடையாளமான தேர்தலே, வன்முறை அராஜகமாகிவிட வில்லையா? அப்படித்தான் இதுவும்...

பூர்ணத்துக்குள் சிந்தனைத் தீவிரம்.

ராமர் ஏறக்குறைய வந்துவிட்டார். இன்னும் வலதுகைதான் பாக்கி. வலது கையில் அம்பு ஏந்திய நிலையில் வரைந்துவிட்டால்... ராமர், பரிபூர்ணம்.

இதில்தான் பூர்ணத்தின் மனசுக்குள் திணறல். குறுக்கும் நெடுக்குமாக வெட்டிப் பாய்கிற நினைவுகள்.

'வில்லெடுத்திருக்கிற ராமன் அம்பு ஏந்த வேண்டாமா?'

'சாந்தப் புன்னகை செய்கிற ராமன், ஆயுதம் ஏந்திப் பகை வளர்ப்பானா?'

இன்றைய உலகின் நோயே... வன்முறைத் தீ தான். மருந்து? அன்பு நீர்தான். சமாதானத் தென்றல்தான்.

பூர்ணம் ஒரு முடிவுக்கு வந்தவனாக, வரையத் துவங்கினான்.

'ராமரின் வலது கையில் வெண்புறாவை வரைவது' என்று முடிவு செய்திருக்கிறான். அம்பு இருக்கவேண்டிய ராமர் கையில், பூர்ணம் அன்பின் சின்னமான புறாவை வைக்கிறான்.

சமகால வன்முறை நோய்க்கெதிரான இவனது ஓவியப் போர் இது. வில்லேந்திய ராமர் வலது கையில் வெண்புறா!

சலனம் முடிந்து முடிவுக்கு வந்தவுடன், பூர்ணத்திடம் கலைத் தீவிரம். புறச்சூழலைப் பொருட்படுத்தாத மனஈடுபாடு. எதையும்—எந்த இரைச்சலையும் கவனிக்காத மனக்கரைதல். வெளிப்புலன்கள் அடைபட்டு, உள்புலன் கள் மட்டுமே உயிர்ப்புற்றிருக்கிற ஓவியத் தீவிரம்.

வலதுகையைப் படைக்க சாக்பீஸை எடுத்தான்.

அப்போது—

அந்தத் தெருவில் பெரும் கலவரம், தேர்தல் அராஜகம். தாக்குதலுக்குப் போயிருந்த ஆயுதக் கும்பல், இன்னொரு ஆயுதக் கும்பலால் தாக்குண்டு... தாக்குப் பிடிக்க முடியாமல் உயிர் தப்பிக்கிற வெறியில் பின்வாங்கி வருகிற வேகம்... பெரும் கூச்சல், களேபரம்.

முன்னேறித் தாக்குகிற ஆயுதக் கும்பலின் வெறித்தனம். மூர்க்கம்... ராட்சஸமும் ரத்தப்பெருக்கும் மரண ஓலமுமாக... தெருவே ரணகளம்.

வாகனங்கள் பதறியோட... மனிதர்கள் சிதறியோட... சாலையே வெறிச்சோடியிருந்தது. உருட்டுக் கட்டை களின் பேய் ராஜ்யம்.

எதையும் கவனிக்காமல்... கலைத் தீவிரத்தோடு... வன்முறைக்கு எதிரான அன்புப் புறாவை ஏந்துகிற ராமரின் வலது கையைச் சிருஷ்டிக்கும் பணியில் பூர்ணம் ஈடுபட்டிருந்த கணத்தில்—

உயிர் தப்பிக்கிற வெறியில் பின்வாங்கி ஓடிய மூர்க்கன் ஒருவன், பூர்ணத்தை இடறினான்.

பலகையிலிருந்து உதைபட்டுத் தள்ளி விழுந்த பூர்ணத்தின் நெஞ்சில் ஒரு பாதம் ஏறி இறங்க... ஓர் உருட்டுக் கட்டையின் அடி, அவன் முகத்தின் குறுக்காக விழ...

எல்லாமே ஒரே கணம்தான்!

துரத்தப்பட்ட கும்பலும் துரத்திய கும்பலும் தெருவைக் கடந்தோட... மறுபடியும் வெறுமையான சாலையில்—

பூர்ணத்தின் பிரேதம் மட்டும்தான்!

ராமரைப் படைத்த வலதுகை சிதிலமடையாமல்—ஊனமாகாமல்—நீண்டு கிடக்க, ராமர் கையில்லாத நிலையில், அவனைப் போலவே படுத்துக் கிடந்தார், சாந்தப் பேரொளியுடன்.

சாந்தப் பேரொளி எழுமா? பூர்ணப்பட்ட வலது கையில் புறாவுடன் ராமர் உயிர் பெற்று எழுவாரா? உலகம் முழுவதும் சமாதானத்தால் நிரப்புவாரா?

*குப்பைத் தொட்டியில் தெருக்கழிவுகளை நக்கிக் கொண்டிருந்த தெருநாய், ரத்த வாசத்தில் மோப்பம் பிடித்து வந்தது. பூர்ணம் வாயிலிருந்து ரத்தம் வழிந்தது. நெருங்கி வந்த நாய் நுகர்ந்தது, பயத்துடன்.*

*பூர்ணம் ரத்தத்தில், அன்பின் வாசமே வீச... நாய் நக்காமல் விலகியது!*

*அந்த விலகலில்... 'அன்பு ராமர் எழுவார்' என்ற நம்பிக்கை, காலத்தின் புன்னகையாக ஒளி வீசியது.*

**–ஆனந்தவிகடன் 1–12–2002.**

ரூ. 5,000 பரிசு பெற்ற
முத்திரைச் சிறுகதை

# கடைசிப் பால்

'அம்மாவுக்கு இன்னும் ஒரு சாவு வந்து சேரல்லியே!' என்று மனசுக்குள் மருகித் தவித்தான் சண்முகம். பார்க்கப் பார்க்கக் கிடந்து வேகிறது மனசு.

ரொம்பக் கெழடாயிட்டாள் அம்மா. பழுத்த பழம் காய்ந்து நெத்தாகிப் போன மாதிரி... அம்மா. உதிர வேண்டிய பருவம் தாண்டியும் உதிராமல், உயிரே ஒரு சுமையாகக் கிடந்து அழுந்துகிற அம்மா.

தேன்தான் அம்மா. மூணுபடியா குடிச்சிர முடியும்? தெய்வந்தான் அம்மா. பொழுதுக்கும் கட்டிக்கிட்டு மாரடிக்கவா முடியும்? தங்க ஊசிதான். கண்ணுக்குள்ளா செருகிக்கொள்ள முடியம்? வேப்பமரம்தான். இரண்டு வொயருக்குக் குறுக்கே நின்னா, வெட்டித்தானே ஆகணும்? விதியாலே வெட்ட முடியலியே. கூத்துவ னாலே அம்மா ஒலையைக் கிழிக்க முடியலியே. கிடந்து தேவானைகிட்டே சீரழியுறாளே... குடும்பத்தைச் சீரழிக் கிறாளே... என்ன செய்ய?

சண்முகம் நனைந்த கந்தலாக நைந்து போகிறான். உள்ளுக்குள்ளேயே மருகி மருகி நொந்து போகிறான்.

வீட்டு மூலையில் கிடக்கிற காய்ந்த சவுண்டல் கொழை. வெளியே முற்றத்தில் கட்டிக் கிடக்கும் ஆடு குட்டிகளுக்குக் கட்டித் தொங்கவிட வேண்டும். ஆலாய் பறக்கிறதுகள். ஆட்டின் கண் பூராவும் வீட்டுக்குள்தான். அசைபோடும் கறுநாக்கு, ஏதாச்சும் வராதா என்ற ஏக்கம் அதன் கண்ணில்.

காய்ந்த கொழையில் பூச்சிபுழு எதுவாச்சும் இருக்குமோ என்ற நினைவில்லாமலேயே... அடித்து உதறிக் கொள்ளுகிறான், அனிச்சைச் செயலாக.

வாசல்படிக்கு வருகிறான். வாசலின் இருபுறத்திலும் முன்பக்கத்தில் ஓட்டுச் சாய்ப்பு. திண்ணை. வலதுபக்கத் திண்ணை பூராவும் அம்மாவின் ராஜ்யம்.

அழுக்குத் துணிகளின் அசிங்கக் கோலம். சாப்பிட்டுக் காய்ந்த, கழுவாத வட்டில். உலர்ந்த டீக்கறையுள்ள கிளாஸ்கள். மொய்க்கிற ஈக்களின் அருவருப்பான ரீங்காரம். தாறுமாறான எண்ணெய்ப் பிசுக்கான அழுக்குத் துணிப் பொட்டலம். சுற்றிலும் வெத்தலை எச்சில் கறைகள். பொடிமட்டை.

நடுவில் ரெண்டு காலையும் நீட்டி அம்மா. செவியே கண்ணாகிப் போன முகத் தீவிரம். மகன் வாடையை உணர்கிற செவி. ஆழ்மனக்கண். மனசின் அலை பாய்வு.

"ஏலேய்... ராசா... செல்லம்... அய்யா... கண்ணு... சம்முகமா, லே?"

குழைந்து கனிந்த செல்லக் கொஞ்சலான கேள்வி. ஆடும்தாடை. மெல்வதைப் போல வெறுமனே அசைகிற வாய். நரைத்த இமை ரோமங்கள். கண்ணாடிச் சில்லாக

மங்கிப்போன கண்கள். தொங்கிப் போன கன்னச் சதை. நனைந்த ஈரத்துணியாகத் துவண்டு நனைந்துபோன சதையில்லாத தொலி. வாழ்ந்த நாட்களின் எண்ணிக் கையைப் போல, அடர்த்தியான சுருக்கங்கள். ஈரச்சணலாகத் தொங்குகிற பாம்படமில்லாத செவித் தொட்டில்.

'பாவம்... நம்ம அம்மா. கவனிப்பார் இல்லாம காய்ஞ்சு நாறிப் போய்க் கிடக்குறா. சாவுதான் அவளுக்கு விமோசனம்.'

வருத்தத்துடன் முணுமுணுக்கிறான். படியிறங் கினான். சாணிப்பால் தெளித்த வெளிமுற்றம். முற்றத்தின் மூலையில், தூணும் நாலு ஓலையுமாக ஒரு வெயில் மறைப்பு. அதில் ரெண்டு குட்டிகளுடன் ஒரு வெள்ளாடு.

கொழையைக் கட்டித் தொங்கவிட்டான். ஆவல் பறப்பில் ஆடு கொழையை 'அவக் தொவக்'கென்று கடிக்கிறது.

"ஏலேய்... அய்யா சம்முகம்."

அம்மாவின் காது ஆட்டின் திசையில்... மகனின் காலடிச் சத்தத்தை பின்தொடர்கிற தாய் மனசு.

"என்னம்மா?"

"வாய் 'நம நம'ங்குதுடா. திங்குதுக்கு என்னமாச்சும் குடுடா."

"சின்னப்பாப்பவா? தீம்பண்டம் கேக்கே?"

"ரெண்டு காரச்சேவு வாங்கிட்டு வாடா..."

“துட்டுக்கு நா எங்க போக? வீட்லே காய்க்குதா?”

“வெத்தலையாச்சும் வாங்கிக் குடுடா?”

“கையிலே துட்டு இல்லேங்குறேன் இல்லே?”

“ஏலேய், பெத்த தாய்டா. பட்டினியும் பசியுமா கெடந்து, ஒம் மொகம் வாடாம வளர்த்த அம்மாடா. தவிக்கவுடாதேடா.”

“நீதான் சாகாமக் கெடந்து, எங்களைப் பாடாய்ப் படுத்துறே?”

“நா எதுக்குடா சாகணும்? ஒம் பொண்டாட்டி சம்பாத்தியத்திலா இருக்கேன்? அவளோட ஆத்தா அப்பன் அள்ளிவிட்ட சீதனத்திலா உசுரு வாழ்றேன்? ஏஞ் சொத்துடா. எம் புருஷனும் நானும் சதையைச் சாறாக்கி கட்டுன வூடு. ரவ்வுன்னும் பாராம, பகல்னும் பாராம பாடுபட்டு வேர்வை சிந்தி வாங்குன புஞ்சை. எம் புருஷன் சம்பாத்தியம். நா இருக்கேன். இருப் பேண்டா. பாத்தியதை இருக்குடா. நா எதுக்குச் சாக ணும்டா? சொல்றா... சம்முகம்.”

“சாகாம கெடந்து எங்களைக் கொல்லு.”

“என்னைக் கொண்ணாந்து கிழிஞ்ச துணியா வெளியே தள்ளிட்டே. மூலையிலே மொடங்கிக் கெடக்கேன். நாங் கெடந்தா... ஒனக்கென்ன வந்துச்சு? ஒம் மடியிலா உக்காந்துருக்கேன்? நீ பேசலேடா, ஒம் பொண்டாட்டி ஒன்னை இப்படிப் பேச வைக்கிறா.”

உள்வீட்டுக்குள்ளிருந்து ஒரு கோபக் குரல். தேவானையின் ஆங்காரமும் ஆத்திரமுமான மனச்சீறல்.

“எந்தக் கெழட்டு நாயாச்சும் எங்க ஆத்தா பேச்சை எடுத்தா... சரிப்பட்டு வராது. ‘கிழிகிழி’னு கிழிச்சு, கேப்பை நாத்தை ஊனிருவேன். ஆமா.”

“கெழட்டு நாயா? நானாடி? அடியே, நேத்து மொளைச்ச சின்னச்சிறுக்கி, நீயும் நாளைக்குக் கெழடி தானே? காலம் பூராவும் கல்லு மாதிரியா நின்னுருவியா?”

“நா... கல்லா இருக்கனோ... மண்ணாய்ப் போறேனோ? என்னை என்னத்துக்கு வம்புக்கு இழுக்கணும்? ‘சிறுக்கி, கிறுக்கி’னு என்னத்துக்கு வையணும்?”

“அம்மான்னா... அம்புட்டுப் பாசமாக் கெடந்த எம்புள்ளே சம்முகத்தை, ஏங்கிட்டேயிருந்து புடுங்கிக் கிட்டீயேடி பாதகத்தி. ஆசையோட தொட வர்ற புருஷன்கிட்ட அழுது மூக்கைச்சிந்தி, சிரிச்சுப் பசப்பி, சிங்காரிச்சுக் குலுக்கி அவனைச் சீரழிச்சுட்டீயேடீ. வளைச்சுப் போட்டுக்கிட்டீயே, கைக்குள்ளே. ஆத்தாளுக்குப் புள்ளையை ஆகாத நஞ்சாக்கிட்டீயேடி. எங்குலை கெடந்து கொதிக்குது.”

“கொதிச்சா... போய் கொழம்பு வை. கொழுத்த சிறுக்கி.”

“கேலியா பண்ணுதே? கிழிச்சிருவேண்டி வாயை.”

“கிழிச்சிருவியோ... வெளக்குமாறு பிய்ஞ்சுபோகும். பிய்ஞ்சு.”

சண்முகம் நடுமுற்றத்தில் நின்றான். எதுவும் செய்ய இயலவில்லை. இரு பக்கமும் பரிவு ததும்ப, ஒரு பக்கமும் சாயாமல் நின்றான்.

*தேவானையின் காட்டுக் கூப்பாடு. வரம்பு மீறிய கோபக் கூச்சல். கொதித்த மனசின் கொந்தளிப்பு.*

*அம்மாவுக்கும் ஆற்றாமை. நொந்த மனசின் சீற்றம். அவமதிக்கப்பட்ட ஆன்மாவின் புண்ணாகிப் போன உணர்வுச் சீழ்.*

*ஆணின் நிழலைப் பங்கு போட்டுக்கொள்கிற அவலப் போட்டி. பொறாமை. சொந்த வேரில்லாத பெண்கள். ஆணின் ஆதரவைப் பற்றுகிற—ஆக்கிரமிக்கிற—வேகத்தில் வருகிற அற்பச் சண்டைகள். காலம் காலமான மருமகள்—மாமியார் யுத்தம். வந்தவள் வலுக்கிற யத்தனிப்பு. இழக்கிறோமே என்கிற அம்மாவின் பதைப்பு.*

*பரிதாபத்துக்குரிய இரு ஜீவன்கள். அருவருக்கிற அற்பச் சண்டையாக நாறுகிற இரு உறவுகள்.*

*யாரைச் சத்தம் போட? எப்படிச் சத்தம் போட? என்ன சொல்லிக் கண்டிக்க?*

*நொந்து நூலாகிப் போகிற சண்முகம். உள்ளுக்குள் உயிர் வற்றிப்போன மனச்சோர்வு. நொறுங்கி நொய்த் தவிப்போகிற அயற்சி. துவண்டு சரிந்து கிடக்கிற மன உணர்வு.*

*உயிர் நைந்து, துவண்ட குரலில் இரங்குகிற கெஞ்சலுடன், "யம்ம்ம்...மா..." என்றான். நொறுங்கி நொந்த குரல்.*

*குரலின் உள்முகத் தொனி. அதில் இருந்து கசிந்த வேதனை ரத்தம். வலியின் ரத்த வெதுவெதுப்பு. மகனின் மன நொறுங்கலில் அதிர்ந்துபோகிற அம்மா. துடி துடித்துப் போகிற தாய் நெஞ்சு.*

“என்னய்யா... ராசா? இனுமே அம்மா பேசலையா. வாயைத் தொறந்து ஒரு வார்த்தைகூடப் பேசலையா. நீ நல்லாயிருக்கணும்யா. நிம்மதியா இருக்கணும்யா. என் உசுர்லே வேரூனி நிமிந்த பயிர்யா நீ. நீ பச்சைப் பசப்போட இருக்கணும்யா?”

குழைந்த சுருதியில் தாழ்ந்து போகிற அம்மாவின் குரல். மகன் இருக்கும் திசைக்குச் செவியை நகர்த்துகிற அம்மா. மகனுக்காகத் தன்னையே சரணடையச் செய்கிற அம்மா. ஒரு மழலையைப் போல பாசமடிக்குள் முகம் புதைக்கிற அந்தப் பெருந்தன்மை.

மருமகள் திசைக்குச் செவியை நகர்த்துகிறாள்.

“எம்மா... தேவானே... எம் மருமவளே, ஏஞ் சீமாட்டி. என்னை வேணும்னாலும் வைஞ்சுக்கோ. எம் புள்ளையை நிம்மதியா இருக்க விடம்மா. நல்லா இருப்பே தாயீ.”

அப்ப சபித்த அம்மா, இப்ப கெஞ்சுகிறாள். பணிகிறாள். குழைகிறாள். வாழ்த்திக் கனிகிறாள். பாசக்கயிற்றில் ஆடுகிற பம்பர அம்மா. மனக் கொதிப்பையே—மானச் சீற்றத்தையே—மகனுக்காக நழுவ விடுகிற அம்மா. மருமகளிடமே சரணடைகிறாள்.

அம்மா... அம்மா... அம்மா...

சண்முகத்துக்குள் ஏகப்பட்ட அம்மா. பூப்பூவான அம்மா.

ஆடி, தீபாவளி பண்டிகைகள். ஊரே தோசையும், பலகாரமுமாக மணக்கும். கறி திங்கப் போகிற திளைப்பில் இளவட்டங்கள். புதுசு உடுத்தப் போகிற கனவின் துள்ளலில் சிறிசுகள்.

ஏதுக்கும் வழியற்றுப் போய் ஏங்கிக் கிடக்கிற தன்னையும் தங்கச்சியையும் கட்டித் தழுவிப் பரித விப்போடு அழுது கரைந்த அம்மா. "ஏம் புள்ளைகளுக்கா இந்தக் கதி? வாய்க்கு ருசியா ஏதுமில்லாம நாக்குச் செத்துக் கிடக்குதுகளே... ஐயோ பாதரவே..."

கதறிக் கசிந்த அம்மா. தலைவிரிகோலமாக அலைபாய்கிற பாசமனசு.

இதுமாதிரி பாசக்குழைவான அம்மா, நிறைய்ய. அன்புத் ததும்பலான அம்மா ஏராளம்.

அம்மா இப்ப... அந்த மாதிரி அம்மாவாக இல்லை. கிழடியாகி விட்டாள். உடையாத நெற்று மாதிரி, உதிராமல் இருக்கிற பழம். கிழடாகி விட்டாலே... சிறுபிள்ளையாகி விடுகிற சுபாவம். சின்னக்குழந்தை மாதிரி 'சட்சட்'டென்று அயத்துப் போகிறது அம்மாவுக்கு. எல்லாமே மறந்து போகிறது.

பாசமும்தான். வந்த சமாதானமும்தான். குழைவும் பணிவும் மறந்து போகிறது.

நெதம் நெதம் சண்டைக்காடு. தாங்க முடியவில்லை. தேவானையாலும் பொறுத்துப் போக முடியவில்லை. வீடே வசவுகளால் நிரம்பிப் பொங்கி வழிவதைப் போல, ஒரு பிரமை. வீடெல்லாம் பரவிக் கிடக்கிற கோப வெக்கை. சீற்றமும், குமுறலும் சாபங்களும் காற்றாக வீட்டுக்குள் மண்டி மண்டி வட்டமடிக்கின்றன.

தேவானை சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. பிள்ளைகளை முன்னிட்டே பேசுகிறாள்.

"சாகவேண்டிய சாவு பிந்திப் போச்சுன்னா... வாழ வேண்டிய பிள்ளைகளுக்கு என்னமும் கேடாகிப் போகு மோன்னு பதறி வருது" என்கிறாள்.

"வீடெல்லாம் அசிங்கமாக்குது. எச்சிலும் ஈயுமா, அழுக்கும் நாத்தமுமா வீடே நாறுது, உங்கம்மாவாலே. புள்ளைகளுக்கு நோக்காடு வருமோன்னு பதறி வருது" என்று அங்கலாய்க்கிறாள்.

அங்கலாய்ப்பு பொறுக்கமாட்டாமல்தான், அம்மாவை வீட்டைவிட்டு வெளியேற்றி... வெளித் திண்ணையில் போட்டது. இன்னும் புலம்புகிறாள் தேவானை.

"உங்கம்மா நம்ம காலைச் சுத்தியிருக்குற பாம்பு. காலைச் சுத்துன பாம்பு கடிக்காம வுடாது. பாம்பு சாகாமக் கெடக்கும், பாருங்க" என்று கொதிக்கிறாள்.

"நம்ம புள்ளைக்கு என்னமும் ஆச்சுன்னா... நா உசுர் வைச்சு இருக்க மாட்டேன்... இது சத்தியம்" என்று வெறிபிடித்தவள் போல கத்துகிறாள்.

அடிவயிற்றுக்குள் ஒரு பிசைவு. குலை பதறி வருகிறது. தேவானை சொல்லுகிற சொற்கள். நச்சரிப்புகள். சண்டை சச்சரவுகளின் மூர்க்கத்தில் தெறிக்கிற கங்கு வார்த்தைகள்.

'தேவானைகிட்டே அம்மா கெடந்து சீப்படுறா. அம்மா கெடக்குறதாலே... வீட்டுக்கே அபசகுனமாயிருமோ...'

சண்முகத்துக்குள் பயப்பரவல். அடிமனப் பதற்றம்.

'அம்மாவுக்கு ஒரு சாவு வந்துட்டா... நல்லதே...!' மனசுக்குள் தோன்றுகிற எளிதான தீர்வு.

'சாவு வரல்லியே... அம்மாவோட ஓலையைக் கூத்துவன் கிழிக்கலியே... ஒலக்கையாலே தலையிலே எழுதிட்டான் போலிருக்கு."

சண்முகத்துக்குள் சங்கடமாக இருக்கிறது.

இப்படியே நாள் நீடிக்க முடியாது. விட்டால், விபரீதம் ஆகிவிடும். ஏதாச்சும் செய்யணும். செய்து தடுக்கணும். எப்படி? என்ன வழி? யார் வாயை அடைக்க? யாரை யாரிடமிருந்து பிரிக்க? என்ன வகையில் பிரிக்க?

கழுத்தாம்பிடியாக இருக்கிறது. நினைவின் மூச்சுத் திணறல். அவனைப் பற்றி உலுக்குகிற கேள்விகள். இருட்டுக்குள் தள்ளி மிதித்து அமுக்குகிற கேள்விகள்.

நிராசையும் கையறு நிலையும் திகைப்புமாகத் தவித்தபோது, தங்கச்சி சுப்புத்தாய் ஞாபகத்துக்கு வந்தாள். தாக்கல் கொடுத்து வரவழைத்தான்.

"யம்மா, மயினிக்கும் ஒனக்கும் ஒத்து வரலை. ஒன்னோட அருமை, மயினிக்கு என்ன தெரியப் போகுது? பேசாம... ஏங்கூட வந்துரு. ராணி மாதிரி வைச்சுச் சீராட்டுதேன்மா."

நைச்சியமாகப் பேசினாள் சுப்புத்தாய். கைஜாடையும், கனிந்த முகபாவமுமாகக் குழைவாகப் பேசினாள்.

அம்மா சிடுசிடுத்தாள்.

"வாக்கப்பட்டுப் போனவ, நீ. வந்தீயா, இருந்தீயா, போனீயான்னு இருக்கணும். என்னயெல்லாம் என்னத்துக்குக் கூப்புடுதே? இந்த வீட்லே ஒனக்கென்ன நாட்டாமை?"

"இல்லேம்மா... நீ ஏங்கூட வந்துரும்மா, எங்க வூட்டுக்கு."

"என்னத்துக்கு? எம் புருஷன் சம்பாத்தியத்தை வுட்டுட்டு எதுக்கு வரணும்? உங்க மாமா—மாமியா சம்பாத்தியத்துலே தின்னு, நா கேவலப்படணும்னு தலையெழுத்தா?"

சண்முகத்துக்குக் கசந்து வந்தது. கோபம் கோபமாக வந்தது.

"இந்தா, ஒம் புருஷன் சம்பாத்தியம்" என்று வீசியெறிந்து விடலாமா என்று வருகிற வெறி. முடியாதே! இந்த வீட்டை விட்டுவிட முடியுமா? வீட்டுக்குச் சோறு போடுகிற காட்டை விட்டுவிட முடியுமா?

அம்மாவுக்குப் பிடிவாதம் ஜாஸ்தி. ஒரேயடியாக வர மறுத்து சாதித்துவிட்டாள். சண்டாளமாகக் கத்தினாள். அழுது எரிந்தாள்.

"புருஷன் சம்பாத்தியம். நாங்க உசுர் கரைஞ்சு இருந்த வீடு. இந்த வீட்லேதான் ஏங்கட்டை கெடக்கும். எம் புருஷன் உசுரு போன இந்த வீட்லேதான் என்னோட உசுரும் போகணும். இந்த வீட்லேயிருந்து தான் ஏங்கட்டை தேர்லே போகும்."

சுப்புத்தாய் அண்ணனைப் பார்த்தாள். இயலாமையில் தளர்ந்த பார்வை. "நா என்ன செய்ய அண்ணாச்சி? சொல்லிப் பாத்துட்டேன். கெஞ்சிப் பாத்துட்டேன். வரமாட்டேன்னு எரிஞ்சு வுழுற நம்ம அம்மாவை என்ன செய்ய?"

சுப்புத்தாய் ஊர் போய்ச் சேர, ஆயாசத்தில் சண்முகம்.

தேவானை சோறு தண்ணி தர மறுத்துவிட்டாள். அவளுக்குள் வன்மம். தீராக் கோபம்.

இவன்தான் அம்மாவுக்கு வட்டில் கழுவி, சோத்தைப் போட்டு, அழுக்குச் சீலைகளை அலசி... அம்மாவை அலசி...

அப்புறம், ஒரு மாசமாயிற்று.

ஒருநாள்—

அம்மா திண்ணையிலேயே மலஜலம் இருந்து விட்டாள். இருந்து கிடந்த மலத்தையும் ரெண்டு கைகளால் உழப்பி, நாசக்காடு நாற்றக்காடு பண்ணித் தொலைத்து விட்டாள்.

பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தேவானை கிளம்பி விட்டாள், வெகுண்டு. பத்ரகாளியாக நின்றாள்.

"நீ எங்க போற?"

"எங்கம்மா வீட்டுக்கு. இந்தக் கெழட்டு முண்டம் வீட்டையே சாக்கடையாக்கிரும். எம் புள்ளைகளுக்கு நோய் நொடி வரும்."

"அதுக்கு?"

"சாகப்போற கெழடியாலே சின்னஞ்சிறுசுக சாகணுமா? நா வுடமாட்டேன்."

கோபமும் அழுகைக் கதறலுமாகக் கொந்தளித்த தேவானையின் பயம், இவனுக்குள்ளும் படர்கிறது. அவளது பதற்றம், பதைப்பு எல்லாம் இவன் மனசின் உணர்வுகளாகி...

"நம்ம காலைச் சுத்துன பாம்பு, உங்க அம்மா. நம்மளைக் கடிக்காம வுடாது" நூறு தடவை தேவானை

சொல்வதை, இப்போதும் சொல்கிறாள். இவன் மனசிலும் அதே சொற்கள்.

“பொறு பொறு! சுப்புத்தாயை வரச் சொல்லி... வண்டிமாட்டைப் போட்டு, அம்மாவை அதுலே அள்ளிப் போட்டுக் கொண்டு போய்ச் சேத்துருவம்.”

“உங்கய்யா சம்பாத்தியத்தை வுட்டுட்டுப் போகச் சம்மதிக்குமாக்கும்?”

“சம்மதம் என்னத்துக்கு? அள்ளிப் போட்டு, கொண்டு போய் கொட்டிருவம், குப்பை மாதிரி.”

‘பிள்ளைகளுக்கு .நோக்காடு வந்துருமோ’ என்ற பயப்பதைப்பில் தகப்பன் மனசு தவித்தது. சண்முகத் தினுள் அம்மாவின் அருமைகள் பற்றிய நினைவுத் ததும்பலெல்லாம் உலர்ந்து, உதிர்ந்து... வெடிப்புகளும், பிளவுகளுமாக வெறுப்பில் வறண்டது.

சுப்புத்தாய் வந்தாள்.

அம்மா அனத்த ஆரம்பித்துவிட்டாள்.

“எம் புருஷன் சம்பாத்தியம். எம் புருஷன் உசுரு சுத்துற வூடு. எம் புருஷன் நெனைப்பு புழங்குற வூடு. இதை வுட்டுட்டு நா போகவேமாட்டேன். செத்தாலும் நகரமாட்டேன்” என்று அழுது அரற்றுகிற அம்மா. ஒப்பாரி வைத்து ஊரைக் கூட்டுகிற அம்மா. “சம்முகம்... சம்முகம்” என்று தாய்க்கோழியாகத் தவித்துக் கூப்பாடு போடுகிற அம்மா. கேட்கிற நெஞ்சு இளகிக் கரைகிற மாதிரியான ஈனஸ்வரக் குரல். தாயைப் பிரிய மறுத்து அடம்பிடிக்கிற குழந்தை மாதிரி... அழுது கரைகிறாள். கலங்கிக் கண்ணீர் சொரிகிறாள்.

இளகும் மனசை இறுக்கிக் கொண்டான் சண்முகம். கலங்கித் தகரும் மனத்தரையை கல்லாக்கிக் கொண்டான். மாட்டுவண்டியில் அள்ளிப் போட்ட உயிருள்ள குப்பை யாக அம்மாவின் பயணம். மாட்டுவண்டி தெருவைக் கடந்தது.

'புருஷன் உலவுன வீட்லே உசுரு போகணுமே' என்கிற தவிப்போடும் துடிப்போடும் அம்மாவின் ஆத்மக் கதறல், தெருவைக் கடக்காமல் அங்கேயே உலவியது.

சண்முகத்தின் மனசுக்குள் அந்தக் கதறல், பெருங் கூப்பாடாக ஓங்காரமிடுகிறது.

ரெண்டாவது மாசமே அம்மா மண்டையைப் போட்டுவிட்டாள். ஓலை கிழிந்தது.

தன் வீட்டில் நடக்கவேண்டிய சொந்த இழவு. சொந்த வீட்டின் சுவர்களுக்கிடையில் பிரிந்திருக்க வேண்டிய உயிர். உரிமையில்லாத வீட்டில் கிடந்து உயிர் பிரிந்திருக் கிறது.

அம்மாவுக்கு இந்தக் கதி வரணுமா என்ற மனக்குமைச் சலும் வெட்க உணர்வுமாக இழவுக்குப் புறப்பட்டான்.

சம்பந்தக்காரர்கள் (சுப்புத்தாய் வாழ்க்கைப்பட்ட வீடு) வீட்டு முற்றத்தில் கால்வைக்க மனசு கிடந்து கூசியது, சண்முகத்துக்கு.

வெட்கத்தில் குன்றிக் கூசினான். இழவுக்கு வந்திருந்த பங்காளிகள் முகங்களைப் பார்க்கத் துணிவில்லாமல் தத்தளித்தான்.

கூச்சஉணர்வு கொத்திப் பிடுங்க, இழவுக் காரியமெல் லாம் முடிந்தது. கொள்ளி வைத்த சண்முகத்துக்கு மொட்டை போட்டார்கள்.

மொட்டைத் தலையை சோகத்துடன் தடவினான். அம்மாவைப் பற்றிய பழைய நினைவுகளின் நெகிழ்வுகள். கடைசிக்காலத்து அம்மாவின் இச்சிலாத்தி பற்றிய கசப்பு உணர்வு.

நானாவித நினைப்புகளும் குறுக்கும் நெடுக்குமாக நடமாடிற்று.

மூன்றாம் நாளே கருமாந்திரமும் முடித்துவிட்டு... உடுத்திய புதுத்துணிகளோடு புறப்பட யத்தனித்தனர்.

தேவானையும் பிள்ளைகளும் முன்னே சென்றுவிட... சற்றுப் பின்தங்கிய சண்முகம்.

கடைசிக்கால அம்மாவைச் சுமந்து, தனது மான மரியாதை காப்பாற்றிய உடன்பிறப்பு சுப்புத்தாய் கையைப் பிடித்தான் சண்முகம். நெகிழ்ந்த மனசின் கசிவு, கண்ணோரங்களில் பேசியது.

"அண்ணாச்சி, கலங்காதே, நல்ல மனசோட பொறப்புடு."

"உசுரு போறப்ப... அம்மா என்னமாச்சும் சொன் னாளா?"

"சகிக்க முடியாத அனத்தலும் பொலம்பலுமாத்தான் அம்மா உசுரு போச்சு."

"ஏன் சுப்பு?"

"புருஷன் சம்பாத்தியம், புருஷன் சம்பாத்தியம்'னு அம்மா ஓயாமப் பொலம்புனாள்லே?"

"ஆமா."

"அதெல்லாம் நெசமில்லே. மேல்கட்டு. வெளிப் பாவலா."

"பெறகு?"

"என்னைவிட ஒம்மேலே அம்மாவுக்குப் பாசம் ஜாஸ்திதானே?"

"ஆமா."

"நீ, அவளோட அய்யா சாயலாம். கொணமாம். வளர்த்தி, நெறம், கையசைப்பு எல்லாம் அவுக அய்யா வோட அச்சாம், நீ. அதனாலேதாம்... ஒம்மேல கூடுதல் பாசமாம். பொட்டைக் கழுதைகளுக்குத்தான் பொறந்த வீட்டுப்பாசம், கட்டை வேகுற வரைக்கும் கூடவே வருமே?"

"ஆமா..."

"அதனாலே அம்மாவோட அடிமனசுலே ஒரு நெனைப்பு."

"என்ன நெனைப்பு?"

"சாகுறப்ப, ஒம்முகம் பாத்துக்கிட்டுச் சாகணும்'னு அவளுக்கொரு நெனைப்பு. 'ஓங்கையாலே கடைசிப் பாலைக் குடிச்சுட்டுச் சாகணும்'னு அம்மாவுக்கு ஒரு ஆசை."

இவனுக்குள் ஆழத்தில் எங்கோ ஓர் உடைவு. 'குபுகுபு'வென்று ஏதோ பாய்ந்து பிரவாகிக்கிற உணர்வுத் திணறல்.

சண்முகத்தின் கண்ணில் 'மொளுக்'கென்று ஒரு நீர்த்துளி வந்து நின்றது.

"கடைசிப் பாலு வாங்கிக் குடிச்சு, ஒம்முகம் பாத்துக்கிட்டே உசுரை வுடணும்னு நெனைச்ச அம்மா வோட கடைசி ஆசை, கடைசி வரைக்கும் கைகூடலை. அதனாலேதான், அம்புட்டு புலப்பம்... கதறல்... தவிப்பு. சரி, விட்டுத் தள்ளு. அவளுக்குக் கொடுப்பினை அம்புட்டுத்தான்."

சண்முகத்துக்குள் முட்டி மோதிய பாசப்பிரவாகம். அவனை உடைத்துத் தகர்த்துக்கொண்டு 'குபுக்'கென்று பீறிட்டது.

"ஆ... ஹ... ம்ம்ம் மா...ஹ்."

சண்முகத்தின் கதறலான மனவெடிப்பு. "ஐயையோ" என்று ஓங்காரக் கூப்பாடு.

பெருங்குரலெடுத்து வீறிட்ட சண்முகம், பிரவாகப் பெருக்கில் அடித்துச் செல்லப்பட்டு... தாள முடியாத தளர்வோடு, கீழே உட்கார்ந்துவிட்டான். குத்துக்கால் வைத்த நிலையில், அவன் அடித்துக்கொண்டு அழுத அழுகைச் சத்தம்.

"ஐயையோ... அம்மா...ஹ், ஒன்னைத் தவிக்கவிட்ட பாவியாயிட்டேனே."

கதறல் சத்தம் கேட்டு, தேவானையும் பிள்ளைகளும் பதற்ற அதிர்வோடு திரும்பி ஓடிவந்தனர். சுப்புத்தாய் அண்ணாச்சியைப் பரிவோடு பார்த்தாள்.

—ஆனந்தவிகடன் – 21–4–2002

ரூ. 5,000 பரிசு பெற்ற
முத்திரைச் சிறுகதை

# பூ மனசுகள்

எப்ப வந்தாலும் சரி... இந்த வீட்டுப் பக்கம் வந்து, என்னை எட்டிப் பார்க்காமல் போகவே மாட்டார் இப்ராகிம் ராவுத்தர்.

தெருவுக்குள் நுழைந்துவிட்டார் என்பதை அவர் சைக்கிள் முன்கூட்டியே தகவல் சொல்லிவிடும். ஃபுல்கவருக்குள் செயின் இரைகிற வித்தியாசமான சத்தம். பெடல் சுற்றுவதை நிறுத்தியவுடன், ப்ரீவீலின் சங்கீத இரைச்சல.

'ராவுத்தரு வாராரோ?' என்று எண்ணி முடிப் பதற்குள், வீட்டு முற்றத்தில் ஸ்டாண்டைப் போட்டு கிளிப்பைத் தட்டுவார்.

"என்ன... பெருசு!" என்ற உற்சாகமான அழைப்போடு வாசல்படி ஏறுவார்.

திண்ணையின் வலது பக்க முகப்பில் உட்காருவார்.

"என்ன... சொகமா இருக்கீரா... பெருசு?"

குல்லாவை எடுத்து மடியில் வைத்துக் கொள்வார். தோள் துண்டால், உச்சந்தலை வியர்வையைத் துடைப் பார். வீட்டுக்குள் நிழலை ஊடுருவுவார் கண்களால்.

நான் சைக்கிளைப் பார்ப்பேன். கேரியரில் ஜவுளிப் பொட்டலம். கறுப்பும் வெள்ளையுமாகக் கட்டம் போட்ட துணிப் பொட்டலம். ஹாண்டில்பாரில் இரு பக்கமும் தொங்குகிற இரண்டு பெரிய பைகள். அவற்றுக்குள் நெருக்கமாகச் செருகப்பட்டிருக்கிற கட்பீஸ்கள். கலர் துண்டுகள், கைலிகள்.

"என்ன ராவுத்தரே, ஏவாரம் நடக்குதா? ஊருக் குள்ளே நாலு பேராச்சும் துணிமணிக எடுத்தாகளா?"

"ம்ள்ச்சூ! ஏவாரம் முந்தி மாதிரியில்லே. என்னத்தை யோ கெழட்டுமாடு தலையைத் தலையை ஆட்டுற மாதிரி... நானும் சும்மா சும்மா ஊரைச் சுத்துதேன் பெருசு..."

"வெள்ளாமை வெளைச்சல் இல்லாம ஊருசனம் காய்ஞ்சு கெடக்குது. கைக்கும் மெய்க்கும் துட்டு இல்லே. துட்டுப்புழக்கம் இல்லாத சம்சாரிக. துணிமணிக எப்படி எடுப்பாக?"

"ஏவாரம் கம்மிதான் அதுக்காக வராம இருந்துர முடியுமா? வாடிக்கை மாறிரக்கூடாதுல்லே?"

மறுபடியும் வீட்டுக்குள் பார்ப்பார். கழுத்தைச் சாய்த்து உற்றுப் பார்ப்பார். "யாரு... உள்ளே? தங்கச்சி இருக்குதா? தாயீ, ஒரு சொம்புல தண்ணி கொண்டாம்மா..."

இதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். இவரது அந்நியமற்ற தன்மை. விருந்தாளித் தன்மையற்ற ஒட்டுதல். வீட்டாளாகவே ஆகிப்போகிற சௌஜன்யம், பேச்சில், செயலில் எல்லாவற்றிலுமே.

சொம்பை வாங்கி லேசாகச் சாய்த்துவிட்டு, அண்ணாக்கக் குடிப்பார். வாய்க்கு மேலாகச் சொம்பு.

குறுந்தாடியில் விழுகிற தண்ணீர். கட்டை ரோமத்தில் துளித்துளியாக உதிரும்.

"ம்ம்... தங்கச்சி தந்த குளுர்ந்த தண்ணியிலே வகுறு நெறைஞ்சிருச்சு. எல்லாம் அல்லா செயல்" என்று இரு கைகளையும் மேலே உயர்த்தி, நன்றி சொல்லிக் கொள்வார்.

"சரி... பெருசு, ஒமக்குப் புதுக் கைலி ரெண்டு மாட்டிருவமா? வைரச் சங்கு... நல்ல அயிட்டம்."

"கைலியெல்லாம் கெடக்குது."

"துண்டு?"

"கட்டம் போட்ட கைத்தறி இருக்கா?"

"ம்... பசுமார்க். நல்ல முறுக்கு நூல். சாயம் கேரண்டி."

"போறப்ப... ஒண்ணு குடுத்துட்டுப் போங்க."

'துண்டைக் கொடுத்தோம். துட்டை வாங்கினோம்... நடையைக் கட்டினோம்' என்ற பழக்கமே இல்லை. காரியம் முடிந்தால் கையை உதறுகிற காரியார்த்தம் கிடையாது. ஆற அமர உட்கார்ந்திருப்பார். நாலா விஷயங்களும் கேட்பார்.

"ஏவாரத்தைப் பத்தியே பேசிப் பேசி என்னத்தைக் கண்டோம்? துட்டு மட்டும்தானா வாழ்க்கை? மனசுக்கும் ரெண்டு தீனி வேண்டுமே... அதுக்குத்தான் ஒம்மகிட்ட வர்றது..." என்றே சொல்வார். அந்தச் சொல்லே என்னைக் கௌரவிக்கும். மகுடம் சூட்டும்.

"பேப்பர் படிச்சிட்டீரா? டி.வி.யிலே செய்தி பார்த்தீரா? என்ன விசேஷம்? சொல்லும் பெருசு."

யாரிடம் வாயைத் திறந்தாலும், "அனத்தாதீக. பேசாமக் கெடங்க" என்ற பதில்தான் வாயை அடைக்கும். நெஞ்சில் ஒரு கத்திச் செருகலுடன் வாயடைப்பு. முதுமையே ஓர் இடைவெளியாகி தனி உலகமான தன் உலகை, அநாதை உலகமாக்கி கண்ணால் விழுங்கியதை வாயால் கக்க முடியாமல், நெஞ்சுமுட்டி, மூச்சுத் திணற லாகி... ஹ...ப்பாடா! இப்ராகிம் ராவுத்தர் கிடைத்து விட்டார். கொட்டித் தீர்க்கலாம்!

எனக்குள் மடை திறந்துகொண்டது. பொங்கிப் புரண்டு பீறிடுகிற நினைவு வெள்ளம். சிந்தனைப் பிரவாகம். மனசைத் திறந்து கொட்டுவதில்—காட்டுவதில் ஒரு தீவிரம். இன்பப் பரவசம்.

சுகர்ணோ காலத்து இந்தோனேஷியா. தலிபானுக்கு முந்தைய ஆப்கானிஸ்தான். ஜனநாயக ஆட்சி இருந்த நாளில் பெண் கல்வி. மனித உரிமை. அரசியல் உரிமை. மதத்துக்கு மரியாதையான உயரத்தில் ஓர் இடம். நாட்டின் வளர்ச்சி.

ஜனநாயகம் கடைப்பிடிக்க முடியாத சர்வாதிகாரி களின் ஆட்சிகள். சர்வாதிக்காரத்தைக் காப்பாற்ற மதத்துக்கு கூடுதல் இடம். 'மதத்தின் ஆட்சி' என்ற போர்வையில் தனிமனித சர்வாதிகாரம். மனித உரிமை கள் காலி. பெண்கல்வி குளோஸ். நாட்டின் வளர்ச்சி பின்னடைவு. சொந்த நாட்டிலேயே அகதிகளாக மக்கள்.

போரும் சர்வாதிகாரமும் உள்ள தேசங்கள் யாவும் ஜனங்களின் நரகமாகியிருக்கிற நிஜம்.

கடந்துபோகிற நேரம் குறித்து நான் கவனிக்கவில்லை. நிழலில் வைத்திருந்த சைக்கிள் வெயிலாகிவிட்டது.

ராவுத்தர் பொறுமையாகக் கேட்கிறார். இடை இடையே சில ஒப்புதல் வார்த்தைகளைச் சொல்கிறார். மணி மூன்றரை.

ஏழாப்பு பேரனும் ஆறாப்பு பேத்தியும் உல்லாச நதிகளாக ஓடிவந்தனர். எங்களுக்கு இடையில் பாய்ந் தோடப் பார்த்தனர்.

அவர்களுக்காகவே காத்திருந்தவரைப் போல, ராவுத்தர் 'கபக்'கென்று அவர்களைப் பிடித்துக் கொண் டார். வலது கையில் பேத்தி. இடது கையில் பேரன்.

"ஏய்ப் புள்ளைகளா... என்னைத் தெரியலியா?"

சற்றே கூச்சம். சற்றே தயக்கம். மென்சிரிப்போடு 'தெரியும்' என்று தலையசைக்கிற சிறிசுகள். சிறிய அரும்புகள்.

"நல்லாயிருக்கீகளா?"

"ம்..."

"நல்லா படிக்கீகளா?"

"ம்... ம்... ம்..."

"தாத்தாகிட்டே நல்லாப் பேசுவீகளா?"

"ம்... ம்..."

சட்டைப் பைக்குள் கை விடுகிறார். தயாராக வைத்திருந்ததைப் போல, ரெண்டு நாணயம். ஐந்து ரூபாய் நாணயம். ஆளுக்கொன்றாகத் தருகிறார். ராவுத்தர் கண்ணில் ஒரு பிரகாசம். ஈரமின்னல். பாச ஒளிர்வு.

காசை வாங்குகிறபோது, பிள்ளைகள் பூ முகத்தில் ஒரு மகிழ்ச்சி வெளிச்சம். ஒரு கூச்சப் புன்னகை. 'இம்புட்டுத் துட்டா?' என்கிற ஆனந்த வியப்பு.

"தாங்க்ஸ்!" என்று அரைகுறைக் குரலில் கூறிவிட்டு ஓடுகிற பிள்ளைகளையே பார்க்கிற இப்ராகிம். கனிந்த உதட்டில் ஈரப்பிரகாசம் முகத்தில் ஓர் உணர்வுக்குழைவு. கண்ணின் ஓரங்களில் சிறுதுளிகளாக மனசு. அந்தப் பிள்ளைகளையே கண்களால் அள்ளி மனசுக்குள் வைத்துக்கொள்ள யத்தனிக்கிற ஆவல் தீவிரம்.

"பெருசு, நீரு குடுத்து வைச்ச ஆத்மா. எப்பேர்ப்பட்ட பூச்செண்டுக ஒமக்குப் பேரன், பேத்தியா கெடைச்சிருக்கு... அல்லாவோட ரூபங்கள்யா. அப்ப, நா வரட்டா?"

தலையில் தொப்பியைச் சரி பண்ணிக்கொண்டு, சைக்கிள் பெடலில் கால் வைக்கிறார்.

ராவுத்தர் இங்க எதுக்கு வர்றார்? என்னிடம் பேசுறதுக்கா, பேரன் பேத்தியைப் பாக்குறதுக்கா? ரெண்டுக்குமா?

ம்ஹூம்! தாட்சண்யம் பார்க்காமல் உண்மையைத் தேடினால்... இப்ராகிம் வருவது, பிள்ளைகளைப் பார்க்கத் தான்.

பிள்ளைகளைப் பார்த்துக் களிப்பதற்காக, என் பேச்சைக் கேட்கிறார். சகிக்கிறார். அதுதான் நிஜம்.

ராவுத்தருக்குப் பிள்ளைகள் என்றால் உயிர். எல்லா வற்றையும் பிள்ளைகள் வழியாகவே பார்ப்பார். அதிர்வார்.

ஒரிஸாவில் பாதிரியாரும் பாதிரியார் பிள்ளைகளும் தீவைத்துக் கொளுத்தப்பட்டிருந்த கொடூரம் நிகழ்ந்திருந்த சமயம். நாடே கோபப்பட்டுக் கொந்தளித்த மாதிரிதான். இப்ராகிமும் கொதித்தார். அவரது கொதிப்பில்... கூடுதலான சொந்த உணர்வுத் தகிப்பு சுட்டது.

"பாதிரியோட புள்ளைக பச்சைப் புள்ளைக. அந்தப் பூச்செண்டுகளைப் பகைக்குறதுக்கும் பொசுக்குறதுக்கும் ஒரு பாவிக்கு மனசு வருமா? அது மனுச ஜென்மம்தானா? சைத்தான். நாசமாய்ப் போற சைத்தான்!"

அன்றைக்குப் பூராவும் அந்தப் பிள்ளைகளைப் பற்றியே—கருகிக் கிடக்கிற பூக்களைப் பற்றியே—பூக்களைப் பொசுக்கிய சைத்தானைப் பற்றியே அங்கலாய்த்தார் ராவுத்தர்.

நான் அன்றைக்கு 'மதம் வேறு, மதத் தீவிரவாதம் வேறு' என்று விலாவாரியாக—வெறிபிடித்த ஆர்வப் பெருக்காக—வாய் எச்சில் கட்டியாகிற வரைக்கும் பேசிக் கொண்டிருந்தேன், வழக்கம்போல.

அவர் என் பேச்சில் முழுசாக லயிக்கவில்லை. அரைகுறையாகத் தலையை ஆட்டினார். இடையிடையே மனச்சோகத்தோடும் பரிதவிப்புமாகப் பிள்ளைகளைப் பத்தியே அனத்தினார்.

"கலவரம் எந்தச் சைத்தான் பண்ணினாலும்... பொண்ணுகளும் புள்ளைகளும்தான் ரொம்ப நாசமாகுதுகள். பூ மொட்டுக கருகுற பரிதாபம்தான்... பெருங்கொடுமை" என்று அங்கலாய்த்தார்.

அன்றைக்கு—

இப்ராகிம் காசு தந்தபோது, என் பேரன் கூச்சச் சிரிப்போடு நிமிர்ந்து பார்த்தான்.

"வட்டா வட்டம் (ஒவ்வொரு தடவையும்) துட்டு தாரீக. ஏன்?"

அவனைப் பற்றியிருந்த அவரது கை நடுங்கியது. மனசின் அதிர்வும் துயரமும் கண்ணில் நீராக மின்னியது. அடிஉதடு துடித்தது, வேதனையில்.

"அட... எங்கண்ணு, நல்லா கேட்டுட்டே, ஒரு கேள்வி... இந்தத் துட்டை வாங்குறதுக்கு, எங்க வூட்லே ஒரு புள்ளைகூட இல்லேய்யா... ராசா."

அவருள் ரணப்படுத்திக் கொண்டிருந்த ஒரு வலி, கசிந்து வருகிறது. பதினெட்டு வருஷத் தாம்பத்தியத்தில் ஒரு மழலை பூக்காத மனச்சூன்யத்தை துன்பத்துடன் வடியவிட்டார்.

வேதனையில் தழுதழுத்துக் குழைந்த குரலில் தடுமாறிப் போனான் என் பேரன். அனுதாபமாக அவரைப் பார்த்துவிட்டு, வீட்டுக்குள் ஓடிப்போனான். எனக்கும் பாவமாக இருந்தது, அவரைப் பார்க்க.

அவரை... தன்னிலைக்குக் கொண்டு வருவதற்காக... 'மசூதியை இடித்த கொடுமையையும் புத்தர் சிலையைத் தகர்த்த கொடூரத்தையும் மதத் தீவிரவாதம்தான் செய்தது... மதம் செய்யவில்லை' என்று நான் பேசிக் கொண்டிருந்ததை... அவர் பொருட்படுத்தவேயில்லை.

சைக்கிளை எடுத்துக்கொண்டு 'விர்'ரென்று போய்விட்டார்.

பத்திரிகை நிருபரை விடியோ முன்னாடி ஆற அமரக் கழுத்தறுத்துக் கொன்ற கொடூரம். ஹஜ் யாத்திரைக்காகக் காத்திருந்த பயணிகள், ஆப்கன் மந்திரியையே கல்லால் அடித்துக் கொன்ற பயங்கரப் பாதகம்.

இந்த ரெண்டு விஷயங்களும் என்னை ரொம்பப் பாதிச்சிருச்சு. மனசையே நடுங்க வைச்சது. மதச்சார் பின்மையான என் மனநிலையே, சமநிலை இழந்துருச்சு. எழுபது வயதுக் கிழ மனசு கொதிச்சுக் கொதிச்சு... பிரஷர் 'கிண்'ணென்று ஏறிருச்சு. அப்பத்தான் ராவுத்தரும் வந்திருந்தாரு.

பேச்சுவாக்கில்... லேசாக வார்த்தைகளைத் தவற விட்டுட்டேன். "உங்க ஆளுக பொதுவா மொரட்டுச் சுபாவம்னு நெனைக்கேன். நீங்க குடுக்குற தண்டனை முறைகளும் கொடூரமாயிருக்கு. நிருபரைக் கொன்ன விதமும் அப்புடித்தான். மந்திரியையே அடிச்சுக் கொன்ன குரூரமும் அந்த ரகம்தான்" என்று முரட்டுத்தனமாகக் கொட்டிவிட்டேன். அவரது முகம் சட்டென்று வாடிப் போயிற்று. முகத்தில் வந்துபோன நிழல் கறுப்பு. முகமாற்றம். குரலில் சுரத்தற்றுப் போன வித்தியாசம்.

பிள்ளைகள் வருகிற வரைக்கும் இருப்புக் கொள் ளாமல் அவர் தவித்த விதம். பேரன், பேத்தியைப் பார்த்தவுடன், பேசிச் சிரித்துவிட்டுப் போன வேகம். அன்றைக்குப் போனவர், அப்புறம் வரவேயில்லை!

என்னாயிற்று ராவுத்தருக்கு? ரெண்டு மாதமாக ஆளே தட்டவில்லை. வாரா வாரம் வருகிறவர். வீட்டுக்கே வரவில்லை. வந்து பார்க்கவேயில்லை. வந்துகொண் டிருந்த பேச்சுத் துணை—வாய்த் தோழமை—வரவில்லை. எதையோ பறிகொடுத்துவிட்ட பிரிவுச் சோகம்.

எனக்குள் ஏக்கம். விசாரித்து நச்சரிக்க ஆரம்பித்தேன். ஊருக்குள் வியாபாரத்துக்காக வாரா வாரம் வரத்தான்

செய்கிறார் ராவுத்தர். என்னைப் பார்க்கத்தான் வருவதில்லையாம்!

ஏன்? என்னாச்சு? உறவை ஏன் முறித்துக்கொண்டார்? 'சங்காத்தமே வேண்டாம்' என்று ஒதுங்கிக்கொள்கிற அளவுக்கு வெறுப்பா? பகையா? விலகலா? அவர் மனசைக் காயப்படுத்துற மாதிரி ஏதாச்சும் சொல்லிட்டேனா?

இன்றைக்கு புதன்கிழமை. இப்ராகிம் ஊருக்குள் வந்திருப்பார். பார்க்கணும், பேசணும், போய்ச் சந்திக்கணும்.

போக முடியுமா? நடக்க முடியுமா? தடுமாறி எங்காச்சும் வுழுந்துட்டா? எனக்குள் வைராக்கியம். நட்பை நாடுகிற ஆத்மத் தீவிரம்.

கைத்தடியின் பலத்தில்—சுவரைப் பற்றி மெள்ள எழுந்தேன். எழுந்து நின்றவுடன் தலைக்குள் 'கிண்'ணென்றது.

"பெருசு... சௌரியமா?" என்ற ராவுத்தரின் குரல். கண் இருண்டு விட்டதா? தெரியவில்லையே... ஒரு மண்ணும்.

கையைப் பற்றுகிற அவரது கையின் ஸ்பரிசம். ஈஸிசேரில் உட்கார வைக்கிற இதம். சுற்றிலும் கரிய நிழல்.

"உங்க மகன் வந்து சொன்னாரு... அதுக்குப் பெறகுதான் வந்தேன்" என்கிற இப்ராகிம் சமாதானமாகாத வருத்தம் குரலின் உலர்வில் தெரிந்தது.

என் மருமகள் தருகிற தண்ணீரின் குளிர்ச்சி. ஹார்லிக்ஸ் கலந்த பாலின் ருசி. மெள்ள மெள்ள உயிர்

வருகிறது. தெம்பு வருகிறது. தெளிவு வருகிறது. சகஜ நிலைக்கு வர ரொம்ப நேரமாயிற்று. முதுமையின் தளர்வு கொடுமையானதுதான்.

"என்ன ராவுத்தரே, எம்மேல திடீர்னு கோபம் வந்துருச்சா?"

"திடீர்னு வரலை. எப்பவும் கோபம்தான், ஒம்ம மேல..."

"வர்றதைத் திடீர்னு நிறுத்துனீரே, அது ஏன்?"

"தாங்கமுடியலே..."

"என்னது?"

"ஒம்ம அனத்தல்தான்..."

"என்ன சொல்றீரு? எனக்கொண்ணும் வெளங் கலை..."

"பெருசு... நா இங்க வாரேன், வாரா வாரம். என்னத்துக்கு? ஒம்ம பேரன், பேத்தியைப் பாக்குறதுக்கு. அந்தப் பூச்செண்டுகளைப் பாத்து, அதுக முகமலர்ற அழகைப் பாத்து ரசிக்குறதுக்காகத்தான் வாரேன். பூக்களைப் பாக்குற பூ மனசோட வாரேன். நா என்னிக் காச்சும் மதத்தைப் பத்தி, மத விஷயங்களைப் பத்தி... ஒரு வார்த்தையாச்சும் பேசியிருக்கேனா? யோசிச்சுப் பாரும்..."

எனக்குள் அதிர்வின் பரவல். 'அட... ஆமாம்... நிஜந்தான்' என்ற புதிய வெளிச்சம்.

"ஆனா, நீரு... மத விஷயம் தவிர வேற எதுவுமே பேசமாட்டீரு. ஏன்? என்னை நீரு மனுசனா

நெனைக்கலே. முஸ்லிமா மட்டும் நெனைக்கீரு. அதானே காரணம்?"

ஆணிவேர் வரை பாய்கிற அதிர்வின் மின்சாரம். அவரது கேள்விப்புயலில் அப்படியே... ஆடிப் போய் விட்டேன். அவர் முன்னிலையில் குற்றவாளியாய்—அற்பனாய்—குன்றிக் கூசி உட்கார்ந்து இருக்கிற நான்.

"ஒமக்குத் தெரியுமா பெருசு? கடவுளை நம்புற வனுக்கு ஒரே கடவுளும் அவரு படைச்ச ஒரே குல மனுசங்களும்தான் உண்மை. மனுசங்களைப் பாத்துப் படைச்சுக்கிட்ட சாதிக, மதங்க எல்லாம் உண்மையான துல்லே..."

நான் அண்ணாந்து அவரையே குற்ற உணர்வோடு மலங்க மலங்க விழிக்கிறேன். சத்தியரூபமாக—உணர்ச்சிக் கொந்தளிப்பாக—அவர்.

"இந்த உண்மையை எல்லா மனுசங்களும் புரிஞ்சுக்கிட்டா... மனுசன், மனுசனாயிருவான். மதபேதமும் கொலைபாதகமும் மாயமாயிரும். நெஞ்சுல அன்பு மட்டுமே நெசமாயிரும்..."

இப்ராகிம் பேசப் பேச... எனக்குள் புதிய உணர்வு, புதிய வெளிச்சம்!

—ஆனந்த விகடன் – 23–6–2002

# பொய்ம்மையும்...

"என்னங்க, காமராசுகிட்டேயிருந்து வந்த தபாலுக்கு என்ன செய்ய? என்னிக்கு ரூவா அனுப்ப?"

கவலையோடு கம்மிய குரலில் முனகுகிற ஆவுடையம்மாவை நிமிர்ந்து பார்க்கிற தங்கச்சாமியின் கோபம். வாசலில் சோக பிம்பமாய் பயந்து நிற்கிறாள். பாவமாக இருக்கிறது.

கண்ணின் கனவை கனிவாக்குகிறார் தங்கச்சாமி. வெளித்திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார். சீற்றமாய் பாய நினைத்தவர், புகலற்ற சோகத்தில் நனைந்தார்.

"என்னை என்ன செய்யச் சொல்லுதே? வெறுங் கழுதையை குட்டி போடச் சொன்னா... போட்டுடுமா? 'திடுதிப்'புன்னு நம்ம பய ஆயிரத்து நூறு கேட்டு தபால் எழுதியிருக்கான். எப்படிப் புரட்ட? எவங்கிட்டே முட்ட?"

"காலேஜ்லே தேவைப்படப் போய்த்தானே கேட்ருக்கான்? மத்த புள்ளைக மத்தியிலே... துட்டுல்லாம நம்ம புள்ளே மட்டும் நிப்பானே... மன சொடிஞ்சு மருகுவானே..."

நைந்த குரலின் கண்ணீர் பிசுபிசுப்பு. தாய்மைத் தவிப்பு.

"தெரியுது. ஆவுடை... நானும் நாலுநாளா ஊரெல்லாம் சுத்திட்டேன். எல்லார்கிட்டேயும் கெஞ்சிக் கூத்தாடி, கைமாத்து கால்மாத்து கிடைக்காதான்னு ரவுண்டடிச்சேன். கால் நரம்பு அசந்ததுதான் மிச்சம்."

தங்கச்சாமிக்குள்ளும் கவலையின் நமைச்சல். தபால் வந்து ஒரு வாரமாகிவிட்டது. பாவம், திண்டாடித் தவிப்பான். தூரம் தொலைவான ஊரில் காசில்லாமல் கண்பிதுங்குவான். காலேஜில் பி.எஸ்.ஸி. படிக்கிறான். மூன்றாவது வருஷம். நம்ம வம்சத்துலேயே முதல் படிப்பாளி. ஆசைப்பட்டு மேல்படிப்புக்கு அனுப்பி வைச்சோம். ஆத்திர அவசரத்துக்குப் பணம் புரட்டி அனுப்ப முடியவில்லை.

கண்ணுமுழி பிதுங்குகிறது. ஊரே வறட்சியில் காய்ந்து கனல் பறக்கிறது. காரை வீட்டுக்காரர்கள் கையில்கூட காசு புழக்கம் இல்லை. சீரழிந்து மண்ணாகிப் போன விவசாயம். வெள்ளாமை இல்லை. விளைந்ததுக்கு விலை இல்லை. காடுகரைகளில் பாடுபடுகிற சம்சாரிகளிடம் காய்ச்சப்பாடு என்றால் வேறு யாரிடம் கைமாத்து கேட்க?

திசையறியாத இருட்டுக்குள் திணறித் தவிக்கிறவர்.

ஆவுடையை புகலற்று நிமிர்ந்து பார்த்தார். அவளது கண்களில் கோத்திருக்கிற நீர். இமை ரோமங்களில் மனசின் சோகம். அழத் தயாரான விம்முதலில் விறைத்தடங்ககிற ஆவுடை முகம்.

பார்க்கச் சகிக்காமல் மனம் புழுங்குகிற தங்கச்சாமி. மனைவிக்கு ஆறுதல் சொல்ல ஆசைதான். தைரிய வார்த்தைகளுக்கு தட்டுப்பாடு. என்னத்தைச் சொல்ல? எப்படிச் சொல்ல? கையில் பசை இல்லையே...

கையறு நிலையில் கலங்கிப் போகிற தங்கச்சாமி.

"அய்யா... மெட்ராஸ் போகட்டா...?"

"எதுக்குடா?"

"மளிகைக் கடைக்கு பொட்டலம் போட...?"

"மேலே படிக்கணும்னு ஆசையில்லியா, ராசா?"

"ஆசை மட்டும் இருந்தா போதுமாய்யா?"

"காசு இல்லாதவன்தான் நா. ஆனா, மனசுலே தைரியமிருக்குடா. நீ காலேஜ்ல போய் படி."

"ரொம்பச் செலவாகும்யா."

"மரம் வைச்சவன் தண்ணி ஊத்துவான்டா. கால் எடுத்து வைச்சா... பாதை தானாக வரும்டா. படிக்காத பரம்பரை. பனையேறி சிரமப்பட்ட பரம்பரை. தராசு புடிச்சு ஊரு ஊரா சுத்தித் திரிஞ்ச வம்சம். நீயாச்சும் மேல்படிப்பு படிச்சு, உசரத்துக்குப் போகணும்."

"ஆட்டும்யா..."

தங்கச்சாமிக்குள் பின்னலாடுகிற நினைவுகளின் நிழல். தயங்கிய மகனை வற்புறுத்தியது நான்தான். நிலையறிந்து பின்வாங்கியவனை, கல்லூரிக்குள் தள்ளிய உத்வேகம். 'வம்சம் செழிக்கணும், தங்கமாகத் துலங்கணும்' என்ற கனவின் வெறி. லட்சிய வேகம். ஆன்ம பலம். இப்ப—

எதிரில் நிஜம். பணம் புரட்ட இயலாத லௌக்க யதார்த்தம். கனவைப் பரிகசிக்கிற உலர்ந்த நிஜம். உத்வேகத்தை முடமாக்குகிற இயலாமை. பெருமூச்சுடன் எழுந்தார், வாழ்க்கையோடு மல்லுக்கட்ட.

“பசு ஒண்ணு கெடக்கு. யாரும் கேட்டு வந்தா... தட்டிவுட்டுருவோம்.”

“வெத்துப்பசுவா, சினையா?”

“நீருதான் போய்ப் பாருமே...”

பரமசிவம் முந்தா நாள் டீக்கடையில் வைத்துச் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. பரமசிவம் வீடு மேலத் தெருவில். நடையை எட்டிப் போட்டார் தங்கசாமி. மதிய வெயில் சுள்ளென்று அடித்தது. தெருவில் வெறிச் சோடல். மனுசமக்கள் எல்லாரும் காடுகரைகளில். நாட்டுக் கோழிகள் அருகி வருகின்றன. கிண்டி மேய தெருப்புழுதியுமில்லை. பாறை மாதிரி சிமெண்ட் ரோடு.

வீட்டை எட்டிப் பார்த்தார் தங்கச்சாமி. திறந்து கிடந்தது. ஆள் உள்ளே இருக்கலாம். தொழுவத்தின் மூங்கில் தப்பைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார். கண்ணில் அப்பியிருந்த மதிய வெயில், தொழுவத்து நிழலை இருட்டாக்கியது. கண்ணிமை தட்டி முழித்தார். ஜெர்ஸிப் பசு, வேற்றாள் வாசமறிந்து தடதடத்தது. மூக்கில் ஒட்டுகிற ஈயை ஓட்டுவதற்காக தலையைக் குலுக்குகிறது.

தேன் நிறம். அடிவயிறு மட்டும் பழுப்பு நிறம். சிமிழ் இல்லாத நீள்வழுக்கையாகக் கழுத்து முதுகு. வால்

ரோமக் குஞ்சத்தில் சாண மூத்திரச் சொட்டடிப்பு. மனசுக்குப் பிடித்தமான கொச்சை வாடை.

"யாரது?"

பின்னால் பெண்குரல். பரமசிவம் பெஞ்சாதி.

"என்னம்மா... நாந்தான். மாட்டைப் பாக்க வந்தேன்..."

"உங்க மாப்புள்ளே சொன்னாரா?"

"முந்தா நாளே சொல்லியிருந்தாரு. நாந்தான் அயத்துட்டன். மாட்டை விக்குறதுக்கு என்ன அவசரம்மா? துட்டுக்குச் சிக்கலா?"

"இல்லேண்ணாச்சி, ஊசி போட்டு அஞ்சு மாசமாச்சு. சினை தங்கலே. மாறிமாறி மொடையடிச்சுக் கிட்டே யிருக்கு."

"அடடே... அப்படியா? வித்துட்டு... சினை மாடு வாங்கவா?"

"ஆமண்ணாச்சி..."

"ஊசி போட்டும் சினை தங்காத மாடுன்னா யாரும் வாங்க மாட்டாகளே... ரொம்ப யோசிப்பாகளே..."

"ஆயிரம் ரெண்டாயிரம் குறைச்சாச்சும் வித்துரணும் அண்ணாச்சி. வெத்து மாட்டை வளர்த்து... என்னத்துக் காகப் போவுது?"

"ஆமாமா... அதுவும் சர்த்தான்."

மாட்டை நெருங்கினார் தங்கச்சாமி. பதினைந்து வயதிலிருந்து பழகிப்போன மாட்டு வாசம். வியாபார நுணுக்கம். பார்த்த பார்வையில், பிடிபட்டு விடுகிற மின்னல்.

மாட்டைத் தட்டினார். முதுகில் வருடினார். வால் பக்கம் வந்த இடதுகை. சாணி வரும் இடத்தில் வருடுகிற மென்மை. அதன் திரேகமெல்லாம் புல்லரிப்பு அலைகள். மடுவை நோக்கிய பார்வை... மனசுக்குள் இறங்கிக் கொண்ட பசு. அடி மனசுக்குள் அது பற்றிய நுணுக்க விவரங்கள்.

பம்மிப் பதுங்குகிற உள்மனம். நுட்பமான இழை பின்னுகிற நினைவுகள். நிமிஷத்தில் போட்டுக் கொள்கிற மனக்கணக்கு.

தரகு தங்கச்சாமி என்றால்... சுத்துபட்டி பத்து ஊரும் அறியும். 'பேரு மட்டுமில்லே தங்கம். வாய்ப்பேச்சும் தங்கம்தான்' என்று நம்பும். 'நம்பிக்கையோடு எதையும் சொல்லலாம். ஒப்படைக்கலாம். வஞ்சகம், சூது இல்லாமல் முடித்துத் தருவார். நியாயமான லாபத்தை எடுத்துக் கொள்வார். தப்புகள் நடக்க இடம் தரமாட்டார் என்ற அழுத்தமான பிடிப்பு. அவரும் மனசாட்சியை மதிக்கிற ஆள்தான்.'

தரகோடு... சில சமயம் லாபமும் எடுத்துக் கொள்வார். நூறு, இருநூறு கூடுதலாகக்கூட இருக்கும். 'இதெல்லாம்... வியாபார சகஜம்' என்று எல்லோருமே சம்மதித்துக் கொள்வார்கள்.

சாயங்காலம் தங்கச்சாமி வந்தார். பரமசிவம் காத்திருந்தார்.

"என்ன மச்சான், ஏவாரி வந்துருக்காகளா?"

"வரலே மாப்புள்ளே. நானே ஏவாரம் பண்ணலாம்னு நெனைக்கேன்... வெலையைச் சொல்லு?"

"காலைலே ஏழு லிட்டர், சாயங்காலம் ஆறு லிட்டர் பால் தரும் மச்சான். நல்ல வம்சம்."

"அதெல்லாம் சரிதான். சினை புடிச்சாத்தானே? சினை தங்காம ஏழுக்கும் ஆறுக்கும் எங்க போக?"

"அது நெசந்தா மச்சான்."

"சரி... வெலையைச் சொல்லு?"

"நீங்களே ஞாயமான வெலையைப் போட்டுட்டுப் பத்திக்கிட்டுப் போங்க."

"பொருள்காரரு வெலை சொல்லாம நா எப்படிச் சொல்றது?"

ரொம்ப நேரம் வாக்குவாதம். காரசாரமான சத்தம். ஓங்கி முழங்குகிற சத்தக்காடு. தள்ளுமுள்ளான வார்த்தை மோதல்கள். மேட்டுக்கும் பள்ளத்துக்குமாக இழுத் தடிப்புகள். பெரிய சண்டை போல நடந்த பேரம். குறை சொல்லலும், சவடால்களுமான ஏவார இயல்பு.

ரொம்ப நேரத்துக்குப் பிறகு—

மூவாயிரத்து முந்நூற்றைம்பது என்று விலை திகைந்தது. கால் ரூபாயை அட்வான்ஸ் போட்டுவிட்டு, ஒரு பெரிய போராட்டத்தில் களைப்படைந்தவராக தங்கச்சாமி புறப்பட்டார். வாயெல்லாம் உலர்ந்துவிட்டது, கத்திய கத்தலில். நெஞ்சுக்கூடு காந்தியது.

போகும்போது... மாட்டைப் பார்த்தார். மின்னலான ஒரு பார்வை. அவரது பார்வை, மடுவின் மீது. காம்புகளின் நுனி மீது. மேல்வயிறு மீது. அவருக்குள் கூடு பின்னுகிற நினைவுகள்.

“நாளைக்கு மாட்டைப் பத்திக் கிடுதேன் மாப்புள்ளே.”

“பணம், மச்சான்?”

“நாளைக்கு சாயங்காலமே தாரேன். நம்பலாம்லே?”

“உங்களை நம்பாம உலகத்துலே யாரை நம்புறது? தங்கம்னா... நீங்கதான் சொக்கத் தங்கம்.”

துண்டை உதறி மறுதோளுக்கு மாற்றிக்கொண்ட தங்கச்சாமிக்குள் ஒரு பெருமித உணர்வு. களைப்பை மீறிய வெற்றி உணர்வு. தனது நாள்பட்ட அனுபவத் திறன் மீதான நம்பிக்கை. கணக்கு சரியானால்...

அவருள் விரிகிற—படர்கிற—கணக்கு.

எதையோ மறந்துவிட்டவரைப் போல திரும்பி வந்தார்.

“என்ன மச்சான்...?”

“மொடையடிக்குதா?”

“ஆமா... மச்சான். கனைப்பு, பேய்க்கனைப்பு கனைக்குது.”

“ஊசி எப்ப போட்டீக?”

“போட்டு மாசம் அஞ்சாகுது மச்சான்...”

“சரி... சரி...”

மறுபடியும் புறப்பட்டுவிட்டார் தங்கச்சாமி. யோசனை எங்கோ தூரத்தில்.

“ஏலேய் மருதா...”

“என்ன மோலாளி?”

“பரமசிவம் மாட்டைப் பத்திக்கிட்டு டவுன் மாட்டாஸ்பத்திரிக்கு வந்து சேரு.”

“நீங்க?”

“சைக்கிள்லே போறேன். நீ வந்து சேர்றப்ப, அங்க நா தயாரா இருப்பேன்.”

“சரி, மோலாளி...”

அவன் சிரிப்பு ஒரு தினுசாயிற்று. முகம் ஒரு கோணலாயிற்று. தலையைச் சொறிந்தான். நைச்சியமான சிரிப்பு.

“என்னலே? இந்தா... அம்பது ரூவா.”

“நீங்க நல்லாயிருக்கணும் மோலாளி.”

கும்பிட்ட கைகளுக்குள் அவனது தோள்துண்டு.

பெடலில் காலை வைத்தார். ஒரு ‘செண்டிப்பில்’ ஸீட்டில் ஏறி உட்கார்ந்தார். சைக்கிள், மெட்டல் ரோட்டில் தடுமாறி தத்தளித்தது. சமாளித்து, ஹாண்டில் பாரை அழுத்திப் பிடித்தார். அழுத்தி பெடலை மிதித்தார். சீராயிற்று. மூன்று மைல். முக்கி முக்கி சைக்கிள் மிதிக்கணும். குறுக்கெலும்பு வலியெடுக்கும்.

மாட்டாஸ்பத்திரி சற்று ஒதுக்கமாயிருந்தது. பக்கத்திலிருந்த டீக்கடையில் சைக்கிளை நிறுத்தினார். ரெண்டு வடையைப் பிய்த்து உள்ளே தள்ளினார். பசி, ஆளை தின்கிறது.

“ஒரு டீ போடுப்பா...”

செம்பு நிறைய தண்ணீரை முகர்ந்து, அண்ணாக்க குடித்தார். தொண்டைச் சங்கு ஏறி ஏறி இறங்குகிறது.

சைக்கிள் மிதித்த அயற்சி. பசியின் கிள்ளல். வயிறு நிறைய தண்ணீர் குடித்தார்.

ஹீரோ ஹோண்டா ஒன்று வந்து நின்றது. வெள்ளை வேட்டி. சந்தன சில்க் சட்டை. நீலநிறச் சால்வை. கழுத்தில் வடச்செயின். ஆணி வைத்த செருப்பின் 'சர்ர்க், சர்ர்ர்க்' சத்தம்.

"டீ சாப்புடறது யாரு? தங்கச்சாமியண்ணாச்சியா?"

"ஆமய்யா... செல்லப்பாண்டி."

செல்லப்பாண்டி பெரிய மாட்டு வியாபாரி. மந்தை மந்தையாக சரக்குகள் வாங்கி விற்கிற பெரிய ஆள். ஏழெட்டு வேன்கள் சொந்தம்.

"தம்பி... தங்கச்சாமியண்ணாச்சிகிட்டே காசு வாங்காதே..."

"ஒன்னை மாதிரி பெரிய பண்ணை வந்துட்டா.. எம்பாடு கொண்டாட்டம்தான்."

"தம்பி... எனக்கும் ஒரு டீ குடு."

டீக்கடைப் பையன் இருவரையும் பார்த்து ஓர் இளஞ்சிரிப்பு சிரித்தான். டீ கிளாஸைக் கழுவி வைத்து, சீனியைப் போட்டான்.

வியர்த்துக் கொட்டியது, தங்கச்சாமிக்கு. கைப்பனியன் 'தொதொப்'பென்று நனைந்தது. சைக்கிள் மிதித்த களைப்பு. வெயில். டீ குடித்தது. வரிவரியாகப் பொங்கி ஊற்றுகிற வியர்வை.

"உஸ்ஸ்ஸ்ஸு... யப்பா" என்று வெளியே வருகிற தங்கச்சாமி. மேல்துண்டை ரெண்டாக மடித்து, முகத்துக்கு

நேராக விசிறி மாதிரி வீசிக் கொள்கிறார். வீசுகிற சுழல்வில் உருவாகிற மென்காற்றின் சுகவருடல்.

சைக்கிளில் வந்த திக்கைப் பார்த்தார். 'பசுவும் மருதையாவும் வருகிறதா' என்று. வர ஒருமணி நேரமாகும். தெரியும். அப்பவும் கண்கள், அந்தத் திக்கைப் பார்க்கின்றன. மனசின் ஆவல்.

செல்லப்பாண்டி டீயை உறிஞ்சுகிறான். விரல்களில் மோதிரங்கள். வலது மணிக்கட்டில் பிரேஸ்லெட். நிறைய தங்கமயம்.

என்னண்ணாச்சி, சரக்கு எங்கேயும் கிடக்குதா? நல்ல அயிட்டமாயிருந்தாச் சொல்லுங்க?"

"ஒரு சரக்கு வந்துக்கிட்டிருக்கு."

"என்ன அயிட்டம்?"

"ஜெர்ஸி."

"இளசா, முத்தலா?"

"ரெண்டாம் ஈத்து."

"ஏவாரத்துக்கா... தரகுக்கா?"

"ஏவாரம்தான்."

"சரக்கு நமக்குப் போடுதீகளா?"

"போடுறதுக்குத்தான்..."

"வெலையைச் சொல்லுங்க..."

"இல்லேப்பா. மாடு வந்துரட்டும். டாக்டர்கிட்டே செக்கப் பண்ணிக்கிடணும். நீயும் கொம்பு சைஸ், மடு, காம்பைப் பாத்துக்க."

செல்லப்பாண்டி அவரைப் .பார்த்தான். வியர்வையில் எண்ணெய் வழியும் முகத்தைத் துண்டினால் அழுத்தி துடைத்தார். ஆஸ்பத்திரிக்குள் போனார்.

டாக்டர் இருந்தார். நல்ல மனுசர். சத்திரப்பட்டிக் காரர். பழக்கமான ஆள்தான்.

"ஐயா... வாங்க... என்ன வெஷயம்யா?"

"ஒண்ணுமில்லே. ஒரு அம்மச்சம் (சந்தேகம்) கேக்கட்டா?"

"ம்..."

"ஊசி போட்டு, சினை தங்குன பெறகும் மொடையடிக்குமா? மொடையடிச்சாலே சினை தங்கலேன்னுதான் அர்த்தமா?"

டாக்டர் நிதானித்தார். கறுத்துக் கனிந்த முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றியெடுத்தார். சிகரெட் குடித்து கறுத்த உதட்டை மேல்பல்லால் கவ்வினார்.

"ஜெர்ஸிலே சில மாடுக... சினை தங்குன பெறகும் மொடையடிக்க ஞாயம் இருக்கு. எதுக்கும் செக்கப் பண்ணுனாத்தான் தெளிவா சொல்ல முடியும்."

மருதையா பசுவோடு வந்தான். நடந்த களைப்பு. வெயிலின் தாக்குதல். காலெல்லாம் முள்விளாரும் காட்டுச் செடிகளும் தொட்டு இழுத்த வெண்கோடுகள்.

மாட்டை செக்கப் செய்த டாக்டர், "சினைதான். ஏறக்குறைய நாலு அல்லது அஞ்சு மாசமாகும்" என்றார்.

தங்கச்சாமிக்குள் குளிர்ச்சுனை. மகிழ்ச்சியின் துள்ளலில் விரிகிற நெஞ்சு. சிரிப்பில் மீசை சற்று பெரிதாகிறது.

'பரமசிவம் நம்மகிட்டே ஏமாந்துட்டான்.'

"என்னண்ணாச்சி?"

வெளியே வந்த தங்கச்சாமியை, ஆவலுடன் எதிர்பார்த்துக் கேட்டதிலிருந்து, மாடு அவனுக்குப் பிடித்துப் போனது புரிகிறது. பேச்சு பேச்சாக இருந் தாலும்... மாட்டு மேலேயே செல்லப்பாண்டியின் கண்ணும் மனசும். தங்கச்சாமிக்குள் கணக்கு. வலை பின்னும் ஏவார எண்ணம்.

"டாக்டர்கிட்டே போய் கேட்டுக்க."

"உங்களை நம்பாம... ஒலகத்துலே கடவுளைக்கூட நம்ப முடியாது. நீங்களே சொல்லுங்கண்ணாச்சி. தங்கச்சாமின்னா... உங்களுக்குத்தான் பொருந்தும்."

"அஞ்சு மாசச் சினையாம்..."

"ரைட்... வெலையைச் சொல்லுங்க?"

"எண்ணாயிரத்து நூறு. நீ ஒன்னோட வெலையைக் கேளு."

பேரத்துக்கான முட்டல் மோதல்.

காரசாரமான வாக்குவாதம். வார்த்தைத் தள்ளு முள்ளு. உயர்ந்த ஸ்தாயியில் சண்டைமாதிரி... பெருங் கூவல்காடு. காட்டுக்கத்தல். மேட்டுக்கும் பள்ளத்துக்கும் இழுக்கிற இழுபறி.

செல்லப்பாண்டி நூறு ரூபாய் தாளை அவர் கைக்குள் திணிக்க, அவர் தப்பித்து விலக... கூச்சல் போட்டு மறுக்க...

"நீ நினைக்குற நெனைப்புக்கெல்லாம் வராதுப்பா" என்று திணிக்கப்பட்ட அட்வான்ஸை வீசி எறிய...

ஒரே 'காச்சுமூச்செ'ன்று சண்டைக்காடு. சத்தக்காடு. கூவல் காடு. அனல் பறக்கிற வார்த்தைக்காடு. கோபமும் ஆத்திரமுமாய் பாய்ச்சல்கள்.

டீக்கடைக்காரன் இந்த வியாபாரப் பேரக் கூத்தை வேடிக்கை பார்த்தான். மருதையாவும் கூத்து பார்த்தான்.

கூத்து ஒரு வழியாக முடிந்தது.

ஏழாயிரத்து அறுநூறு என்று விலை திகைந்தது.

"ஒரு மாசம் வாய்தா தரலாமா?"

"ரூபாய்க்கு அவசரம்னுதான் மாட்டைக் குடுத்தாக. உடன் ரொக்கம் வேணும்ப்பா..."

பச்சை பெல்டில் பட்டன்கள் 'டிப், டிப்' என்று திறக்க நாலு மடிப்பாக சுருட்டியிருந்த ஐந்நூறு ரூபாய் தாள்கள். எண்ணிக் கொடுத்தான். ரூபாய், கை மாறியது.

கையில் பணம் கனத்தது. மனசும் கனத்தது.

மூவாயிரத்துச் சொச்சம் வாங்குனது. ஏழாயிரத்துச் சொச்சம் வித்தது. அஞ்சு பைசா மூலதனமில்லாம இம்புட்டு லாபம். இது லாபமா? பாவமா? ஏவாரம் னாலும், அதுலே ஒரு தருமம் வேண்டாமா?

ஏமாத்து இல்லையா? நம்புன புள்ளையோட கழுத்தை அறுத்த மாதிரியில்லையா? வஞ்சம் இல்லியா? வெள்ளை மனசைக் கிள்ளலாமா?

'தங்கம்னா... நீங்கதான் சொக்கத் தங்கம்'— பரமசிவத்தின் குரல், அடிமனசில் முள்முள்ளாகக் குத்துகிறது.

'உங்களை நம்பலேன்னா... கடவுளையே நம்பாத மாதிரி'—செல்லப்பாண்டியின் நம்பிக்கைக் குரல்.

கை நிறைய இருக்கும் பணத்தையே வெறிக்கிற தங்கச்சாமி. மனசுக்குள் வியர்வை. புழுக்க மூச்சுத் திணறல். தானே தனக்குள் சிறுமைப்பட்டு... சிறுத்து நிற்பதாக ஒரு பிரமை.

**சை**க்கிள் நேராக பரமசிவம் வீட்டில் வந்து நின்றது. தங்கச்சாமிக்குள் தத்தளிப்பு.

"மச்சான்... மச்சான்... வாங்க மச்சான்... உள்ளே வந்து திர்ணையிலே உக்காருங்க." உட்கார்ந்தார்.

மடியைத் திறந்தார். மடிப்பை. அர்ணாக்கயிறில் கட்டப்பட்ட சுருட்டுப்பை. ரூபாயை பதனமாக எடுத்து எண்ணினார்.

"இந்தா... பரமசிவம்."

"ரொம்ப இருக்கு, மச்சான்?"

"ஆமா. ஆறாயிர ரூவாய்."

"என்னத்துக்கு?"

"ஓங்கிட்டே பேசுனது மூவாயிரத்து முந்நூத்தைம் பதுதா. ஆனா, அதை ஏவாரிகிட்டே வித்தது... ஆறா யிரத்து இருநூறு."

"லாபம் உங்களுக்குத்தானே? உங்க யோகம், உங்களுக்குத்தானே சேரணும்? ஏங்கிட்டே என்னத்துக்குத் தாரீக?"

"அப்பவும்... அதுலே ஒரு ஞாயம் வேணும்லே? மனசாட்சி இருக்குல்லே? நீங்கள்லாம் தங்கம்னு நம்புதீக. நா பித்தளையாயிருக்கக்கூடாதுல்லே?"

பரமசிவத்தின் முகமே மிருதுவாயிற்று. மின்னுகிற கண்ணில் ஈரம். நடுங்குகிற உதடுகளில் மனசின் நெகிழ்வு.

"இந்தக் காலத்துலேயும் இப்படியொரு ஞாயமா? தருமமா? நீங்க, லட்சத்துலே ஒராளுதான்... மச்சான்..."

அவன் சொல்லில், மனசின் குழைவு. கண்ணோர ஈரத்தில் அவனது நன்றியுணர்ச்சி.

"சரி... அப்ப... நா வரட்டா?"

சைக்கிளை எடுக்கப் போன தங்கச்சாமிக்குள் அந்தக் குரல், மாறி மாறி... 'நீங்க லட்சத்துலே ஒராளு...'

சுமையாக அழுத்துகிற பாராட்டு. முள்கவையாக அடிக்கிற புகழ்ச்சி. செருப்பால் அடிக்கிற பிரமிப்பு.

அவருக்குள் குற்றஉணர்வின் முள்குத்தல்.

சினை மாடு என்ற உண்மையை மறைத்துவிட்ட பொய்யன். ஆயிரத்தறுநூறு ரூபாயை அமுக்கிக் கொண்ட கள்ளன்.

பொய்யனுக்கும் கள்ளனுக்கும் சத்தியவான் பட்டமா?

தங்கம் என்ற புகழ்மாலையா? முழுசாக அமுக்கிக் கொள்ளாதது ஒரு தர்மமா?

காறித் துப்புகிற உள்மனசு. 'சீ' என்கிற மனசாட்சி. அதைப் புறமனசால் ஒதுக்கித் தள்ளுகிற லெளகீக வாழ்வின் மூர்க்கம்.

காமராசின் தபால். ஆவுடையின் கண்ணீர். தங்கச் சாமிக்குள் தத்தளிப்பு. இழுபறி. பள்ளத்துக்கும் மேட்டுக்குமாக இழுக்கிற திணறல். மனசின் கூவல் காடு.

கோயில் கட்டி, பூஜை புனஸ்காரம் செய்து, ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்யறதைவிட, ஒரு ஏழைக்குக் கல்வி தர்றது பெரிய புண்ணியமாமே...! நல்லதுக்காக பொய் சொன்னால்... அதுவும் சத்தியமாமே?

ஏழை வீட்டுக் குலத்துலே முதன்முதலாக மேல்படிப்பு படிக்குற காமராசுக்கு... ஆயிரத்தைந்நூறு ரூபாயை மணியார்டர் பண்ணிவிட்டு, வீட்டுக்குப் போகிற போது—

மனசில் ஒரு கனமா? ஆசுவாசமா என்று புரியாத ஓர் உணர்வு. கனத்தை பெருமூச்சில் கரைக்கிற தங்கச்சாமி.

"என்னங்க..." ஆவுடையின் குரல்.

"காலேஜுக்கு மணியார்டர் பண்ணிட்டேன்."

"நல்லவேளை... கொலதெய்வம்தான் வழிவிட்டுருக்கு."

'அதுக்கு எத்தனை உருட்டுப் புரட்டு பண்ணுனேன். அது என்னை எப்படி உருட்டிப் புரட்டி எடுத்துச்சுன்னு எனக்குத்தானே தெரியும்?'

வேதனையில் புலம்புகிற புருஷனை வினோதமாகப் பார்க்கிற ஆவுடை.

—ஆனந்தவிகடன் பவழவிழா மலர், 2002.

ரூ. 5,000 பரிசு பெற்ற
முத்திரைச் சிறுகதை

# சித்தாந்தம்

**ஊ**ர் மடத்துக்கு மெள்ள மெள்ள ஊர்ந்து வந்து படியேறி... திண்ணையில் உட்காருவதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிப் போயிற்று.... அருஞ்சுனை நாடாருக்கு. வயசு எழுபத்தாறு. இடுப்பில் நாலுமுழ வேட்டி தாறுமாறாக அள்ளிச் சொருகப்பட்டிருக்கிறது. கச்சைத் துணியில் தைத்த கைப்பனியன், கதர்த்துண்டு. நரைத்த மீசை ரோமம் ஆடியது. 'உஸ்ஸ்'ஸென்று விட்ட ஆயாசப் பெருமூச்சில். 'கேஸ், பூஸ்'ஸென்று இளைக்கிறது, மார்புக்கூடு.

உள்ளங்கையால் முழங்கால் மூட்டை நீவிவிட்டார். வீங்கியிருக்கிறது. காலை உதறி எட்டு எடுத்து வைக்கவிடாமல், முழங்கால் வீக்கம்தான் முடக்குகிறது. உட்கார்ந்தால், எழுந்தால் மூட்டுகளில் மொடு மொடுக்கிறது. கரண்டைக்கால் எலும்பு வேறு, வலி உசுரை வாங்குகிறது. முத்துன நெந்துக பாடு, தும்பம்தான்.

"ச்சேய்... ஒரு வயசுக்கு மேலே உசுரோட இருக்குறதும் தப்புத்தான். போய்ச் சேர்ந்தார்த்தான் நிம்மதி. உசுரே ஒரு பாரமாயிருது. கிடந்து, பாடாய் படுத்துது. சீரழிவு

தான். ஆனா, என்ன செய்ய? கூத்துவன் ஓலையைக் கிழிக்கலியே... கிழிச்சாலும் நா போகமாட்டேன், எம் பேரனைப் பாக்காம."

பேரனை நினைச்சா பெருமையாயிருக்கு. உத்தி யோகத்துக்கு வந்துட்டான். பொறுப்பான உத்தியோகம். புருஷலட்சணம், கால்காசு உத்தியோகம்னாலும் கவர்மெண்டு உத்தியோகம். பேரன் தலைமுறை கரையேறிட்டா அதுக்குப் பின்னாடி வர்ற தலைமுறை களை அவன் மலைமேலே ஏத்திருவான்.

கீரை வித்து வவுத்தை நனைச்ச அருஞ்சுனை நாடான் பேரன்... கோட்டு சூட்டும், பூட்டுமா வரப்போறான். அவன் புள்ளைகளைப் பெரிய பெரிய படிப்பு படிக்க வைச்சுருவான். அதுக்கான சத்து அவங்கிட்டே வந்துரும்.

ஊரையே கிரையம் பண்ணி, ராஜாவான மாதிரி ஒரு பெருமிதம். கௌரவமான உசரத்துலே பேரனை ஏத்திவிட்டுட்டதுலே ஒரு கௌரவம். ஒரு சந்தோஷம். தலைமுறை தலைமுறையா அடிமையாயிருந்த சாதியிலே ஒரு குலக்கொழுந்தை... மேடேத்திட்டோம். மே(ல்) நிலைக்குக் கொண்ணாந்துட்டோம். அருஞ்சுனை நாடான்னா, சும்மாவா? அருஞ்சாதனை செய்யாம வுடுவானா?

தொங்கிப் போயிருந்த நரைத்த மீசையை இடது கையால் நீவினார். மேலாக முறுக்கிவிட்டார். பெருமிதத்தில் விம்முகிற நெஞ்சு. நிமிர்கிற தலை. பார்வையில் ஒரு மின்னல். நெஞ்சுக்குள் லேசான கர்வம்.

பேரன்மீது கிழவருக்கு தனீ...ப்பாசம். இவன் ஒன்றும் ஒற்றைப் பேரனல்ல. அருஞ்சுனை நாடாருக்கு மகன்கள்

இரண்டு. மகள் ஒன்று. பேரன் பேத்திமார் ஏழு பேர். ஆனாலும் இவன்மேல் சற்று தூக்கலான பிரியம். இவர் பெயரையே அவனுக்கு வைத்திருப்பதாலா? அதுவும் ஒரு காரணம். ஆனால், அது மட்டுமல்ல.

இவரது அம்மா சாயலில் பேரனின் முகம் இருப்பதா? இருக்கலாம். இவன் ஆறாப்பு படிக்கிறப்ப ஒருநாள் உற்சாகப் பிரளயமாக ஓடிவந்தான். மேல்சட்டையின் முதுகு காற்றில் புடைத்தது. மகிழ்ச்சியில் முகம் பூத்திருந்தது. கண்ணில் ஆனந்த மின்னல். ஒரே கொண்டாட்டமாக ஓடிவருகிறான்.

"என்னடா... இம்புட்டு ஆதாளி?"

"ஐயாப்பா... நாந்தா...ன் க்ளாஸ் ஃபஸ்ட்"

அன்றைக்குத்தான், அவன்மீது ஒரு கூடுதல் வாஞ்சை விழுந்தது. நெஞ்சுக்குள் ஒரு நெகிழ்வு. அடிமைத்தனத்திலும், அவமதிப்புகளிலும் ரணப்பட்டு ரணப்பட்டு தழும்பாகிப் போயிருந்த மனசுக்குள், ஒரு சின்ன உயிர்த்துளி.

ப்ளஸ்டூ—வில் தொள்ளாயிரத்துக்கு மேல் மார்க். படிக்க வேண்டும் என்று பேரன் ஒற்றைக்காலில் நின்றான். கடைக்கே அனுப்புவதில் ரெட்டைக் காலில் நிற்கிற மகன்.

"ஏலேய்..." என்று குறுக்கிடப்போன கிழவரை... "நீரு சும்மா கிடயும். ஒமக்கென்ன வலிக்கா? காலேஜ் படிப்புக்கு, கட்டுகட்டா ரூவா வேணுமே... எவங்கிட்டே இருக்கு?" என்று சீறிச் சினந்த மகன்.

வெட்டுப்பட்ட பருத்திச் செடியாக வாடி நிற்கிற பேரன். கண்ணில் முட்டி நிற்கிற ஈரக்கனவு. வம்சத்துப் படிப்பாளி. வம்ச ரட்சகன்.

"ஏலேய்..." கிழவரின் அதட்டலான குரல்.

"என்னோட அன்னவஸ்திரத்தை வித்துப் படிக்க வைடா... அவனை."

"ஒமக்கு?"

"ஏங் கடைசிக்காலம் எப்புடியானாலும் சரிடா. கீரை வித்துச் சீரழிஞ்ச நம்ம பரம்பரை. இவனாலேயாச்சும் நிமிரட்டும்டா..."

அருஞ்சுனை நாடாரை பாசத்தோடு வெறிக்கிற மகன்.

அருஞ்சுனை நாடார் உழைத்துச் சம்பாதித்த நிலம். காடுகரை, கிணறு, கூளப்படப்புகள், மாடு கன்றுகள். எல்லாம்... பஞ்சாயத்தார் முன்னிலையில் சமமாக பாகஸ்தம் நடந்துவிட்டது. அரைக் குறுக்கம் (ஏக்கர்) இறைவைப் புஞ்சையும், மூணுகுறுக்கம் கரிசல்காடும் அருஞ்சுனை நாடாருக்கு அன்னவஸ்திரமாக ஒதுக்கப் பட்டது. கடைசிக்கால அன்னத்துக்கான—மானத்துக்கான கவசம்.

எந்தப் பிள்ளை கிழவரின் கடைசிக் காலத்துக்கு முழுப் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறானோ... அவனுக்கு அந்தச் சொத்து. அதைத்தான் பேரனுக்காக தானம் செய்கிறார்.

**ஊ**ர் மடத்தில் ஒரு கடையும் இருக்கிறது. சின்னஞ் சிறிசுகள் வந்த வண்ணமாயிருக்கிறது. தினத்தந்தி பேப்பர் கிடைக்கிறது. மண்டிபோட்டு மனப்பாடம் பண்ணுகிற பெரிசுகள். சினிமாச் செய்தியை ருசிக்கிற இளசுகள். 'தங்கமலரை' மேய்கிற பொடிசுகள்.

சைக்கிள் வந்து நின்றது. கிளிப்பை தட்டுகிற இளவட்டம். பாண்ட், ஷர்ட், கறுப்பான பையன். கையில் காகிதக் கற்றை.

"அருஞ்சுனை நாடார்ங்குறது... நீங்கதானா?"

"ஆமா..."

"ஃப்ரம் அட்ரஸ்லேயும் 'அருஞ்சுனை'ன்னு இருக்கே?"

"அது எம்பேரன். காயிதம் போட்ருக்கானா?"

"ம். இந்தாங்க..."

நீலநிற கவர். வாங்கி, திருப்பித் திருப்பிப் பார்த்தார். ஓர் இழவும் புரியவில்லை. எப்படி உடைக்க? எது வாய்ப்பக்கம்? தவறுதலா கிழிச்சுட்டா... மோசம் போயிருமே...

"தம்பி... போஸ்ட்மேன் தம்பி... இதை கிழிச்சுக் குடுத்துட்டுப் போ. கிழட்டுக் கழுதைக்கு கண்ணும் பத்தலே... கையும் நடுங்குது."

காகிதத்தைக் கண்ணுக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டார்.

'அன்புள்ள ஐயாப்பா அவர்களுக்கு,

உங்கள் பேரன் அருஞ்சுனை எழுதிக் கொள்வது...'

கடிதம் விரிகிறது, நீள்கிறது, படர்கிறது, எழுத்துகளுக்குள் பொங்கிப் பிரவகிக்கிற உணர்வுகள். நனவான கனவுகள். அவனது அனுபவங்கள். அபிப்பிராயங்கள்... அவன் இங்கு வரப்போவதாகத் தகவல். வருகிற தேதி. தாமதமான காரணம். ஜூலை 13–ந் தேதி வருவதாக எழுதியிருக்கிறான்.

அப்படீன்னா... என்னிக்கு? இன்னிக்கு தேதி என்ன? நேத்து, ஆனி மாசம் 28–ந் தேதி. இன்னிக்கு ஆனி 29, ஜுலை 13–ன்னா தமிழுக்கு என்ன தேதி? இது என்னடா இழவு? ஒண்ணும் புரியமாட்டேங்குது.

படிச்சவன் சொல்ற தேதி, தமிழ் கிழவனுக்கு தெரியமாட்டேங்குது. படிக்காத கெழவன் சொல்ற தமிழ் தேதி, படிச்சவங்களுக்குத் தெரியமாட்டேங்குது... நல்ல கூத்துதான்.

படிப்பு... பேரனை தாத்தாவுக்கு அந்நியமாக்கிருமா? படிப்பு, பேரனை புதுமாதிரியா உருக்கி வார்த்திருமா? வேறு உலகவாசியாக்கிருமா? ஆனியை மறக்கடிச்சு... ஜுலை மனுசனாக்கிருமா?

கடைக்காரனை சத்தம் போட்டு கூப்பிட்டார்.

"என்ன வளத்தையா?"

"இன்னிக்கு தேதி என்னடா?"

"இங்கிலீஷுக்கா, தமிழுக்கா?"

"இங்கிலீஷுக்கு"

"ஜுலை 13."

அருஞ்சுனை நாடாருக்குள் ஒரு துள்ளல். மனக் குதூகலம். குபுக்கென்று ஒரு மகிழ்ச்சிச் சுனை பெருக்கெடுக்கிறது, குளிர்ச்சுனை.

அவர் மனசுக்குள் பேரனின் கடித வரிகள். வரத் தாமதமானதற்கு அவன் எழுதியிருக்கிற காரணம். அது நிசந்தானா? அதுவும் சாத்தியந்தானா? அப்படியும் நடக்குமா? நம்ம காலத்துலேயெல்லாம் வேற மாதிரி நடந்துச்சே...

முழுத்த இளவட்டமாக இருந்த அருஞ்சுனை. தோண்டினால் நாலு கஜத்தில் தண்ணீர். தலா போட்டு முக்கி முக்கி இறைப்பான். இழுக்க... தூக்க... கவிழ்க்க... என்று நெஞ்சுக் கிடந்து இளைக்கும். கால் குறுக்கம் புஞ்சையில் சின்னச்சின்ன பாத்திகள். கீரை பயிரிடுவான். வரப்புகளில் சீனியவரைக்காய். ரெண்டு ஈரச்சாக்குகளில் கீரையும் காயும். தரையில் ஒன்றும், முதுகில் ஒன்றுமாக சுமை. பாரத்தோடு மூச்சிரைக்க நடை. அக்கரைப்பட்டி. அய்யமார்தான் ஜாஸ்தி. ஆற்றோர ஊர். பெருமாள் கோயில். கண்மாய்ப் பாசன ஆயக்கட்டுகளில்... முக்கால்வாசி வயற்காடு, அய்யமார்களுக்குத்தான்.

கீரையும் காயும் வாங்குவார்கள். ஊருக்குள் நுழைந்துவிட முடியாது, கூடாது. ஊரோரத்தில் தள்ளி நின்றுகொண்டு கத்தணும். தெருக்கோடி வரை கேட்கணும்.

“கீரை நாடா...ன் வந்துருக்கே...ன்.”

சொளகில் நெல். வலது கையில் செம்புத் தண்ணீர்.

பதினஞ்சு அடி தள்ளிவந்து ஓரிடத்தில் சொளகு நெல்லை வைத்துவிட்டுப் போன பிறகுதான்... அருஞ்சுனை முன்னேறிப் போய்... சொளகு நெல்லை அளந்து சாக்கில் போட்டுக்கொண்டு... கீரையை சொளகில் அள்ளி வைக்கணும். இவன் பின்னால் பதினஞ்சு அடி திரும்பி வந்த பிறகு... சாமியவுக (ஐயர் மனைவியும் சாமிதான்) செம்புத் தண்ணீரோடு வந்து, ஜலம் தெளித்து, தீட்டு கழித்து கீரையை எடுப்பார்கள். இப்படியேதான் அருஞ்சுனை முன்னுக்கும் பின்னுக்கு

மாக நடந்து சாகணும். முப்பதடி தூரத் தீண்டாமை யோடுதான் ஏவாரம்.

அப்ப அருஞ்சுனைக்கு வயசு நாற்பது இருக்கும். ஊருக்குள் கரண்டெல்லாம் வந்து, பம்ப்செட் வந்து, சாகுபடி நிலம் விரிந்து, மிளகாய், பருத்தி, கம்பு என்று வெள்ளாமையெல்லாம் வந்தாயிற்று. கடனும் வந்தாயிற்று. சொஸைட்டி கடன் வாங்க 'பத்தொன்று அடங்கல்' வேணும். அக்கரைப்பட்டி அய்யர்தான் முன்சீப். அவரிடம்தான் வாங்கணும்.

அப்ப... ஊருக்குள் போகலாம். தெருவில்தான் நிற்கணும். வாசல்படியைக் கூடத் தொடக்கூடாது. கால் வலித்தால்... வீட்டு முற்றத்தில் உட்காரலாம்.

அய்யருக்கு வயசு முப்பதுதான் இருக்கும்.

"என்னலே... சோனை?"

"சாமி, பத்தொண்ணு அடங்கல்..."

"வீட்டுவாசலுக்கு வந்துதான் கேக்கணுமோ? விட்டா, வீட்டுக்குள்ளேயே வந்து சம்மணம் போட்டுருவீகளோ? ஏண்டா..."

"இல்லே சாமி... அவசரம்..."

"தலையாரிகிட்ட சொல்லியனுப்பி, ரூவாயைக் குடுத்தனுப்புனா... வந்து சேரும்லே?"

கடுமையும் கோபமுமான அவரது பார்வை. அந்தச் சிவந்த முகம். சந்தனத் திருநீறு. அருஞ்சுனை குடல் பதறிப் போய் நிற்பான்.

திருத்தங்கல் முருகன் கோயிலுக்குள் நாடார்கள் நுழையக்கூடாது அப்ப. நுழைந்து சாமி கும்பிட்டு, வெட்டுப்பட்டு இறந்த நாடார் ஒருத்தர். மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் நுழைய முயன்று... அடிபட்டு, கல்லெறிபட்டு, காயம் பட்ட நாடார்கள்.

கதை கதையாகக் கேட்டிருக்கிற அருஞ்சுனை, அய்யர் என்றால் 'அர்ச்சுனன் பேர் பத்து' என்று நடுங்குவான். பதறிச் சாவான்.

இப்படி பிறந்துவிட்டோமே என்ற கசப்பு... எப்பவும் உண்டு, அருஞ்சுனைக்கு. இப்படி அவமானப்படவும் தூர ஒதுங்கி நிற்கவும்... நாமளும் மனுசங்கதானே? ஒடம்புல ஓடுறது செவப்பு ரத்தம்தானே? நாமும் பத்து மாசம் தானே? என்னத்துல கொறைஞ்சுட்டோம்? என்னத்துக்கு இந்த அவமானம்? ச்சேய்!

மனசு கிடந்து கசந்து அழறும். தன் பிறப்பின் மீதே காறித் துப்பத் தோன்றும்.

இப்ப, இப்ப காலம் மாறியிருக்கு. கீரைப் பாத்தி போட்டிருந்த அருஞ்சுனைக்கு வீடு, காடுகரை, மாடு கன்னு, சொத்து சுகம். அக்கரைப்பட்டி அய்யமார்கள், வந்த விலைக்கு வயற்காடுகளை விற்றுவிட்டு... படிப்பு, உத்தியோகம், தொழில் என்று டவுன்களுக்குப் பறந்துவிட்டார்கள். ஆனால்—

இப்பவும் அய்யர் என்றால், இவனுக்கு 'அர்ச்சுனன் பேர் பத்து' தான். பயம்தான். நடுக்கம்தான். தானாகவே தோள் துண்டு, கட்கத்துக்கு வந்துவிடும். 'சாமி' என்று பவ்யமாகவே உச்சரிப்பான்.

ஆனால்...

நம்ம பயல் இப்படிக் காகிதம் எழுதியிருக்கிறான்.

அந்தப் பகுதியை வாசிக்க வாசிக்க, இவருக்குள் ஆச்சரியம். ஆன்மா சிலிர்த்து, உடம்பெல்லாம் புல்லரிக்கிற பரவசம். 'இப்படியும் நடந்துருக்கே' என்கிற பிரமிப்பு.

"வங்கிப் பணியில் சேர்ந்த புதிதில் தடுமாறித் தத்தளித்தேன். வங்கியில் பணியாற்றுகிற தொழிற்சங்கத் தலைவர் பாலசுந்தரம் அவர்கள்தான் தைரியம் தந்தார். பணி செய்யும் முறைகளைக் கற்றுக் கொடுத்தார். எனக்குள் வெளிச்சம் பாய்ச்சினார்.

இரண்டு மாதமாயிற்று. 'ஐயாப்பாவைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்க வேண்டும்' என்றேன். அவர், ரெண்டு நாள் கழித்துப் போகச் சொன்னார்.

விருந்து சாப்பிட வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார். தடபுடலான விருந்து. பிராமண வீட்டு விருந்து என்றாலே, அது ஒரு தனிவாசம்தான். நெய்யும் பருப்பும் பாயசமும் அதன் ருசியே நன்றாக இருந்தது. அன்பும் பாசமும் வேறு தோழமையாக மணந்தது. அவரைப் போலவே அந்த மாமியும். தாய்மையின் பேருரு. கனிவே, அவர்கள் சுபாவம்.

அந்த விருந்து காரணமாகத் தாமதமாகப் புறப்பட வேண்டியதாகி விட்டது."

நாடாருக்கு இதை வாசிக்க வாசிக்க, உள்ளுக்குள் இன்பத் தத்தளிப்பு. முப்பதடி தூரத் தீண்டாமை... உழக்கில் தண்ணீர்... வாசலுக்கு வெளியே கட்கத்தில் துண்டோடு கூசி நின்ற கோலம்.

அய்யர் வீட்டில், நடுமையத்தில், என் பேரனுக்கு விருந்து. அன்பான உபசரிப்பு. என் பேரனுக்கு, நடு வீட்டில் விருந்து.

எப்படி? எப்படி? இதெல்லாம் எப்படீ.

காலம் செய்த மாற்றமா? காலமாற்றக் குணமாற்றமா? கல்வியால் வந்த பண்பாட்டு நாகரிகமா? உத்தியோக ஒருமையால் வந்த சமத்துவமா?

எது காரணம்? எப்படி இந்த மாற்றம்? எப்படி இந்த அதிசயம்?

அவருக்குள் ஒரே குடைச்சல். சந்தோஷக் குடைச்சல். இன்பக் குறுகுறுப்பு. பரவச உறுத்தல்.

ஆறு மணி பஸ்ஸுக்கு வந்தான் பேரன் அருஞ்சுனை. காலில் பூட்ஸ். கறுப்பு சூட்டு. கட்டம் போட்ட முழுக்கை சட்டை. முதுகில் கனத்த பை. கையில் ஒரு சூட்கேஸ். டிப்டாப்பாக வந்தான். மடத்தில் உட்கார்ந்திருந்த கிழவரைப் பார்த்துச் சந்தோஷமாகச் சிரித்தான். அவன் உதட்டுக் கனிவில் மனசின் வெளிச்சம்.

"என்ன... ஐயாப்பா, எப்புடியிருக்கீக? எனக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கீகளா? காகிதம் கிடைச்சுதா? நல்லாயிருக்கீகளா?"

"இருக்கேன்டா... உன்னைப் பாத்துட்டுக் கண்ணு மூடணும்னு காத்துக்கிட்டிருக்கேன்."

"சரி. எந்திரிங்க ஐயாப்பா. நம்ம வீட்டுக்குப் போவம்."

கைத்தாங்கலாகத் தூக்கினான். பேரன் ஆதரவில் நடப்பதில் ஒரு சுகம். தன் ர்த்தத்தின் அரவணைப்பில், ஓர் பெருமை. கீரைப்பாத்தி நாடார், பாங்க்கில் வேலை பார்க்கிற பேரன் மேல் சாய்ந்து நடப்பதில் ஒரு பரவசம் காண்கிறார்.

நனவான கனவு. கைகூடிய கற்பனை. தலைமுறைப் புதுமை.

அவருக்குள் இன்பக் குறுகுறுப்பு. உறுத்துகிற கேள்விகள். 'எப்படி இது?' என்று கேட்க ஆசை.

இப்ப வேண்டாம். ஆசுவாசம் ஆகட்டும். பயணக் களைப்பு தீரட்டும். ஆற அமரக் கேட்போம், நாளைக்கு!

"நீங்க கீரை வித்த கோலத்தையெல்லாம் பால சுந்தரம் சார்கிட்ட சொன்னேன். 'நீங்க மட்டும் ஏன் இப்புடி மனுச சமத்தவத்தைக் கடைப்பிடிக்கிறீக?'னு கேட்டேன். அதுக்கு அவரு சொன்னதை அப்படியே சொல்லட்டா?"

"சொல்லு, சொல்லு, சொல்லு..."—சின்னப் பிள்ளை மாதிரி ஆவலாகப் பறந்தார் பெரியவர். அவர் கண்ணில் ஆர்வம். சுருக்கமும் நரைத்த ரோமமும் நிறைந்த முகத்தில் ஒரு மலர்ச்சி.

அவரது ஆவல் பறப்பை—ஆர்வப் பரபரப்பை—கண்ணுற்று, பெரிய மனிதத் தோரணையில் கனிவாகச் சிரித்தான் பேரன்.

"நா சின்ன வயசுலேயிருந்து சிவப்பு சித்தாந்தத்துல ஊறிப்போன தொழிற்சங்க ஊழியன். மனுச நேயம்

என்னோட சுபாவம். மனுச சமத்துவத்தை இயல்பாகவே கடைப்பிடிக்கிறேன். அதுக்காக... வர்ணாசிரம அடிப்படையிலே அமைஞ்சிருக்கிற சாதி ஏற்றத்தாழ்வு முழுசா மாறியிருச்சுன்னு நினைச்சிராதே..."

"கல்வியாலே... உத்தியோகங்களுக்கு எல்லா சாதியினரும் வந்ததாலே... கால நாகரிகம் மாறுனதனாலே சாதி உணர்வு கொறையலியா?"

"கொஞ்சம்தான் கொறைஞ்சிருக்கு. வர்ணாசிரம சித்தாந்தம் அவ்வளவு லேசுல சாய்ஞ்சிராது."

"அப்படியா சொல்றீங்க?"

"எளிய சாதி சனங்களைக் கட்டித் தழுவுன ராமானுஜர், 'எல்லா உயிர்களும் சமம்'னு கருணை காட்டுன வள்ளலார், ஆலயப் பிரவேசத்துக்கு ஆள் திரட்டுன வைத்தியநாத அய்யர், 'எல்லோரும் ஓர் குலம்'னு சொன்ன பாரதியார், 'தாழக் கிடப்போரைத் தாங்கிப் பிடிப்பதே தர்மம்'னு சொன்ன வைகுண்டநாதர் போன்ற பெரிய பெரிய மகான்களெல்லாம் இந்தச் சாதிய ஏற்றத்தாழ்வை எதிர்த்துத்தான் போராடுனாங்க.

ஈ.வெ.ரா. பெரியாரும் வ.உ.சி.யும் போராடுனாங்க. இப்ப, சிவப்பு சித்தாந்தம் போராடுது. மனுசனை மனுசனா நெனைச்சு, சமமா மதிக்குற மனுசநேய சித்தாந்தம் எல்லா சனங்க மனசுலேயும் வேர் புடிச்சாதான், சாதி உணர்ச்சி கொறையும்..."

பாலசுந்தரம் சொன்னதாகப் பேரன் சொல்லச் சொல்ல... அருஞ்சுனை நாடாருக்குள் திகைப்பு. இருட்டு. மருண்டு அலைபாய்கிற கண்கள், முகமெல்லாம் குழப்ப

ரேகைகள்... புரியாத பாஷை, புரியாத சொற்கள்... புரியாத கருத்துலகம்.

"என்னடா ஒண்ணும் வெளங்க மாட்டேங்குது?"

"எனக்குந்தான் வெளங்கலே... 'போகப் போகக் காலமும் வாழ்க்கையும் வெளங்க வைக்கும்'னு பாலசுந்தரம் சார் தைரியம் சொல்றாரு..."

'எப்படியோ... எல்லா மனுசங்களும் சமம்னு வந்தா சரி' என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டிருந்த நாடாருக்குள் பழைய நாட்கள்.

முப்பதடி தூரத் தீண்டாமை... முற்றத்தில் ஒதுங்கி, பதறி நின்ற நாட்கள்...

கெட்ட கனா கண்டவராக, பதறிப் பதைத்து மனம் குலுங்கிய அருஞ்சுனை நாடார் முன்பு, நல்ல கனாவாகப் பேரன் அருஞ்சுனை உட்கார்ந்திருக்கிறான்... வருங்காலக் குறியீடாக!

–ஆனந்தவிகடன், 15–9–2002

# பாரதத்தாய்

இன்னும் சரிமதியம் ஆகவில்லை. கால்மாட்டில் நிழல், சின்னதாகக் குறுகிக் கிடக்கிறது. அந்நேரத்தில் ஒற்றைச் சிறுவனாக பாண்டி பள்ளிக்கூடத்தை விட்டு வெறியேறினான். ஆர்வக் குதூகலத்தில் அவன் கால் பறந்தது. முதுகில் கனத்த பைக்கட்டு சந்தோஷமாகக் குதித்தது.

வெயில் சுள்ளென்று தொட்டது. பாண்டிக்கு புதுசாக—அதிசயமாகத் தோன்றியது. இந்த மாதிரி வெயிலில், பைக்கட்டோடு தன்னந்தனிமையாக போனதே இல்லை. பிள்ளைகளோடு ஆட்டமும் பாட்டமுமாய் வருவான். சண்டைகளும் சிரிப்பாணியுமாய் போவான்.

வெட்ட வெயிலில்—மதியத் தெருவில் தன்னந் தனியாக பைக்கட்டோடு நடப்பது... அவனுக்கு என்னமோ போலிருந்தது.

'அம்மா என்னத்துக்கு வரச் சொல்லியிருக்கா? அம்மா புஞ்சைக்குப் போகலியா? வீட்லேயா இருக்கா? என்ன செய்றா? ஒடம்புக்கு கிடம்புக்கு எதுனாச்சும் நோக்காடா?'

இனம் புரியாத குழப்ப நினைவு, ஒட்ட முடிவில் குலுங்கியதிர்ந்தது.

'அம்மாவுக்கு எதுனாச்சும் நோக்காடா' என்ற நினைப்பில் முட்டிக்கொண்ட பாண்டி, நிலைகுலைந்து போனான். கால்களின் உள்நரம்பு உருவப்பட்ட மாதிரி, நடையில் ஒரு சோர்வு. அயர்ச்சி. மனத்திகில்.

அம்மாதான் இவனுக்கு உலகம். அம்மாதான் நாதி. அம்மா இல்லாமல் வேறு ஜீவன் யாரும் இவனுக்குத் தெரியாது. அய்யாவை இவன் பார்த்ததேயில்லை. சாதிக் கலவரத்துலே வெட்டுப்பட்டு செத்துப் போனாராம் அய்யா.

இவனுக்குத் தெரிஞ்சதெல்லாம் அம்மா, அம்மா... அம்மாதான். அம்மா மட்டும்தான்.

அவளுக்கும் நோயா?

காலுக்குத் தெரிந்த மனசின் பதைப்பு. பரபரப்பாய் நடையை எட்டிப் போட்டது.

தெருவையடைந்தான். முக்கு திரும்பினான். அதோ நம்ம வீடு.

வீட்டுமுற்றத்தில் வெறுமை படர்ந்திருந்தது. தெளித் திருந்த சாணிப்பாலில் விழுந்த வெயில். அவரைப் பந்தல். இலைகளின் அடர்த்தி. நீலநிறப் பூங்கொத்தில் மொய்த்த சிறு ஈக்கள். கூரை வீடு.

"அம்மா... அம்மா... அம்மா..."

தவித்துப் பதைக்கிற பாண்டி மனசு. எல்லாச் சாமிகளையும் மனசுக்குள் முணுமுணுக்கிறான். அருஞ்சுனை காத்த அய்யனார் சாமியையும் கும்பிட்டுக் கொள்கிறான், மனசால்.

'எங்கம்மாவுக் என்னாமாச்சும் சீக்குகீக்கு வந்துருக்கக் கூடாது. நல்லாயிருக்கணும்.' பாசப்பதைப்பில் அலைப் புறுகிற சின்ன மனசு, குலதெய்வத்திடம் ஆறுதல் தேடு கிறது. பாதுகாப்பு தேடுகிறது. பயவுணர்வை தணிக்க முயல்கிறது.

"யம்மா... யம்மா... யம்மா வ்..."

வெயிலையே வெறித்த கண்கள், சட்டென்று வீட்டு நிழலுக்குள் வந்தவுடன், இருட்டில் முட்டிக்கொண்ட மாதிரியிருந்தது. ஏக இருட்டாகக் கறுத்துக் கிடந்தது. கண்ணை மூடிமூடி முழித்தான்.

ஏழெட்டு தடவை இமை தட்டி முழித்த பிறகு கண்ணுக்குள்ளிருந்த இருட்டு லேசாக விலகியது.

"யம்மா... யம்மா..."

"யாரு, பாண்டியா? வந்துட்டீயா?"

உள்வீட்டுக்குள்ளிருந்து வருகிற ரூபமற்ற குரல்.

"என்னம்மா?" பதற்றத்தில் நனைந்த மகனின் ஈரக்குரல்.

"ஒண்ணுமில்லேடா. என்னத்துக்குடா பதர்றே?"

"ஒடம்புக்கு கிடம்புக்கு?"

"அதெல்லாமில்லேப்பா. குத்துக்கல்லு மாதிரி யிருக்கேன். கொறை ஒண்ணுமில்லே."

"பெறவு? எதுக்கு என்னை வரச் சொன்னேம்மா?"

"ஊருக்குப் போகணும்டா. ஒரு செய்முறை. உன்னை வுட்டுட்டா போக முடியும்? அதா...ன், வரச் சொன்னேன்."

“ஊர்” என்றவுடன் பாண்டியின் மனசுக்கு றெக்கை முளைத்துக்கொண்டது. பொத்துக்கொண்டு பீறிட்ட சந்தோஷ ஊற்று.

“அய்ய்க்... அய்ய்க்... அடிசக்கைன்னானா...? ஊருக்காம்மா? எங்கம்மா?”

மகனின் குரல். குதூகலத் துள்ளலான குரல். அந்தச் சந்தோஷக் கும்மாளத்தில் இவள் நெஞ்சு நெகிழ்கிறது.

“மெம்மேனி (நென்மேனி)ப்பா...”

“ரொம்பத் தூரமாம்மா...?”

“ஆமா ராசா... ரெண்டு பஸ் மாறணும்.”

அம்மா குளித்திருக்கிறாள். ஈர உடம்பு, நீர்த் துளிகள். நெஞ்சு வரைக்கும் தூக்கிக் கட்டிய பாவாடையிலும் ஈரத்திட்டு. கொத்தாக கையில் சேலை. பூப்போட்ட சேலை.

“ஒனக்கு நல்ல சட்டை டவுஷர் இருக்காடா?”

“இருக்கும்மா... ராவுத்தருகிட்டே எடுத்த கோடு போட்ட சட்டையும், சந்தனக் கலரு டவுஷரும் இருக்கு.”

அம்மா அடுப்பங்கரைக்குள் போய்விட்டு, வந்திருந் தாள். சேலை உடுத்தியிருந்தாள். மடிப்புகளை வயிற்றுப் பகுதியில் சொருகிக்கொண்டே வந்தாள். காதோர ரோமங்கள் நனைந்திருந்தன. சோப்புவாசம் ‘கம்ம்ம்’ மென்று மணந்தது.

அம்மா முகமே மலர்ந்திருந்தது. கூடுதலான விரிவு. கண்ணில் ஒரு மின்னல். கன்னக்கதுப்பில் கனவாக மிதக்கிற சிரிப்பு.

ஊருக்குப் போற சந்தோஷமா? அம்மாவுக்குமா? கிராமத்துச் சிறுமிக்குரிய குதூகலம், இன்னும் அம்மாவுக்குள் ஒளிந்திருக்கிறதா? வெளிப்பட்டு கூத்தாடு கிறதா... ஊருக்குப் போகிற மகிழ்ச்சி.

"ஊருக்குப் போறதுலே ஒனக்கும் ரொம்ப ஆசையாம்மா?"

"அன்னாடம் பாடு சோலி... சோறு அடுப்புன்னு சீரழிஞ்சு சலிச்சுக் கெடக்கோம். இதுலேயிருந்து விட்டு வெலகி ஒரு நாளைக்கு நாலா மனுச மக்களோட பேசிச் சிரிச்சு இருக்குறதுன்னா... அது ஒரு சந்தோஷம் தானப்பா? உங்க ஆத்தாளும் மனுசிதானே?"

குழைவும் மிருதுவுமான புன்னகையோடு அம்மா சொல்கிறபோது அவள் முகத்தின் ஒளி. ஒரு பூவின் சிலிர்ப்பு.

பைக்கட்டை உரிய இடத்தில் வைத்துவிட்டான். மேல் சட்டையைக் கழற்றியெறிந்தான். வெளிப்பானைக்கு ஓடினான். பச்சைத் தண்ணீரை யள்ளி மேலே ஊற்றினான். காக்கி டவுஷர் நனைந்தது. குளித்து முடித்த கையோடு வீட்டுக்குள் ஓடினான். பாண்டிக்குள் பரபரப்பு. ஊருக்குப் போகிற உற்சாகப் பெருக்கு. ஆவல் தீவிரம். ரெக்கையடித்துப் பறந்தலைந்தான். ஓரிடத்தில் நிற்காமல், சுற்றிவிட்ட பம்பரமாய் ரவுண்டடித்தான்.

எல்லாம்... சில நிமிடங்கள்தான்.

இழுத்துக் கட்டிய கூந்தலும், எண்ணெய் மினு மினுப்புமாய் வந்த செம்பகம். பளிச்சென்று துலக்கி வைத்த செம்புப் பாத்திரமாய் மின்னுகிற பாண்டி. தாயும்

மகனும் வாசல்கதவைப் பூட்டி தெருவில் இறங்கும் போது—முகம் பூத்திருந்தனர். மனசு ததும்பி வழிந்தது.

ஊரின் கீழ்க்கோடியில் வட்ட மைதானம். பஸ் வந்து திரும்புகிற இடம். இன்னும் சில பெண்கள் அம்மாவைப் போலவே புத்தம் புதுசாக வந்திருந்தனர். களைவெட்டி முடித்து, உவர் பொங்கி உலர்ந்து வாடி வருகிற இவர்களைப் பார்த்திருக்கிறான், பாண்டி. இன்றைக்கு அடையாளமே தெரியவில்லை. அம்புட்டு மாற்றம். நல்ல நல்ல கலர்ச் சேலைகள். அதில் பூக்கள். மேட்சிங்கான ஜாக்கெட்கள். இழுத்துப் பின்னிய கச்சிதத்தில் தலைமுடி. பளிச்சென்று ஒளிபூசிய முகங்கள்.

அம்மாவும் அப்படித்தான். பாண்டிக்கு அம்மாவை இப்படி லட்சண வெளிச்சமாகப் பார்ப்பதில் பெருமை யாக இருக்கிறது.

"இன்னும் பஸ் வரல்லியே..."

"வர்ற நேரம்தான்."

"சாப்பாட்டு டயத்துக்குள்ளே போயிரலாமா?"

"ரெண்டு ரெண்டரைக்குள்ளே போயிரலாம்."

"கடா பெருசா?"

"பானெட்டு கிலோ தேறும்னு சொன்னாக. குருதை கணக்கா கொழுத்து நின்னுச்சு."

ஆள் ஆளுக்குப் பேசுகிறார்கள். கையசைப்புகளும், தலையசைப்புகளும், முகபாவனைகளுமாக அவர்கள் பேசுவது, பாண்டிக்கு வேடிக்கையாக இருந்தது. பஸ் வருகிற திசையையே பார்க்கிற பாண்டிக்குள், இனம் புரியாத குருட்டுப் பரவசம்.

*வேப்பமரத்து நிழலில் நிற்கிற அம்மாவின் முகத்தை அண்ணாந்து பார்க்கிறான்.*

*"யம்மா..."*

*"என்னடா... கண்ணு?"*

*"மெம்மேனி கோயிலுக்கா போறோம்மா...?"*

*"ஆமடா... அங்கதான் நம்ம சொந்தக்காரங்க கடா வெட்டி, பொங்க வைச்சு மொட்டை எடுக்குறாக... நாம போய் கறியும் சோறும் சாப்புட்டுட்டு மொய் செய்ஞ்சுட்டு வரணும். கெடாக்கறின்னா நீதான் உசுரா கெடப்பியே..."*

*"நம்ம கோயிலா வேதக் கோயிலாம்மா?"*

*"வேதக்காரவுக கோயிலுதான். ஆரோக்கியமாதா கோயிலு..."*

*"வேதக்காரவுக கோயிலுக்கெல்லாம் நாம போகலாமாம்மா?"*

*"போனா... என்னடா? எல்லாம் நம்ம சொந்தபந்த ஜனங்கதானே, அந்தக் கோயிலையும் கும்புடுறாக? எல்லாக் கோயிலும் நம்ம கோயிலுதான். எல்லா ஜனமும் நம்ம ஜனம்தான். மனுசமக்களை அண்டிப் பழகுறது தானே... மனுசலட்சணம்?"*

*"ம்ம்... ம்... அப்பச் சரி... இன்னிக்குக் கடாக்கறியை ஒரு பிடி பிடிச்சுர வேண்டியதுதான்."*

*பாண்டிக்கு எச்சில் ஊறியது. அவன் கண்கள் பஸ் வரும் திசையில் நங்கூரமிட்டது. 'எப்ப வரும், எப்ப வரும்' என்று மனசு கிடந்து தவிக்கிறது. ஆவல், கண்ணில் வந்து நிற்கிறது. உற்சாகத் துள்ளலில் அங்கும் இங்குமாய் நிலைகொள்ளாமல் காற்றாகத் திரிகிற பாண்டி. பாண்டியின் பின்னாலேயே சுற்றுகிற தாய்மைப் பார்வை.*

கறின்னா... குடியிருந்து திம்பான். கூலி வேலை பாத்து கஞ்சி காய்ச்சுற ஏழைச் சிறுக்கி நா. கறியெடுத்து குழம்பு வைச்சு சாப்புடற புள்ளையை ரசிக்கிற கொடுப்பினை இல்லியே. அந்த மனுசரு இருந்தாலாச்சும் ஆதரவா யிருக்கும். அந்த ஒழக்கரிசிச் சீவனும் போய்ச் சேர்ந்துருச்சு.

செம்பகத்தின் மனசு விம்மியது. கனத்து திணறியது. இழப்பின் பரிதவிப்பில் அலைப்புறுகிற நினைவு.

**சா**திக்கலவரம் நடக்குற நேரம். பஸ் கிஸ் வரத்தெல்லாம் நின்று போய் சாதிசனம் பூராவும் பயந்து செத்த நேரம். அங்குட்டு நாலு உசுரு, இங்குட்டு பதினோரு உசுரு போயிருச்சு. இன்னும் எத்தனை தலைக உருளுமோ.. என்ற திகிலான சமயம். வட்டாரமே நனைந்த துணியாக பயந்து துவண்டு முடங்கிக் கிடந்தது.

அப்பத்தான் தெருக்கோடியிலே ஒருத்தனை இன்னொருத்தன் அருவாளோட விரட்டுறான். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பதறியடித்துக் கொண்டோடு கிற கறுத்த இளவட்டம்.

பிடிபட்டு விட்டான். வெட்டு விழப்போற நேரம். பரமசிவம் வந்து கையைப் பிடித்துக்கொண்டான். திமிறுகிற அரிவாள்.

"வுடு மச்சான்... வுடு மச்சான் என்னை... அந்தச் சாதிப் பயல்லே ஒருத்தனைப் போடணும்."

தள்ளுமுள்ளு. இழுபறி. பிடிக்க... தடுக்க... திமிற... முண்டி மோத... தாவியோட... இந்தக் குழப்பத்தில்—

வெட்டு விழுந்துவிட்டது, பரமசிவத்தின் மேல். நெஞ்சின் குறுக்காக விழுந்த வெட்டு. சள்ளென்று

தெறித்த ரத்தம். ரத்தத்துடன் உயிரும் தரையில் நனைந்து பரவ—

செத்துக் கிடந்த புருஷன்மேல் விழுந்து கதறிய செம்பகத்தை ஊரே பரிதவித்துப் பார்த்தது.

செம்பகத்துக்குள் முட்டிக்கொண்டு பீறிடுகிற அழுகை. அடிவயிற்றில் பகீர் உணர்வு. மனசின் சூன்யம்.

செம்பகம் மனசுக்குள் பரமசிவம். அவனது திரேகம். அவனது சிரிப்பு... கேலி... நக்கல். இரவின் மடியில் அவன் புரண்டு, புரட்டி, எடுத்து, கொடுத்த இன்பம்... சுக ரணங்கள்.

சிவகாசி பஸ் வந்து வட்டமடித்து நிற்க... முதல் ஆளாக ஏறுகிற பாண்டி. இறங்குகிற ஆட்கள். ஏறுகிற பெண்கள். பஸ் புறப்பட்டது, அடுத்த நிமிஷமே.

ஜன்னலோரச் சீட்டில் பாண்டி. அம்மாவைக் கவனிக்கவே மனசில்லை. பஸ்ஸிலிருந்து பார்க்கிற கோணப் புதுமை. புஞ்சைகளெல்லாம் வட்டமடித்து பின்னோக்கி ஓடுகிற மாயம். மரங்கள் யாவும் 'விருட், விருட்'டென்று நகர்ந்து மறைகிற அதிசயம். அழகான ஆண்மயில்கள் கர்வமாக வேலிக்காட்டுக்குள் இரை பொறுக்குகின்றன. பெண் மயில்கள் குஞ்சுடன் பயந்து, குட்டோட்டமாக ஓடுகின்றன. அறுத்துப் போட்ட முத்து மாலையாக அணிசேர்ந்து பறக்கிற கொக்குகள். உழுத புஞ்சையில் புழுக்களைப் பொறுக்குகிற மைனாக்கள்.

பாண்டிக்கு குதூகலம். வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பாக மனசு. 'அய்ய்க்... அய்ய்க்...' என்று போடுகிற ஆனந்தக் கூவல் காடு.

சிவகாசி பஸ் ஸ்டாண்டில் இறங்கினர். ஸ்டாண்டு சுத்தமாக இருந்தது. புத்தம் புதிய சிமெண்டுத்தளம். கக்கூஸுக்குப் போகிறவர்கள். டீ குடிக்கப் போகிற வர்கள். பிராந்திக் கடைக்குப் போகிற மும்முரத்தில் சில இளவட்டங்கள்.

செம்பகம் மகனைப் பார்த்தாள். மகன் சிவகாசி பஸ் ஸ்டாண்டை பிரமிப்பாகப் பார்த்து மலைக்கிறான். ஜனநெரிசல். பஸ்நெரிசல்.

"வடை வாங்கித் தரட்டா?"

"வேண்டாம்மா..."

வேடிக்கை பார்க்கிற மும்முரத்தில் பாண்டி. ஒவ்வொன்றும் அதிசயமாக இருக்கிறது. பஸ்களுக் குள்ளேயே சினிமா நடக்குற அதிசயம். பஸ்களே கூட அதிசயம்தான். தனியார் பஸ்கள் ஜோடிக்கப்பட்ட அழகுத் தேர்களாக நிற்கின்றன. சர்க்கார் பஸ்கள் டப்பாக்களாக நிற்கின்றன.

கொஞ்ச நேரமாயிற்று.

செம்பகம் வரும் பஸ்ஸையே கவனித்துக் கொண் டிருந்தாள். இவர்கள் போகவேண்டிய பஸ் வந்தவுடன், ஓடிப்போய் ஏறினாள், மகனுடன். ஊர்க்காரர்கள் எல்லோரும் வந்து மொய்த்தனர். அங்குமிங்குமாக சிதறிப் போயிருந்தவர்களெல்லாம் ஓடிவந்து ஏறினர்.

மூன்று பேர் உட்காருகிற சீட்டில் செம்பகம். ஜன்ன லோரம் பாண்டி. அவளுக்கு அருகில் அடுத்த சீட்டில் ராவுத்தர். ஜவுளி ஏவாரி ராவுத்தர்.

கைலியும், கட்டம் போட்ட அரைக்கைச் சட்டையு மாகத்தான் சைக்கிளில் வருவார். கேரியலில் ஜவுளிப் பொட்டணம். ஆண்டில் பாரில் இரண்டு பெரிய பைகளில் ரெடிமேட் ஐட்டங்கள். புதன்கிழமை வரத் தவறமாட்டார்.

ராவுத்தர் இன்றைக்கு வேறுமாதிரி இருக்கிறார். தும்பைப் பூவாக வேட்டி. பிரகாசமான சந்தனக்கலர்ச் சட்டை. ஆளே நல்ல பளபளப்பாக இருக்கிறார். அவர் பக்கத்தில் அவரது மகள். அவரது நிழலாக—அவரது அச்சாக—அந்தச் சிறுமி. பாண்டி வயசுதானிருக்கும்.

ராவுத்தரைப் பார்த்தவுடன் மகிழ்ச்சியில் பூக்கிற செம்பகம். முகமெல்லாம் சிரிப்பு. அவர் முகத்திலும் சந்தோஷ வெளிச்சம்.

"வாம்மா... செம்பகம், எங்க தூரவா?"

"மெம்மேனி வரைக்கும். ஒரு செய்மொறைக்கு பாய், நீங்க தூரவா?"

"நானும் அங்கதான். உங்க ஊரு ஆரோக்கியம்தானே கெடா வெட்டி பொங்க வைக்காரு? எனக்கும் பத்திரிகை வைச்சாரு..."

"அப்புடியா! வாங்க... வாங்க... நாமெல்லாம் ஒண்ணடியும் மண்ணடியுமாய் — தாயா புள்ளையா... போய்ட்டு வருவோம்."

"ஆரோக்கியம் ஒன்னை மாதிரித்தான், செம்பகம். நம்மகிட்டேதான் எல்லாத் துணிமணியும் எடுப்பாரு. குடுக்கல் வாங்கல்லே நாணயமான ஆளு. நாச்சுத்தம்."

கண்டக்டர் டிக்கட் அடித்தார். டிரைவர் வண்டியில் ஏறி உட்கார்ந்துவிட்டார்.

ராவுத்தரின் மகள் தங்கப்பழமாக தகதகக்கிறாள். நல்ல கனிந்த சிவப்பு.

"படிக்குதா... பாப்பா?"

"ஆமாம்மா. பாண்டி மாதிரித்தான். ஏழாப்பு."

ராவுத்தர் நன்றாக ஷேவ் செய்து, முகம் பளபளப்பாக இருக்கிறது. நறுக்கு மீசையில் ஒன்றிரண்டு நரை. இடது பக்கம் உச்சியெடுத்து தலை சீவியிருந்தார்.

பஸ் புறப்பட்டது. நகர்விட்டு வெளியேறி தார்ச் சாலையில் பாய்ந்தது. பாண்டி ராவுத்தரையும், ராவுத்தர் மகளையுமே மலைப்போடு பார்த்தான்.

காக்கிச் சட்டை போட்ட ஒருத்தர் நடுக்காட்டில் கையாட்டி பஸ்ஸை நிறுத்தினார். டிரைவர் பக்கம் வந்து பேசினார்.

"இந்த ரூட்லே கலவரம். அருவாக் கம்போடு அம்பது பேரு நிக்காக. தனியார் பஸ்ஸெல்லாம் ரூட் மாத்தி, சுத்தி வளைச்சுப் போயிருச்சு."

"அப்புடியா? பஸ்ஸுக்கும் ஏதாச்சும் பண்ணுவாங் களா?"

"செய்யமாட்டாங்க. பஸ்ஸுக்குள்ளே ஏறி ஆளுரு தேடுவாக."

"யாரை...?"

"புள்ளையாரு செலையிலே செருப்பு மாலை கெடக்காம். ராவுத்தமாரை தேடித்தேடி அடிக்குறாங்க."

"ஸ்பாட் எது?"

"ராவுத்தமாரா இருக்குற ஊரு ஒண்ணு இருக்குல்லே? அதுக்கடுத்த ஸ்டாப்லே..."

“இப்ப நாம போகலாமா... வேண்டாமா?”

“போங்க. எதிர்ப்பு எதுவும் பண்ணாம ‘கம்ம்’முன்னு இருங்க. பஸ்ஸுக்குள்ளே ஏறித் தேடணும்னா... அலவ் பண்ணிருங்க. தேடிட்டு எறங்கிப் போயிரட்டும்.”

*கலவரம் என்றவுடன் செம்பகத்துக்குள் பகீர் என்றது. அடிவயிற்றில் ஒரு பயச்சிலிர்ப்பு. வெட்டுப்பட்டு ரத்தச் சகதியாகக் கிடந்த பரமசிவம், நினைவுக்குள் வந்து போக... அரண்டு போனாள். மகன் பாண்டியை பதற்றத்தோடு இழுத்து சேர்த்தணைத்துக் கொண்டாள். அவளுக்குள் ‘திக், திக்’கென்றது.*

*பஸ் முழுக்க பயமும் கிலியுமாக முணுமுணுப்பு. “அடக் கிரகச்சாரமே... ‘சாதி சாதி’ன்னு வேத்துமை பண்ணி வெட்டிக் குத்திச் செத்தாக. இப்ப என்ன டான்னா... ‘சாமி, சாமி’ன்னு வேத்துமை பண்ணி கூத்து கட்டுதாங்களா? மனுசமக்களை தாயாபுள்ளையா பழகவிட்டு நிம்மதியா இருக்க வுடமாட்டாகளோ...? பாவிப்பயக!”*

*யாரோ வெறுப்புடன் கத்திய சத்தம். கண்டக்டர் சத்தம் உயர்த்திச் சொன்னார்.*

*“யாரும் பயப்படாதீக. யாராச்சும் கேட்டா, மாதா கோயிலுக்குப் போறதாகச் சொல்லாதீக. கோட்டூர் குருசாமி கோயிலுக்குப் போறதாகச் சொல்லிருங்க...”*

*கேப்டனைப் போல வழிகாட்டி தலைமை தாங்குகிற கண்டக்டர்.*

*பஸ் நகர்ந்தது. செம்பகம் குலை பதறினாள். முகமெல்லாம் பீதியால் வெளுத்துக் கிடந்தது. உயிரற்ற*

முகமாக களையற்றுப் போயிருந்தது. மனசுக்குள் அச்ச வியர்வை.

அம்மாவின் பயத்தால் பாண்டியும் பயந்தான். இனம் புரியாத பயம். மைனாக் குஞ்சுவின் கண்ணாக பாண்டி வெலவெலத்துப் பார்த்தான்.

தாய்க்கோழி மாதிரி மகளை கைக்குள் அணைத்துக் கொண்டாள், செம்பகம். 'கழுத்துப் புருஷன் பறிபோன மாதிரி வயித்துப் புருஷனும் பறிபோயிரக்கூடாதே. பாழாய்ப் போன கூத்துவன் என்ன விதி வழிபண்ணி யிருக்கானோ...'

பயத்தில் நனைந்த நினைவுகள். அறுபட்ட கொடியாக துவண்டு வாடிப்போன செம்பகம்.

'பக், பக்'கென்றிருந்தது. சாவின் வாசலுக்குள் நுழைவது போன்ற கிலி.

ராவுத்தமார் நிறைய இருக்கிற ஊரைக் கடந்தது, பஸ். சுற்றிலும் வேலிக்காடு. பஸ் நடுங்கியது.

ரோட்டில் வீச்சரிவாளும், குத்துக்கம்புமாக முப்ப துக்கும் மேற்பட்ட மனிதர்கள்.

"ஏய்... நிறுத்து பஸ்ஸை... முந்துன ஸ்டாப்லே துலுக்கன் யாராச்சும் ஏறுனாங்களா?"

"இல்லே. பஸ்ஸை நிறுத்தவேயில்லே."

"ஏய். நாலு பயக உள்ள ஏறுங்கடா. எவனாச்சும் துலுக்கன் இருந்தான்னா. இழுத்துப் போட்டு வெட்டுங்கடா..."

பஸ்ஸுக்குள் ஏறுகிற நாலுபேர். கைகளில் வீச்சரி வாள். முகத்தில் வன்மம். கொலைவெறி மின்னுகிற கண்கள்.

செம்பகத்துடன் அப்பிக் கொண்டான், பாண்டி. பயத்தில் டவுஷரே நனைந்துவிட்டது.

"நீ யாரு.... ஒம்பேரென்ன... எங்க போறே..."

தடதடக்கிற கேள்விகள். மிரட்டலான கேள்விகள்.

"கோட்டூர் குருசாமி கோயில்..."

"சின்னையாபுரம்."

"கோட்டூர் குருசாமி கோயில்..." என்று பயந்து பயந்து உளறலாக பதில்கள்.

"நீ யாரு?"

"செம்பகம்."

"எங்க போற?"

"குருசாமி கோயிலுக்கு..."

"இது யாரு...?"

"எம்புள்ளே... பாண்டி"

சொல்வதற்குள் உயிர் அறுந்து போயிற்று, செம்பகத் துக்கு. அரண்டு மிரண்டு நடுங்கி... வெல வெலத்து...

"நீ யாரு?"

ராவுத்தர் திகைத்தார். அவர் முகத்தில் மரணபயம். பறவையாடுகிற பயக்கண்கள். பொய் சொல்லவும் முடியாமல், மெய் சொல்லவும் இயலாமல் தத்தளிக்கிற ராவுத்தர். உலர்ந்த உதடுகள். பயத்தில் உயிரிழந்த முகம்.

"யாருய்யா... நீ?" நின்று அரட்டுகிற ஆளுக்கு, சந்தேகம் உறுத்துகிறது.

செம்பகம் ராவுத்தரைப் பார்த்தார். ராவுத்தர் மகளைப் பார்த்தார். பாண்டி வயசு. தனது பிள்ளையின் வயசு. சின்னப்பூ. அரும்பு. வாப்பாவோடு அப்பிப்போய்க் கிடக்கிற சின்னக்குஞ்சு.

"யாருய்யா... நீ?" அரிவாளை ஓங்குகிற அந்த ஆள்.

"எங்க அண்ணன்தான்..."

செம்பகத்தின் குரல். சொன்ன பொய்யை உண்மையாக்க துரிதப்பட்டாள்.

"எங்க அண்ணன்தான். அது எம் மருமகள். குருசாமி கோயிலுக்கு செய்மொறை செய்ய வாராக."

கேட்ட ஆளுக்கு சந்தேகம் உறுத்துகிறது. நம்பாத கண்ணோடு செம்பகத்தைப் பார்த்தான்.

அதற்குள் முன்னால் நின்ற மூன்று பேரும்...

"வாடா... எறங்கு... பஸ் போவட்டும்" என்று அழைக்க, இவனும் இறங்கிப் போய்விட்டான்.

பஸ்ஸுக்கே உயிர்வந்த மாதிரியிருந்தது. மிகப்பெரிய மரணகண்டமே விலகிப் போன மாதிரி, எல்லார் மனசிலும் ஓர் அப்பா...டா!

நெஞ்சுக்குள் கட்டையாக நின்று அழுத்திய பீதி விலகிப் போன மாதிரியோர் ஆசுவாசம். செம்பகம் நெஞ்சில் வலது கையை வைத்தாள். தப்பித்தோமே என்ற ஆறுதல் பரவசம். இடது கை மகளை உணர்ச்சியோடு அழுத்தினாள்.

பஸ் முழுக்க தப்பிப் பிழைத்த ஆசுவாச மகிழ்ச்சியில் 'கசகசா' வென்ற பேச்சு. சலசலத்த பேச்சுச் சத்தம்.

'ஒஞ்சாமி, ஏஞ்சாமின்னு சண்டையை மூட்டி, நாட்டைக்கெடுத்து மனுசமக்களை நாசக்காடு பண்றதுக்கு ஒரு கூட்டம் கௌம்பிருச்சு..."

கண்டக்டர் நம்பிக்கையோடு சொன்னார்.

"மனுச மக்கள் புத்தியோட ஒத்துமையாயிருந்துட்டா... இந்தக் கூட்டம் நாசக் காடாயிரும்லே?"

பலவிதமான அபிப்பிராயங்கள். பேச்சுகள்.

பாண்டி கேட்டான், அம்மாவிடம்.

"ஏம்மா... ராவுத்தரை அண்ணன்னு சொன்னே?"

"ஒரே சாமிதான் எல்லா மனுசரையும் படைச்சிருந்தா... எல்லா மனுசரும் அண்ணன் தம்பிகதானே? அண்ணன் தங்கச்சிக தானேடா?"

ராவுத்தர் முகத்தைப் பார்த்தாள். ராவுத்தர் கண்ணெல்லாம் நினைந்து தளும்பிய மனஉணர்வு. உதடுகளின் விம்மலில் அவரது மனநெகிழ்வு.

வார்த்தைகள் தட்டுப்படாமல் போக... பார்வையின் கனிவிலும் குழைவிலும் உணர்வைச் சொல்லுகிற ராவுத்தர்.

அவர் கண்ணின் நீர்த்தளும்பலில் தெரிகிறது அவரது மனத் தத்தளிப்பு.

பெருந்தன்மையாகப் புன்னகைத்த செம்பகம் சொன்னாள். "வுடுங்க பாய். உங்க மகளைப் பாருங்க" என்றாள். சகல மனிதரையும் பிள்ளைகளாகக் கருதும் பாரதத்தாயின் பாச உணர்வு, செம்பகம் கண்ணில் மின்னுவதை ராவுத்தர் உணர்ந்தார்.

– செம்மலர் டிசம்பர்–2002

# தீயாகின்ற பூ

“இன்னைக்கு ரேஷன்லே அரிசி போடுறாகளாம்.”

றெக்கையில்லாமல் ஊரெல்லாம் செய்தி சிறகடிக்கிறது. எல்லா வீடுகளிலும் அது ஒரு பிரச்சினையாக முளைத்து, அடிமடியைப் பிடித்து இழுக்கிறது.

“என்ன செய்ய... என்ன செய்ய” என்ற கேள்வி வாசல் கதவாக அடைத்துக் கொள்கிறது. மூச்சு முட்ட வைக்கிறது.

“ஓடி ஓடி இந்தப் பாவிகளுக்கு ஓட்டைப் போட்டோமே... புழுத்துப்போன ரேஷன் அரிசி வெலையையும் ஒசத்திப் போட்டுட்டாகளே... ச்சீய்ய்!”

ஆள்ஆளுக்கு எரிச்சலும் கடுப்புமாய் முணுமுணுத்தனர். “நம்ம புத்தியை நைஞ்ச செருப்பாலே அடிச்சுக்கிடவேண்டியதுதான்” என்று சுயவிமர்சனப் புலம்பலும், அங்கலாய்ப்புமாக எரிந்து பொறிக்கிற ஊர்ஜனம்.

கூட்டை அடைத்திருந்த பலகைக்கல்லை முக்கி நகர்த்தினாள், சடைச்சி. ‘உர்ர்ர்... உர்ர்ர்’ரென்று குமமாளமாக உறுமின பன்றிகள். விட்டு விடுதலையான

மகிழ்ச்சியோடு பாய்ந்தோடின. சுருண்ட சின்னவாலின் நுனியாட்டத்தில் அதன் மனக்குதூகலம். 'குடு, குடு, குடு' வென்ற அதன் நெட்டோட்டத்தில் இரை நோக்கிப் பாய்கிற ஆவல் பறப்பு.

வீட்டு முற்றத்தில் ஊன்றப்பட்ட ரெண்டு கம்பத்தையும் இணைத்துக் கட்டிய கயிற்றில் காய்ந்து தொங்குகிற மாட்டுச்சவ்வுகள் தொலி. கூரைமுகட்டில் நின்று உலகையே ஜெயித்த மாதிரி கூவுகிற செவலைச் சேவல் கூரை முகட்டுத்தட்டைகளைப் பாதுகாக்கிற பதைப்பில் "சூ... சூ"வென்று சேவலை சத்தத்தால் விரட்டுகிறாள் சடைச்சி.

"என்ன... சடைச்சி, கூப்பன்லே அரிசி வாங்கப் போறீயா?"

"போடப் போறாகளா? எப்ப?"

"இன்னிக்கு"

செய்திப் பறவை அவளுக்குள்ளும் தீயை உமிழ்ந்து விட்டுப் போனது.

"ஐயய்யோ... ரூவாய்க்கு எங்க போக?" பற்றிக் கொண்ட கேள்வித்தீ. அவளுக்குள் அலைக்கழிவு. அலை பாய்கிற மனசின் தவிப்பு.

நேற்று ஊற்றிக்கொண்ட தண்ணிமப்பில் இன்னும் காலை அகட்டிக்கொண்டு மல்லாந்து உறங்குகிற புருஷனைப் பார்த்தாள். காலில் ஒட்டின சாணியை மாதிரி பார்த்தாள். மனசு சலித்து கசந்தது.

'ஆம்பளைதான்னு பேரு. ஆகுற காரியம் ஒண்ணுமில்லே. உப்புக்காகுமா, புளிக்காகுமா? ச்சேய்...'

*வெறுப்பில் முணுமுணுத்துக் கொள்கிற சடைச்சி. ஏழாப்பு வரைக்கும் படித்தவள். மனசுக்குள் கணக்குப் போட்டாள்.*

*“பானைஞ்சு கிலோ அரிசி. கிலோ மூனரை ரூவா, முன்னாடி. இப்ப ஆறு ரூவா. எம்புட்டாகும்? பத்துக் கிலோவுக்கு அறுவது ரூவா, அஞ்சுக்கு முப்பது ரூவா, ஆக மொத்தம் கூட்டுனா... தொண்ணூறு ரூவா... அடியாத்தாடி... அரிசி வெலையை திகிடுமுகிடா ஏத்திட்டாகளே. அவுக கையிலே புத்து பெறப்புட... ஏழைபாழைக வாய்லே மண்ணை வாரிப் போடவா... ஆட்சிக்கு வந்தாக? அட இழவே!”*

*கொதிபானைச் சோறாக தளதளத்து கொதிக்கிற நினைவுகள், அடிவயிற்றில் பகீரிடுகிற வெறுமை உணர்ச்சி. தகிக்கும் அந்த நினைவுகள், இந்தக் கேள்வியில் வந்து முட்டிக் கொண்டது.*

*‘இம்புட்டு ரூவாய்க்கு எங்குட்டுப் போக?’*

*முட்டிப்பாக இருந்தது, யோசனை. தன் போக்கில் நடக்க, அவளது கால்கள் நாடாக்கமார் தெருவை நோக்கி வந்தன. நடுத்தெரு டீக்கடையில் கூட்டம் சள்ளை பறிகிறது. டி.வி. இருக்கிறது. டி.வி பார்க்கிற கூட்டம் டீ குடிக்குதோ... டீயை குடிச்சிட்டு சத்தமில்லாம எந்திச்சுப் போகுதோ...*

*சிமிண்டு ரோடு... நடக்க இச்சிலாத்தியாக இருக்கிறது, பாறையில் நடக்கிற மாதிரி. முன்னால் தெருப்புழுதியாகக் கிடக்கும்.*

*காலை வைச்சா தாய்மடி மாதிரி மெத்து, மெத்துன்னு இருக்கும். பூமெத்தைமாதிரி மிருதுவாக*

இருக்கும். பெய்கிற மழைத்தண்ணீரையெல்லாம் சிறுவாடு சேத்து வைச்சு, தாய்மாதிரி பஞ்சகாலத்துலே திருப்பித் தரும்.

சிமிண்டுப்பாதை. பூமிமாதா மனசைக் கல்லாக்கி விடும்.

வடக்குத் தெருவுக்குள் வந்தாள். காலை வெய்யிலில் வீடுகளும், மரங்களும், கட்டிடங்களும் நீளம் நீளமான நிழல்களாக கீழே கிடந்தன.

நடையை வேகப்படுத்தினாள். சுப்பிரமணி மோலாளி அடிக்கடி வெளியூர் போகிறவர். டைரியும் கையுமா அலைவார். ஊர்ச்சோலிகளுக்காக ஊர் ஊராகத் திரிவார்.

நாம போற நேரத்துலே அவரு எங்காச்சும் வெளியூரு போய்ட்டார்னா? நம்ம கதை, நாய் வாய்லே சிக்குன சக்கரைச் சாக்காகிப் போகுமே.

உள்பதைப்பு, காலுக்குப் புரிந்தது. வேகுவேகென்று நடந்தாள், சடைச்சி.

'நல்லவேளை! இம்மியளவுலே தப்பிச்சோம்.' அவள் மனசு ஆசுவாசப்பட்டது. வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சட்டையும் கைப்பையுமாக வாசலுக்கு வெளியே வந்து நின்றார், சுப்பிரமணி மோலாளி. எங்கோ பயணம்.

தக்கென்று வந்து நின்றாள், சடைச்சி.

"என்னம்மா..."

"ஒங்களைப் பாக்கத்தான் ஓடியாந்தேன்."

"ஏன், என்ன வெஷயம்?"

“கூப்பன்லே அரிசி போடுதாகளாம், மோலாளி.”

“ம், அதுக்கு?”

“ஒரு நூறு ரூவா... குடுத்தீகன்னா... எப்புடியும் ஒப்பேத்திரலாம்.”

“நாங்க ஏதாச்சும் ஒனக்கு சம்பளப்பாக்கி தரணுமா?”

“நேத்தும் முந்தாநாளும் நம்ம தெக்குப்புஞ்சையிலே மக்காச்சோளத்துக்கு களை வெட்டுனோம்லே?”

“சரி... இந்தா...”

“நாளைக்கு நம்ம புஞ்சையிலே வேலையிருக்கா?”

“தெரியலே. அவாகிட்டே கேட்டாத்தான் தெரியும். இல்லாமலா இருக்கும்?”

“இருக்கோ... இல்லியோன்னு தெரியலே, மோலாளி.”

“தெரிஞ்சா... வேற யாருக்கும் கூலி வேலைக்குப் போறதுக்கு ஒனக்கு தோதா இருக்கும்லே.”

“நா அம்மாகிட்டே கேட்டுக்கிடுதேன். நம்ம புஞ்சையிலே வேலை இருந்தா... ‘இங்க’தான் வருவேன், வேலை இல்லாட்டாத்தான் மத்த ஆளுக புஞ்சைக்கு.”

“சரி. கூலிக் கணக்கு என்ன ஏதுன்னு அவாகிட்டே கேட்டு, இந்த ரூவாயை கழிச்சுக்க.”

“நீங்க தூரவா போறீக. மோலாளி (முதலாளி)?”

“சீலத்தூர்லே இன்னிக்கு பம்பு செட்டு விவசாயிக போராட்டம். அதுக்குப் போறேன்.”

கையில் ரூபாய் வந்துவிட்டது. மனசின் ஆசுவாசம். மேக நிழல்மாதிரி வந்து போய்விட்டது. நாளைக்கு

இவுகளுக்கு வேலை இருக்கா, இல்லையா என்ற கேள்வி, கனமாக நின்று அழுத்தியது, இப்போது.

இருக்கிற மாதிரியும் தோன்றுகிறது. இல்லாத மாதிரியும் தோன்றுகிறது. என்ன செய்ய? இந்த அம்மாவும் எங்கு போய்ட்டாக? தெரியலியே... கண்ணுல தட்டலியே...

“சடைச்சி, நெல்லுக்குள்ளே களை புடுங்கணும். வாரீயா?”

இப்படி யாராவது கூப்பிட்டால் என்ன பதில் சொல்றது?

வர்றேன் சொல்லவா? வரலேன்னு சொல்லவா?

தெளிவில்லாத குழப்பம். திகைப்பு.

சுப்பிரமணி புஞ்சையிலேயும் வேலையில்லாமல் போய், கூப்பிடுகிறவர்களிடம் வரவில்லை என்று சொல்லி... நாளைக்கு வேலையேயில்லாமல் போகுமே...

ஊஞ்சலில் ஆடவா? கூரை நிழலில் உட்கார்ந்து பேன் பார்க்கவா? சோத்துக்கு வழி? பேனைப் பாத்துட்டு பானையைப் பாத்தா, என்ன இருக்கும்?

நடை நிதானப்பட்டது. நடையின் மீதே நினைவு இல்லை. சடைச்சி மனசெல்லாம் அதே குழப்பம், திகைப்பு.

‘நாளைக்கு என்ன செய்ய?’

ரேஷன் கடைக்குப் போய் வந்தாள். அரிசி வாங்கி வந்தாள். அடுப்பு வேலையை முடித்த நேரத்தில் மகன் வந்து சேர்ந்தான். சோற்றைப் போட்டுக் கொடுத்துவிட்டு...

"உங்கப்பனை எந்திச்சு திங்கச் சொல்லு."

என்று போகிற போக்கில் வார்த்தைகளை எறிந்து விட்டு, காலில் டயர் செருப்பை மாட்டினாள். ராசாங்க நாயக்கர் புஞ்சையை நோக்கி நடையை எறிந்தாள். ஏறுபொழுது சுள்ளென்று நெற்றியில் காந்துகிறது.

கம்பந்தட்டை அறுப்பு, கொஞ்சம் தாமதமாயிற்று. ராசாங்கநாயக்கர் வையமாட்டார். "என்னம்மா இம்புட்டு லேட்டு?"ம்பார்.

"நேரமாச்சுன்னாலும்... எனக்கொதுக்குற நிரைகளை அறுத்துப் போட்டுப் போறேன்"னுட்டா... 'சரி'ன்றுவாரு.

சுப்பிரமணி மாதிரி இவரும் தங்கமான மனுசரு.

கெஞ்சலை கூத்தாடலை. மன்றாடலை. கேட்டவுடனே பிகு பண்ணிக்காமல், கிராக்கி பண்ணாமல் ரூபாயைத் தூக்கிக் கொடுத்துவிட்டார், சுப்பிரமணி முதலாளி. உழைக்குற ஆளுகளை மதிக்கிறவரு. பன்னிமேய்ச்சி, மலம் பெருக்கிக் கூட்டுகிறவளையும் 'மனுசி' என்று மதிக்கிற மனுசரு.

ரெண்டு வருஷத்துக்கு முந்தி.

வட்டிக்குக் கடன் கொடுத்து வசூல் பண்ணுகிற நடராசனிடம் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கியிருந்தாள். சடைச்சி. பதிமூன்று மாசம் கழித்து, கணக்கு முடிக்கத் தயாரானாள். ரெண்டு பன்னிகளை வித்து வந்த பணம்.

வட்டிக் கணக்கு கூட்டிக் கழித்து, பெருக்கி மல்லுக் கட்டினார். தொகையைச் சொன்னார்.

"ரொக்கம் மொத்தமா தர்ரேன். மூனு மாச வட்டியைத் தள்ளிக்கிடக் கூடாதா, மோலாளி?"

நயந்த குரலில் குழைவாகக் கேட்டாள். நடராசன் மெல்லிசாக சிரித்தான். "தள்ளிக்கிடுதேன். நீ கதவைத் தள்ளிச் சாத்து"–நரிப்பேச்சு எச்சிலா வழிகிறபோதே பயமில்லாத திமிரில் கையை நீட்டினான், அவளது மார்பை நோக்கி.

சடைச்சியின் நயந்த கண்கள் சட்டென்று கத்தியாகப் பாய்ந்தது. இமை விரிந்த கண்ணின் விறைப்பில் நடராசன் தடுமாறினார்.

"ச்சீய்ய்க்! வெளியே போ. தெருவுலே நின்னு ஒந்துட்டைப் பொறுக்கிட்டுப் போ."

தீக்கங்காகத் தெறித்த வார்த்தைகள். பத்ரகாளியாக கையை நீட்டி நின்ற பயங்கரம். ருத்ராக்னியாக அவள் தகித்து வெகுண்ட உக்கிரம்.

பயந்தடித்துக் கொண்டு வெளியேறிய நடராசன் பலவீனமான கோபத்தில் மெல்லச் சீறினான். "ஏய்.., சாதி பாக்காம வார்த்தையை எறியாதே..."

"நீயெல்லாம் மனுசனாய்யா? செக்கு எது சிவலிங்கம் எதுன்னு தெரியாம திரியுற நாய்க்கெல்லாம் ஏதுய்யா சாதி? சாதிகெட்ட ஆளுக்கெல்லாம் மரியாதை எதுக்குய்யா?"

நடராசன் மாதிரி ஏகப்பட்ட ஈனப்பயல்கள் இருக்கிற ஊரில்தான், சுப்பிரமணி மாதிரி நல்ல மனுசரும் இருக்காரு.

மனசுக்குள் நினைவுகள் நீண்டுகொண்டே போயிற்று. 'நாளைக்கு என்ன செய்ய?' என்ற கேள்வியில் வந்து முட்டிக்கொண்டது. திகைப்பாகவே இருக்கிறது.

* * *

சாயங்காலம் சடைச்சி நார்ப்பெட்டியும் மஞ்சள் பையுமாக கடைக்குப் போனாள். கடையில் ஏகமாய் ஆட்கள், ஏழெட்டுப் பெண்கள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தனர். சரக்கு வாங்குவதில் 'நான், நீ' என்று முண்டினர். கடைக்காரரும் 'பொடு, பொடு'வென்று சரக்கு கொடுத்துக் கொண்டிருந்தார்.

சடைச்சி ரொம்ப ஒதுக்கமாயிருந்தாள். கீசாதிக் காரியாச்சே.

கீழத்தெரு கிருஷ்ணராஜ் வந்து நின்றார். அவரும் பெரிய சம்சாரி. கதர் வேட்டியும், கதர் பனியனுமாய் நின்றார்.

"என்ன சடைச்சி, இன்னிக்கு யாருக்கு வேலைக்குப் போன?"

"ராசாங்க சாமியவுக புஞ்சைக்குப் போனேன், சாமியோவ்."

"கொறை வேலை கெடைக்கா?"

"இல்லே சாமி முடிஞ்சிருச்சு."

"நாளைக்கு யாரு புஞ்சைக்குப் போறே?"

"இன்னும் சரியாத் தெரியலே."

"சுப்புரமணி புஞ்சைகளுக்கே பதிவா வேலைக்குப் போவியே. அவரு புஞ்சைக்குப் போறீயா?"

"என்னன்னு இன்னும் தெரியலே. என்ன சாமி...?"

"அப்ப நாளைக்கு மக்காச்சோள விதை ஊனுறதுக்கு வாரீயா?"

"வேலை உறுதியா, சாமி? நிச்சயமா...?"

"காலைக்கரண்டு த்ரீபேஸா வந்தா வேலை நிச்சயந்தான்."

"த்ரீபேஸ் வரலைன்னா...?"

"வந்துரும். நிச்சயமா வந்துரும்."

"வரலேன்னா...?"

"வந்துரும் சடைச்சி கட்டாயமா வரும்."

அதற்குமேல் அழுத்த வாய் வரவில்லை. கட்டண் ரைட்டாகக் கேட்க மனசில்லை. தாட்சண்யம் பார்க்க வேண்டியிருக்கிறது பார்க்கலாம். கரண்டு வந்தால், பம்ப் ஷெட் மோட்டார் ஓடும், நீர் பாயும், விதை ஊன்றலாம். கரண்டு இல்லையென்றால் வேலை யில்லை.

இதுதான் நிச்சயம்.

சரி. நாளைக்கு வேலையிருக்கா, இல்லியா?

உறுதியாகத் தெரியவில்லை.

சடைச்சிக்குள் சஞ்சலம். நினைவுக்குள் பிடிபடாத நிலவரம். குழப்பமும் திகைப்புமான மாயம். சலன மடைகிற நினைவுகள்.

கடைச்சரக்கு வாங்கிக்கொண்டு போனாள். கல் தொட்டியில் ரெண்டு பன்னிகளும் 'உர்ர், உர்ர்'ரென்று

கஞ்சித் தண்ணியைக் குடித்தன. மகிழ்ச்சித் துள்ளலில் ஆடுகிற அதன் சிறுவால், முரட்டு ரோமங்களிடையே கறுத்த தோலில் ஓடுகிற பரவசப் புல்லரிப்பு அலைகள்.

பன்னிகளையே பிரியத்துடன் பார்த்து மயங்கி நிற்கிற மூத்த பயல்.

*   *   *

கருகருவென்று மயங்குகிற நேரம், புழுக்கமும், இறுக்கமுமாயிருந்தது. ஒரு பொட்டு காற்றுகூட இல்லை. கனத்து கறுத்த மேகங்கள் கூடி கூடி நின்றன. செவ்வானத்தை மேகங்கள் மறைத்துக்கொள்ள, சட்டென்று இருட்டியது.

மழைக்கோப்பாக இருக்கிறதை எல்லோரும் உணர்ந்தனர். மழை கிழை வருமோ என்று ஆள்ஆளுக்குப் பேசிக் கொண்டிருந்தனர்.

அடுப்புக்குள் விறகைத் தள்ளினாள். சாம்பாருக்குள் உப்பை அளந்து போட்டாள். முழங்கால் வரை தீயின் வெக்கை சுட்டது.

"சடைச்சி... சடைச்சி..."

சின்னக் குடிசை வாசலுக்கேற்ப தலைதாழ்ந்து குனிந்து நின்று கூப்பிடுகிற யாரோ.

"யாரது?"

"நாந்தான் சடைச்சி..."

சுப்பிரமணி பெஞ்சாதி.

"அட, நீங்களாம்மா...? என்னம்மா?"

பாசமும் பதற்றமுமாய் தடபுடவென்று எழுந்து வந்தாள்.

“என்னம்மா சங்கதி?”

“ஒண்ணுமில்லே. மழை பேஞ்சிட்டா விடியக்காலம் நம்ம மஞ்சணத்திப் புஞ்சையிலே பருத்தி விதை ஊனனும்.”

“ஆட்டும்மா. இதுக்கு நீங்க இங்க வரணுமாக்கும்? யாரு கிட்டேயாச்சும் சொல்லிவிட்டா போதாதா?”

“இருக்கட்டும். சடைச்சி, நா வாரேன்...”

“பாத்துப் போங்கம்மா. பன்னிச்சாணியும், கோழிப்பீயுமா கெடக்கும்.”

போய்விட்டாள்.

சடைச்சி மனசுக்குள் சஞ்சலம். கிருஷ்ணராஜ் வந்தார். மனசுக்குள் இலேசான சலனம். ‘என்ன பதில் சொல்ல, அவருக்கு?’

‘நிச்சயமில்லாம கூப்புட்டவரு. உறுதியில்லாம ஒப்புதல் தந்துருக்கு. இது எப்படி என்னைக் கட்டுப் படுத்தும்?’

அவளே அவளுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டாள். சாம்பாராகக் கொதிக்கிற மனசுக்குள் கரண்டியைப் போட்டு கடைய கடைய நுரை அடங்கு கிறது.

விடிவதற்கு முன்பே விழித்துவிட்ட சடைச்சி, அரக்க பரக்க அடுப்பு வேலையை முடித்துவிட்டு, வாயில் ரெண்டை அள்ளிப் போட்டுவிட்டு புறப்பட்டாள்.

கூரைத் தட்டையிலிருந்து இன்னும் சொட்டடிக்கிறது. தெருவெல்லாம் அலசிக் கழுவின மாதிரி சுத்தம். மிருதுவான மண். நடுச்சாமத்தில் பிடித்த மழை, பாட்டம் பாட்டமாய் அடைத்துக்கொண்டு பெய்தது. மழை விட்ட பிறகும் மாவுத்தூசியாக தூறல்கள். 'நொய், நொய்'யென்று விடாத சாரல்.

கிடங்குக் காட்டுத்தவளைகள் ராத்திரியிலேயே 'வித்தெடு, விதையெடு' என்று கூட்டம் கூட்டமாக கூப்பாடு போட ஆரம்பித்தன.

இருள் முகம் கரைகிறது. மெல்ல மெல்ல சாம்பல் நிற வெளிச்சம். 'வேகுவேகெ'ன்று நடந்த சடைச்சி, தெருவைக் கடப்பதற்குள், மறித்துக்கொண்டு நிற்கிற கிருஷ்ணராஜ்.

"என்ன சடைச்சி நம்ம புஞ்சைக்குத்தானே வாரே? மக்காச்சோள விதை ஊனத்தானே?"

"இல்லே சாமி..."

அவர் முகத்தில் இறுக்கம். கோபவெக்கையில் பெருமூச்சு. முறைத்துப் பார்வை.

"நேத்து வாரேன்னு சொன்னீயே..."

"நீங்களும் நிச்சயமாச் சொல்லலியே, சாமி... த்ரீபேஸ் கரண்டு வந்தாத்தான்னு... ஒரு 'க்க்' கன்னா வைச்சுத் தானே சொன்னீக?"

"பெறகு... யாருக்குப் போற?"

"சுப்புரமணி மோலாளி புஞ்சைக்கு. பருத்தி விதை ஊனப் போறேன்."

"இது நல்லால்லே... சடைச்சி."

"எது?"

"சுப்புரமணிக்கும் வாரேன்னு சொல்றது. எனக்கும் வாரேன்னு சொல்றது. நெனைச்ச எடத்துக்குப் போறது? அப்படின்னா... ஞாயம் எங்க இருக்கு? இருந்து இருந்து ஓஞ்சாதிப் புத்தியைக் காட்டிட்டீயே..."

சஞ்சலமும் குற்ற உணர்வுமாய் தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருந்த சடைச்சிக்கு, சண்டாளமாய் பொங்கி வந்த கோபம். 'திருதிரு'வென்று திரேகமே காந்தியது. பத்ரகாளியாய் ருதராக்னியாகப் பார்த்தாள். வெடித்துச் சிதறினாள்.

"சாதி கீதின்னு பேசுனா... சரிப்படாது. மான மரியாதையைக் காப்பாத்திக்கிடணும். எங்க சாதிப் புத்தியிலே என்ன கொறையைக் கண்டுட்டீக? உங்க சாதிப் புத்தியிலே இல்லாத ஈனமா?"

"ஏய்... வார்த்தையை அடக்கிப் பேசு. செவுளைப் பேத்துருவேன். பொட்டச்சியாயிருக்கீயேன்னு பாக்கேன்."

"எங்கே...? நீ சரியான மீசை மொளச்ச ஆம்பளையாயிருந்தா எம்மேலே கையை வைச்சுப்பாரு. கதை கந்தலாகிப் போகும்."

"என்னடீ செய்வே? சின்னசாதி நாயே."

"போடா ஈனச்சாதி நாயே. நெஞ்சை வகுந்து பொளந்துருவேண்டா..."

"ஏய்ய்ய்க்..."

*நரம்புகள் விறைக்க... கன்ன எலும்புகள் புடைக்க... மட்டியைக் கடிக்கிற கிருஷ்ணராஜ். காட்டுக் கத்தலாகக் கத்துகிற மூர்க்கம்.*

*பயப்படாத துணிவோடு வன்மக் கோப வெக்கையோடு விறைப்பாகக் கையை நீட்டுகிற சடைச்சி. சுட்டு விரலை உயர்த்தி சவால் விடுகிற உக்கிரம். சரிமல்லுக்கு நிற்கிற போர்க்குணம்.*

*"ஏய், ஓய்ங்குற கத்தலையெல்லாம் அங்குட்டு வைச்சுக்க. சாதியா எங்களைப் பாக்குற கொம்பன் எவராயிருந்தாலும் மோதிப் பாத்துருவம். போட்டுப் பாத் துருவம்...! எங்களை மனுசரா நெனைக்குற சுப்புரமணி மோலாளி மாதிரி நல்ல மனுசங்களை நாங்களும் மதிக்கத்தான் செய்வோம். ஒன்னாலே ஆனதைப் பாத்துக்க போய்யா..."*

*மழை பெய்து நனைந்திருந்த ஈரமண்ணில், தன் மான வெப்ப மனசோடு தக்தக்கென்று நடந்தாள் சடைச்சி.*

*அதிர்கிறது, பூமி.*

**—தீக்கதிர் தீபாவளி சிறப்பு மலர் 2002.**

# நாட்டுக்கோழி

சாம்பலை கையால் அள்ளிக்கொண்டு வெளிப் பானைக்கு முன்னால் குத்துக்கால் வைத்து உட்கார்ந் தாள், ராசக்கா. அங்கே இழுவின குழம்பும் ஒட்டுன பருக்கைகளுமாய் சட்டிகளும், அலுமினியப் பானைகளும், வட்டில்களும், தம்ளர்களுமாய் குவிந்து கிடந்தன.

பானைத் தண்ணீரையள்ளி ஊற்றினாள். ஈரக் கையால் சாம்பலைத் தொட்டு பாத்திரத்தின் உள்ளும் புறமுமாய் 'வரட், வரட்'டென்று இழுத்தாள். தேய்த்தாள் பாத்திரம், பாத்திரமாக.

கைகளில் விரைவு. பாய்ச்சல் வேகம். இன்னும் பொழுது புறப்படவில்லை. சட்டி பானை கழுவி, உலை வைத்து, சோறாக்கி, ரெண்டு குழம்புப்பாடு பாத்து, புள்ளைக்குப் போட்டு பள்ளிக்கு அனுப்பி... புருஷனுக்கு போட்டு வேலைக்கு அனுப்பி... தானும் ரெண்டை அள்ளி வாயில் போட்டுக்கொண்டு 'அவக், தொவக்'கென்று நாராயணசாமி நாயக்கர் புஞ்சைக்கு ஓடணும்.

மென்னியைப் பிடித்து நெட்டித் தள்ளுகிற நிமிடங்கள்.

"அட இழவே... நேரம் ஓடுதே நாலுகால் பாய்ச்சல்லே... நா என்ன செய்வேன்? இம்புட்டு வேலைகளையும் எப்ப முடிச்சு... எப்ப போக..."

மனசு திமிறிக்கொள்ள... சள்ளையோடு முணுமுணுத்தாள், ராசக்கா. கைகளுக்கு றெக்கை முளைத்த மாதிரி இருந்தது. தொற்றிக்கொண்ட சுறுசுறுப்பு. மனப் பரபரப்பு.

அவசர அவசரமாகக் கழுவியெடுத்தாள். சாம்பல் கோழி 'கேர், கேர்' என்று கிட்ட வந்தது. இவளை சிநேகிதமாகப் பார்த்தது. இவள் வழித்துப் போட்டிருந்த குழம்பையும், சோற்றுப் பருக்கைகளையும் கொத்தியது. தற்காப்புணர்ச்சியற்ற நம்பகமான சாந்தத்தோடு ஆற அமரக் கொத்தியது.

ராசக்கா அந்தக் கோழியை ஒரு பாசத்துடன் பார்த்தாள். அம்மா கொடுத்தனுப்பிய சீதனம். ஏழெட்டு மைல் தாண்டினால் அம்மா வீடு. தார்பாய்ச்சி வேட்டி கட்டிக்கொண்டு மாட்டைப் பத்திக்கொண்டு திரிகிற சம்சாரி அய்யா.

பத்து நாளைக்கு முந்தி போயிருந்தாள், அய்யா ஊருக்கு.

புருஷனைப் பற்றி ஒரு மூச்சு அழுது கொட்டினாள். பாட்டம் பாட்டமாய் அழுகை மழை.

அம்மாகூட எரிச்சல்பட்டாள். சிடுசிடுப்பாய் கடுகடுத்தாள். "ஏண்டி, நெறைஞ்ச வீட்லே வந்து மூதேவிகணக்கா 'முசுமுசு'ன்னு அழுவுறே?"

"அப்புடியாப்பட்ட ஆளுக்கு என்னைக் கட்டி வைச்சிருக்கீக? செமை கொறைஞ்சா போதும்னு தள்ளிவிட்டுருக்கீக..."

"ஏய்... வாயிருக்குன்னு நாக்கை அலைக்காதேடி. அளந்து பேசு. கல்யாணம் மூய்றப்ப ஒம்புருஷன் குடிக்கிற ஆளா இருந்துச்சா?"

"இல்லே."

"அப்புறமும் அந்த ஆளு... நல்ல நாளு, திருநாளுக்குக் கூட அதை மோந்து பாக்காமத்தானே இருந்துச்சு?"

"ஆமா."

"அதுக்குப் பெறகு குடிக்கப் பழகி... நிரந்தரக் குடிகார னானா... நாங்களா பொறுப்பு? நீ வைச்சு வாழ்ந்த லட்சணம் அப்புடி."

"ஊருக்கு நாப்பது, வீதிக்கு நாலுன்னு ஒயின் ஷாப்பைத் தெறந்து வைச்சுட்டாக... பாட்டிலை சைஸ் சைஸா அடுக்கியிருக்காக. அடக்கமான ஆம்பளைகூட ஆட்டங்கண்டு 'அங்க போய்' நிக்காக. அப்புறம் அதுவே கதின்னு ஆயிப்போறாக. அதுக்கு நா என்ன செய்ய முடியும்?"

"சர்க்காரு பண்ணுற கோணக் கூத்துலே நல்ல சனங் களும் நாசமாகுது. அதுக்கு நீயும் நானும் முட்டிக்கிட்டா எப்படி?"

"எல்லா எந்தலையெழுத்து..." வேசடையில் அழுத்திச் சொன்ன ராசக்கா, குடிகாரப் புருசனைப் பத்தி வெள்ளம் வெள்ளமாக அங்கலாய்த்தாள். புலம்பித் தீர்த்தாள்.

மனச்சுமை குறைஞ்ச மாதிரியிருந்தது. புறப்பட்டாள். புறப்படும்போது – அம்மாதான் சொன்னாள்.

"ராசி, போறப்ப... அந்தச் சாம்பக்கோழியை புடிச்சுட்டுப் போ."

"ஏழு குஞ்சோட திரியற கோழியையா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்த அய்யா. நெஞ்சு ரோமமெல்லாம் கரிசல் மண்கட்டி சலங்கைகளாகத் தொங்கியது. நரைத்த மீசையை ஒதுக்கிவிட்டிருந்தார். கரண்டைக்கால் வரை கிடந்த வேட்டியில் கரிசல் மண் வரிவரியாக ஒட்டியிருந்தது.

"ஆமா... குஞ்சைக் கொத்த ஆரம்பிச்சிருச்சுல்லே? கோழியை நம்ம மகா கொண்டுக்கிட்டுப் போகட்டும்."

"ரூவாயைக் குடு. வேற கோழியை வெலைக்கு வாங்கிக்கிடட்டும். நம்ம கோழியைக் குடுக்க வேண்டாம்."

"ஏம்யா? பெத்த மகளைவிட, சாம்பக்கோழி ஒமக்கு முக்கியமாப் போச்சா?"

"அதுக்கில்லே ராசி. சம்பந்தக்காரங்களுக்கு கோழி, ஆடு, மாடு குடுக்கக் கூடாது. குடுத்தா... உங்க வீடு பொங்கி வழியும், குடுத்த வீடுதான் கோழி வம்சம் அத்துப்போகும்."

"மகா வீடு பொங்கி வழிஞ்சா மனசுக்குச் சந்தோசந்தானே?"

"எங்க வீடு கோழி தங்காமப் போனா... இல்லாம பூண்டத்துப் போனா... சந்தோசப்படணுமா?"

கோபமில்லாமல் சத்தமுயர்த்தி கேட்கிற அய்யா. நிமிர்ந்து பார்க்கிற மகளின் இமை ரோமங்களில் நீர்ச்சுவடு. அழுது புலம்பிய அங்கலாய்ப்பின் நிழல்.

*"எங்க வீடு வேற... உங்க வீடு வேறயா? இது என்னய்யா?"*

*"நீ போய் நொழைஞ்ச வீடு தாழையடி அய்யனார் வம்சம். நம்ம வீடு அந்தரமுடையார் வம்சம். ரெண்டும் ஒண்ணா?"*

*"ஒண்ணு இல்லே. ரெண்டுபட்டு வேத்துமைப் படணுமா? எம்மேலே உசுரையே போட்டு பாசமா யிருப்பீகளே... கோழி ஒரு பெருசா?"*

*"ராசி... நீ புரியாமப் பேசுதே. 'ரூவாயைக் குடு, கோழியைக் குடாதே'ன்னுதானே சொல்லுதேன்?"*

சிரித்துக்கொண்டே விடாப்பிடியாகப் பேசுகிற அய்யா மேல் துண்டால் திண்ணைத் தூசியை தட்டிவிட்டு உட்கார்ந்து மகளைப் பார்க்கிற கண்ணில் பாசக்குழைவு.

அய்யாவின் பாசத் தங்கத்தில் மாற்று குறைந்திருப் பதை மனசால் உணர்ந்து விசனப்படுகிற ராசக்கா. கண்ணில் வெளிப்படாமலிருக்க தரை நோக்கும் பார்வை.

முகம் குறாவும் மகளைப் பார்த்து மனம் பதைபதைக் கிற தாய்க்காரி. வெட்டுப்பட்ட கீரைத்தண்டாக வாடிப்போன மகளுக்காக கோபமாக புருஷனைப் பார்க்கிறாள். முறைப்போடு சத்தம் போடுகிறாள்.

*"ஏய்... இந்தா, கிறுக்கு மனுசா, வாயை வைச்சுக் கிட்டுப் பேசாமக் கெடந்தா என்ன?"*

"இப்ப... என்ன பேசிட்டேன்? இந்தச் சீறு சீறுதே?"

"சம்பந்தகாரவுகளுக்கு கோழி குடுத்தா... நம்ம வீட்லே கோழிப் பெறப்பு இல்லாமப் போயிரும்னு எதுக்கு இந்த மல்லுக்கட்டு? இனிமே கோழியையும் குஞ்சையும்வ ளர்த்து சம்பாரிச்சு... எந்த மகளை கட்டிக் குடுக்கப் போறோம்?"

"அதுக்கு? தடுமன், தொரத்தல்னா... அடிச்சுச் சாறு குடிக்க வீட்லே கோழிக வேண்டாமா?"

"பெத்த புள்ளையைவிட செத்தபய கோழியா, முக்கியம்? எம்மா... ராசி! நீ அந்தக் கோழியைக் கொண்டு போ... ஒன்னோட வீட்லே கோழியும் குஞ்சுமா குமுறிப் பெருகி... நீ நல்லா இருந்தா அதுவே எங்களுக்குப் போதும்."

"இந்த வீட்லே கோழி வம்சம் அத்துப்போகும்" சத்தம் குறைந்த அய்யா. அப்பவும் 'கட்டையை' குடுக்கிறார்.

"போனா... போய்த் தொலையட்டும்" வெடிப்புச் சத்தத்தில் அம்மா. 'கட்டையை' உடைக்கிறாள்.

அத்தனை பெரிய மல்லுக்கட்டும், சொல்லுக்கட்டு மாய்த்தான் இந்தக் கோழி, இங்க வந்தது. நல்ல வம்சக் கோழி. நாட்டுக்கோழி.

ரெண்டு தடவை அம்மா வீட்டில் அடை படுத்து... குஞ்சுகள் பொறித்து... வளர்த்து... கொத்தி விரட்டி விட்டது. முட்டைப் பருவத்துக்குரிய கச்சித அழகு. நிமிர்ந்த நடை.

இப்ப கோழி, சேவலை நினைத்து 'கேர்ர்ர்... கேர்ர்ர்...'ரென்று தேடியலைகிறது. இரைக்குக் கூவுகிற தொனி வேறு. இணை தேடி கூவுகிற தொனி வேறு. சன்னமான நீட்டலும், மென்மைத் தொனியுமான கூவல்.

கோழி வயிறு புடைத்திருக்கிறது. நல்ல சாதிக் கோழி. முரட்டுக் கால். விரிந்த நெஞ்சு. புடைத்து நீளும் வயிறு. வட்டக் கண். சிவந்த மூஞ்சி. கொண்டையிலும் தாடித் தொங்கலிலும் ரத்தம் கோதிய காமச்சிவப்பு. காதல் பருவத்தில் ரோமமே மினுமினுப்பான சாம்பலில் முளைக்கிறது. கோழியே புதுக் களையோடு நடக்கிறது.

ராசக்கா சாம்பல் கோழியை தாயாக நினைத்துப் பார்த்தாள். பாசத்துடன் ஒட்டுக்கம்பும் தண்ணீரும் குழப்பி, மண்சட்டியில் வைத்தாள். 'கதக் கதக்'கென்று கொத்தி விழுங்கியது. வட்டக் கண்ணில் திரைவிழ, இவளைப் பார்த்தது. பார்வையில் ஒரு சிநேக பாவம்.

அம்மா தந்த சீதனத்தின்மேல் ராசக்காவுக்கு தனிப் பாசம்.

அடுப்புக்குள் விறகுக்கட்டையைத் தள்ளினாள். நுரை பொங்கி வழிகிறது. ஒலம்பட்டியை ஒருச்சாயலாக திறந்து வைக்கிறாள். றெக்கை கட்டி பறக்கிற வேலை. குழம்புப் பாடு முடிந்தது.

மூத்த பயல் வந்து சேர்ந்தான்.

ஆவி பறக்கிற சோற்றை அள்ளி அள்ளி வாயில் போட்டாள், அவசரம் அவசரமாக. வாயிலும் புகை வருவதை அனுதாபமாகப் பார்க்கிறான்.

"யம்மா... மெல்லச் சாப்புடும்மா..."

“வேலைக்குப் போகணும்டா. நேரமாச்சுன்னா... நாறவசவு வைவாக...”

சாம்பல் கோழி “கேர்ர்ர்... கேர்ர்ர்...” என்று கத்துகிறது. கழுத்தை உயர்த்தி கூவுகிறது. இரையும் தேடாமல், இணையும் இல்லாமல் என்னத்துக்கு கத்துது? முட்டை யிடுறதுக்கு இடம் தேடுதோ...

“ஏலேய், சாப்ட்டுட்டு பள்ளிக்கோடம் போறீயா? அம்மா வேலைக்குப் போவட்டா?”

“ஆட்டும்மா.”

“ஏலேய், கோழி கத்திக்கிட்டேயிருக்கு. முட்டையிட எடம் தேடுதுன்னு நெனைக்கேன். பள்ளிக்கோடம் போறதுக்குள்ளே கோழியைப் புடிச்சு, கெடாப் பெட்டியாலே கவத்திப் போட்டுருதீயா?”

“சரிம்மா.”

“நல்ல ராசா... ஏங்கண்ணு... எங்க அம்மா மாதிரி தங்கமான கொணம்...”

ஆவி பறக்கிற சோற்றுக்கவளம் விக்கினாலும், பாசக் கொஞ்சல் பழுதாகவில்லை. மனதின் குழைவு, கண்ணில் தெரிய... பாசம், ஈரமின்னலாக ஒளிர்ந்தது.

“ஏலேய்... உங்கப்பனை கண்ணுலே காணலே. வந்தா... சாப்புட்டுட்டு வேலை ஜோலிக்குப் போகச் சொல்லு.”

“சரிம்மா.”

அதற்குள் சாம்பல் கோழி அசந்த நேரத்தில் ஒரே லாவாக லாவிவிட்டான், மகன். கத்துலும் கதறலுமாய்

றெக்கையடித்த கோழி. அவன் ஆறுதலும் அன்புமாய் "ட்லே... ட்லே... ட்லே" என்று கடைவாயில் ஒரு சத்தம் குடுக்க, அந்த அன்பு மொழியில் வசப்பட்டு, கைக்குள் அடங்கிய கோழி.

அவன் சட்டையெல்லாம் தூசி, ரோமங்கள். நெஞ் சோடு கோழியை சேர்த்தணைத்துக் கொண்டே, அதன் பின் பிறத்தில் சுண்டுவிரலை நுழைத்தான். விரல் முழுக்க உஷ்ண கதகதப்பு.

"யம்மா... முட்டை கிட்டத்துலேதான் கெடக்கு. இன்னிக்கு இட்டுரும்."

"அப்பச் சரி... கவுத்திப் போடு... இன்னிக்கு என்ன கெழமை? சனிக்கெழமையா? சனிப்பெருக்கு, தணியாப் பெருக்குதான்."

வீடும், மகனும் விட்டுப் பிரிய மனமில்லாமல்... நாராயணசாமி நாயக்கர் புஞ்சையை நோக்கி நடந்தாள், ராசக்கா. அவளை நெட்டித் தள்ளுகிற பிழைப்பு.

பொழுது முகம் வெளுத்துவிட்டது. எட்டு மணி இளம் வெயில். மரங்களும், வீடுகளும் நீளநீளமான நிழல் களாகக் கீழே கிடந்தன.

ராசக்கா நடையை எட்டிப் போட்டாள். 'ஐயோ... பொழுதாச்சே' என்ற பதற்றம், காலுக்குப் புரிந்துவிட்டது.

செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும் புழுதியைக் கிளப்பிக்கொண்டு மேய்ச்சலுக்குப் போய்க் கொண் டிருந்தன. பசுமாடுகளும் தலையையாட்டி ஆட்டி நடந்தன. வெத்தலை போட்டு எச்சிலைத் துப்புகிற பெரிசுகள்.

டீக்கடை டேப்ரிகார்டில் காட்டுக்கத்தலாக பாட்டுக் கூப்பாடு.

தெருவைக் கடந்து ஓடைக்குள் இறங்குகிற ராசக்கா. அவளுக்குள் நீள்கிற நினைவுகள். காலடி வேகத்தை மிஞ்சுகிற பாய்ச்சல் வேக நினைவுகள்.

முட்டையிடுது கோழி... நல்ல நாட்டுக்கோழி... தாட்டியமான கோழி... எப்படியும் பானைஞ்சு முட்டைக இடும். அடை வைச்சோம்னா, பத்துக்கு மேலே குஞ்சு பொறியும். பத்து குஞ்சாவது 'உசுர்' தப்பி, கரைசேந்துடும்.

பத்து "விடைக்கோழி'களை வித்தோம்னா... எண்ணூறு ரூவா, தொள்ளாயிர ரூவாயாச்சும் தேறும். எப்படியும் அது ஒரு கைமுதலாயிடும்.

ஒவ்வொரு முட்டைப் பருவத்திலும் தொள்ளாயிர ரூபாய் வருமானம் தருகிற விதைமுதலா... இந்த நாட்டுக்கோழி.

அவளுக்குள் றெக்கையடித்துப் பறக்கிற கனவுப் பறவைகள். முட்டைத்தோல் பிளந்து குஞ்சுகளாகப் பொறித்து கீச்சிடுகிற கற்பனைகள். நீளம் நீளமாக விரிகிற கணக்குகள்... கம்மல், மூக்குத்திகளாகக் கண்விழிக்கிற எண்ணங்கள்.

நாராயணசாமி நாயக்கர் புஞ்சையில் களைவெட்டு. நல்லவேளை... நேரத்துக்குள் வந்து சேர்ந்துவிட்டாள், ராசக்கா.

பருத்திக்குள் களைவெட்டு. சின்னச் சின்னக் கோழிக் குஞ்சுகளைப் போல பொடிச் செடிகள். அதற்குள்

கொழை மோதிக் கிடக்கிற சாரணத்திக் கொடிகள். கோரைப் புல். பசலிக்கீரை.

மளமளவென்று வெட்டு சாய்ந்தது.

*சா*யங்காலம்.

ரத்தம் கோதிய வெள்ளை முட்டை கடாப்பெட்டிக்குள் கிடந்தது. கவிழ்த்துக் கிடக்கிற கடாப்பெட்டிக்குள் கோழி ரோமங்களும், மலக் கழிவுகளும் கிடந்தன.

கோழியைக் காணோம். எங்கே போச்சு?

பதைப்பும் பதற்றமுமாகத் தேடினாள். பயலையும் காணோம். புருஷனையும் காணோம். யாருகிட்ட கேக்க? எங்கே போச்சு?

தெருக்காட்டில் சுற்றியலைந்தாள். பயந்து பயந்து தேடினாள். கண்ணில் தட்டுப்பட்டவர்களிடமெல்லாம் குழறிக் குழறிக் கேட்டாள். தாயைத் தேடியலைகிற கோழிக்குஞ்சு.

"எங்கோழியைப் பாத்தீகளா... ஏஞ் சாம்பக்கோழி இங்குட்டு வந்துச்சா... நாட்டுக்கோழி தட்டுப்பட்டதா?"

முத்தம்மா கெழவி கூப்பிட்டாள், ராசக்காவை.

"என்னடி ராசி, என்னத்துக்கு இப்படி ஓடித் திரியுதே?"

"எந்நாட்டுக் கோழியைக் காணலே..."

"அது இந்நேரம் கொழம்பாயிருக்கும்டி... ஒம்புருசன் தான் வித்துக்கிட்டிருந்தான். பிராந்தி வாங்க திருவேங்கடம் போயிருக்கான், அந்தத் துட்டோட..."

அவளுக்குள் குலை பதறியது. பகீரென்றது. குடலை உருவி வெளியே போட்ட மாதிரியிருந்தது.

"ஐயய்யோ... போச்சே... எங்க ஆத்தா குடுத்த வெதை மொதல் நாசமாய்ப் போச்சே... அடப்பாவி மனுசா, வாயிலே நாறத் தண்ணியை ஊத்த கோழியை தொலைச்சுட்டியே..."

தாயையே பறிகொடுத்தவளாக மார்பில் அடித்துக் கொண்டு அழுகிற ராசக்காவை அனுதாபத்தோடு வேடிக்கை பார்த்தது, வாழ்க்கை.

–ராணி 10–11–2002.

# பாச நெருப்பு

பசு மாடுகள் தரிசில் மேய்ந்து கொண்டிருந்தன. சாயங்கால வெய்யிலில் அருகம்புல்லும், ஆதாளையும், மத்தாங்கப்புல்லும் குளிர் பசுமையாகச் சிரித்தன. புல்லுக்குள் என் மகள் பேச்சி உறங்கிக் கொண்டிருக் கிறாள். மூன்று வயசுப் பிஞ்சு. சின்னக் கன்னத்தில் வழிந்திருக்கிற எச்சிலில் சாயங்காலச் சூரிய இணுக்கு.

பசிவெறி கொண்டு பறப்பெடுத்துப் போய் ஆவல் ஆவலாய்ப் புல்லை மேய்கிற பசுக்கள். 'பர்ர்ர்ச்ச்ச், பர்ர்ர்ச்ச்ச்' கடிபடுகிற புற்களின் வீறிடல்.

செவலைப் பசு, ஒறங்கிக்கிட்டிருக்கிற எம்பேச்சியோட தலைமுடி ரோமத்தைத் திங்குது. எம் புள்ளையையே திங்குது. பசுவாயில் கடிபட்டுத் தொங்குகிற பசுங்கொழை மாதிரி... பசுவாயில் தொங்குகிற எம் புள்ளையின் பிஞ்சுக்கால்கள். என் குலக்கொடி. வம்சக் கொழுந்து. என் உயிரின் உருவம்.

*'ஐயய்யோ... ஆத்தா! ஏம்புள்ளை... ஏஞ்செல்லம்... ஏங்கண்ணு... பசுமாடு தின்னுருச்சே... நா என்ன செய்வேன்... ஐயோ...'*

*அலறியடித்துக் கொண்டு விழித்தாள் பூவாயி. நெஞ்சுக்குள் திக்கென்று ஓர் அடைப்பு. மூச்சு பிரிய வில்லை. திகிலடித்தவளாக கலகலத்துக் கிடந்த அவளை இருட்டு சூழ்ந்திருந்தது. தூரத்தில், பனங்காட்டில் மயில்கள் பதறிப் போடுகிற கூப்பாடு.*

*இருட்டுக்குள் துழாவுகிற உயிரின் பதற்றம். 'புள்ளை கிடக்கா?' சற்றுத் தள்ளி புரண்டு படுத்திருக்கிற மகன் மாடசாமி, துழாவுகிற கைக்குத் தட்டுப்பட்டான். ஹ..........ம்மாடி!*

*பத்து வயசப் பயல். அஞ்சாப்பு படிக்கிறான். மகனை இழுத்துத் தன் பக்கமாக வைத்துக்கொள்கிற கையில், மனசின் நடுக்கம். பதறித் தணிந்த மனசின் ஆசுவாசம்.*

*வியர்த்துக் கொட்டியிருக்கிற உடம்பு. பிடறி முடி களைக்கூட நனைத்த வியர்வை.*

*'இப்படியுமா கனா வரும்? அடிவவுறே கலங்குற கனா... ச்சே!'*

*__ஊ__ர் முந்தி மாதிரியில்லை. நாலாசாதி சனமும் தாயாய் பிள்ளையாய் வாழ்ந்த நாள் போச்சு. கோயில் திருவிழா என்றால் ராவுத்தமார் பிரியாணி போட்டுக் கொண்டாடுகிறது, ரம்ஜான் வந்துட்டால் எல்லாத் தெருக் களிலும் கறிபுளி என்று கூத்தாடுகிறது... அப்படியிருந்த*

சௌஜன்யமான ஊர், இப்ப என்னவோ ராவணன் வேஷம் கட்டிக்கொண்ட மாதிரி தாறுமாறாக இருக்கிறது. குரூரமாக மாறி இருக்கிறது. இது புதுகாலம். புதுவேஷம்.

பாயாசத்துலே உப்பு போட்ட மாதிரியிருக்கு.

அன்பு இல்லே. பாசமில்லே. சகிப்புத் தன்மையில்லே. வெறுப்புணர்வு. பகை உணர்ச்சி. விறைப்புகள். முறைப்புகள், வம்புகளும் தும்பங்களும் வந்து விடியுமோ? 'வெட்டுக்குத்து'னு ரணகளமாயிருமோ ஊரு?

பேச்சிக்கு மொட்டை போடணும். இருக்கண்குடி மாரியம்மாள் கோயிலில் பொங்கல் வைத்து மொட்டை போட நேர்த்திக் கடன். 'இப்பப் போவோம், பெறகு போவோம்' என்று நாளும் பொழுதும் போயிற்று. பூவாயி நச்சரிப்புத் தாளாமல், பூச்சனும் கிளம்பிவிட்டான், பேச்சியுடன். பொங்கல் வைக்கிற பச்சரிசி, வெல்லம், சட்டி, கரண்டி என்று மூட்டை முடிச்சுகள். பை நிறைய சாமான்கள்.

சாத்தூர் வந்து இறங்கினால் நிலவரம் சரியில்லை. பஸ் ஸ்டாண்டில் வழக்கமான கூட்டமில்லை. அங்கொரு தலை. இங்கொரு முகம். முகங்களில் ஒரு திகில். கிலி.

பூவாயிக்குள் பகீர் என்றது.

"என்ன... ஆள் போக்குவரத்து இல்லாம, ஊரு காத்தாடுது?"

"சாதிக்கலவரம். ரெண்டு நாளா நடக்குது."

"எதுவும் சேதமா?"

*"கறுப்புச் சாதியிலே நாலு சாய்ஞ்சிருச்சு. செவலைச் சாதியிலே ஒம்பது போயிருச்சு. இன்னிக்கு எம்புட்டுத் தலைக உருளுதோ?"*

*பயமில்லாமல் சொல்கிற பூச்சனை, வெறுப்பும், கடுப்புமாகப் பார்க்கிற பூவாயி. அவளுக்குள் பதற்ற அலை. காலெலும்பு உருவிக்கொண்ட மாதிரி, தொடைச் சதையே தொளதொளவென்றாகி, நடுக்கமெடுக்கிறது. அப்பிய பயத்தில் வெளுக்கிற முகம். பலவீனமாகி படபடக்கிற நெஞ்சு. நா உலர்ந்தது. தலைச் சுமையை இறுக்கிப் பிடித்துக்கொண்டாள். வயிற்றில் நாலு மாசச் சுமை வேறு.*

*பூவாயியின் பயப் பார்வை. அசட்டுத்தனமாகச் சிரித்த பூச்சன்.*

*"இந்த மாதிரி நெலவரம்னு தெரிஞ்சுருந்துமா, கோயிலுக்குப் போவலாம்னு கெளப்புனே?"*

*"நீதான் நச்சரிச்சுப் புடுங்குனேல்லே?"*

*"இப்படி நெலைமைன்னு சொல்றதுதானே?"*

*"ஒனக்கு பயமாயிருக்கா?"*

*"வெட்டும் குத்துமா கொலைபாதகம் நடக்கிற ஊர்லே பயமாயிருக்காதா? பயப்பட வேண்டாமா, அறிவுகெட்ட மனுசா?"*

*"நாம எதுக்குப் பயப்படணும்? நாம அசலூரு. கறுப்புச் சாதியுமில்லே, செவலைச் சாதியுமில்லா. நாம வேற சாதி. என்னத்துக்குப் பதறணும்?"*

“இருந்தாலும்... நீ கூறுகெட்ட ஆளுதான். அருவாளும், மூர்க்கமுமா சாதி வெறிபுடிச்சு வர்ற வெறிநாய்களுக்கு அசலூரு தெரியுமா, அடுத்த சாதி தெரியுமா? நெறத்தைப் பாத்துப் போட்டுத் தள்ளிட்டா?”

போட்டுத் தள்ளிவிட்டது, திடுமென்று வந்த வெறிக்கும்பல், மூடிமுழிக்கும் முன் நடந்துவிட்டது. சில கண நிகழ்வுப் பயங்கரம்.

மூன்றாவது வெட்டு, பேச்சியையும் பூச்சனையும் சேர்த்து நெஞ்சில் விழுந்தது.

தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு, ‘கோ 'வென்று கதறியழுத பூவாயி, “ஐயோ... ஆணி வேரையும் பூவையும் அறுத்துட்டாங்களே... பாவிப்பயக. வெறுங்கழுதையா என்னை விட்டுட்டுப் போச்சே...”

கண்ணீரும் கதறலுமாய் நனைந்த காகிதமாக நைந்து கிடந்த பூவாயியை, தாமதமாக வந்த போலீஸ் படை சூழ்ந்து கொண்டது.

பேச்சியோடு சேர்ந்து கழுத்துப் புருஷனும் போய்ச் சேர்ந்துவிட்டான். வயிற்றுச் சுமை. புருஷனின் உயிர். பூச்சனின் அச்சு.

அதுவே வாழ்வாகவும், வாழ்வதற்கான வைராக்ய மாகவும் இருந்தது. இதோ... பக்கத்தில் பத்து வயசு மாடசாமி, அய்யாவைப் பார்த்ததில்லை. பூச்சனின் மரணத்துக்கு அரசு தந்த ஒரு லட்சம். அதில் பாதி, மாடசாமி பெயரில் வங்கியில்.

இருந்து என்ன செய்ய? துணை? வாழவேண்டிய தாம்பத்தியம்? சூன்யமாகிப் போனதில் ஒரு சுனையாக, மாடசாமி.

இருட்டுக்குள் விழித்திருந்தாள். மனசுக்குள்... செத்துக் கிடந்த பூச்சன்.

அவளுக்குள் குமுறிப் பீறிட்டு வந்த துன்பம். அடி வயிற்றில் வெறுமையான மாதிரியோர் சோகப்பகீர். உடைப்பெடுத்துக் கொண்டு வந்த அழுகை. "ஐயய்யோ... ஐயா, எஞ்சாமீ... எங்கருவேப்பிலைக் கொழுந்தே... என்னை நாதியத்து தவிக்க வுட்டுட்டு... இந்த மண்ணுலே கெடந்து சீரழியவுட்டுட்டு... நீங்க மட்டும் மண்ணுக்குள்ளே போய்ட்டீகளே... எம் பொழைப்புலே மண்ணள்ளிப் போட்டுட்டீகளே... இது நாயமா? அடக்கூத்துவனே... ஒனக்கும் கண்ணு அவிஞ்சு போச்சா? இந்தக் கூத்து கட்டணுமா?"

நிசப்தத்தின் நெஞ்சைக் கிழித்துக்கொண்டு வருகிற காலடிகளின் சத்தம். திகிலையும், பீதியையும் சுவடாக விட்டுச் செல்கிற மனிதக் கூச்சல். கோபமும் ஆத்திரமுமான வெறிக் கூத்தாட்டம். ஒரு கூட்டமே ஓடுகிற தடபுடக் கூப்பாடு.

"வெட்டுங்கடா... விடாதீகடா... வம்சத்தையே அழிக்கணும்டா... போட்டுத் தள்ளுங்கடா... தீயை வைங்கடா... ஓடுகளை உடைங்கடா... கல்லுகளை வீசுங்கடா..."

மிருகங்களின் மனிதக் குரல்கள்.

பூவாயிக்குள் பாய்கிற திகில்கத்தி. குலை நடுக்கம். பயத்தில் வியர்க்கிறது. கொலைபாதகத்தைப் பார்த்தவள்.

கண்ணெதிரே வெட்டுப்பட்டு, வெதுவெதுப்பான ரத்தம் கொப்பளித்த கோரத்தை ருசித்தவள்.

பதறியடித்துக் கொண்டு, கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்.

தூரத்தில்... ராமம்மாள் அவள் வீட்டு முற்றத்தில் நிற்கிறாள். தலைமுடியை அள்ளி முடிந்துகொண்டு, எச்சிலைத் துப்பிக்கொண்டிருந்த அவளிடம் ஓடிவந்தாள், பூவாயி.

"என்ன மயினி... வெட்டு, குத்துன்னு ஒரே கூவல் காடா இருக்கே... என்ன விஷயம்?"

"புள்ளையார் செலையை யாரோ ஒடைச்சிட்டா களாம்."

"ஐயயோ... இதென்ன கொடுமை? யாராம்?"

"ராவுத்தமாராகத்தான் இருக்கும்னு... நம்மாளுக நெனைப்பு. மனசு கொதிச்சுப் போய் படைபடையாய்ப் போறாக..."

"பெறவு?"

"இன்னிக்கு எத்தனை தலைக உருளுதோ? எத்தனை வீடுக நொறுங்குதோ...? என்னென்ன எழவெல்லாம் நடக்கப் போகுதோ? எல்லாம்...ம் தலைகீழாகிப் போச்சு. நம்ம தலையிலே என்னென்ன இடி வந்து விடியப் போகுதோ..."

**பூ**வாயிக்குள் மிரட்சி. உள்மனம் அச்சத்தில் நனைந்து துவண்டது. அறுபட்ட சணல் துண்டாக அந்தரத்தில் நடுங்குகிற உணர்வு.

பேய்பிசாசைப் பார்த்த மாதிரி திகிலடித்துப் போய் ஓடிவந்து கதவைப் பூட்டிக் கொண்டாள். வீட்டின் இருட்டு, ஒரு பாதுகாப்புணர்வு தந்தது. தெருவின் ஆரவாரக் குரல்கள் அடிவயிற்றை அறுத்தது.

கதவு தட்டப்படுதோ... சின்ன விரல்கள் பயந்து பயந்து மெல்லத் தட்டுகிற மாதிரி ஒரு சின்ன சத்தம்.

அவளுக்குள் பரவுகிற அச்சச் சிலிர்ப்பு. நெஞ்சு வறள்கிறது. திக்கென்று திகைக்கிறது. அடித் தொண்டை யில் நடுங்கும் குரல்.

"யாரது...?"

"நா...ந்தான்" ஒரு பிஞ்சுக்குரல். அதுவும் பயத்தில் நனைந்து நடுநடுங்குகிற குரல்.

பூவாயி கதவைத் திறந்தாள், தயங்கித் தயங்கி மனசுக்குள் நூறு நூறு நினைவுகள். மருட்சி. கலக்கம்.

"யாருப்பா...?"

யூசுப் நின்றான். மாடசாமி கூடப் படிக்கிறவன். அடிக் கடி வீட்டுக்கு வருகிறவன். அவனது சின்ன முகத்தில் மரணபயம். அறுபட்ட பல்லி வாலாகத் துடிக்கிற இமைகள். அவனது இடுப்பில் மூன்று வயசுத் தங்கச்சி.

"என்னப்பா... தம்பி...?"

அவன் உதடுகள் உலர்ந்து போய்... பயத்தில் நா தடுமாற... வாய் பேச முடியாமல் மூச்சிரைத்தான்.

“என்னென்னமோ நடக்கு. யார் யாரோ செத்துட்டாக. என்னைக் கொல்லுறதுக்கு வாராக. நா... இங்க ஒளிஞ்சுக்கிடட்டா?”

வாசலை மறித்து நிற்கிற பூவாயி. அவளுக்குள் கொதிபாலைக் குடித்த பூனையின் பீதி. கும்பல் வன்முறையை உணர்ந்தவள். யூசுப்பை தேடி வருகிற கும்பல், வீட்டை நாசம் பண்ணும். மாடசாமியைக் கொல்லும். தன்னையும் வெட்டிச் சரிக்கும். மதயானை காலில் சிக்கிய மண் குடமாய் தன் குடும்பம்.

“இ.......ங்.......கே.......யா?”

அவளது தயக்கத்தில் அதிர்ந்துபோன அந்தப் பிஞ்சு. நம்பிக்கை சிதறிப் போன உணர்வு. நம்ம ஃப்ரெண்டு வீடுன்னு உரிமையோட வந்த இடத்தில் முகத்தில் வந்து மோதுகிற அந்நியம்.

“ராமம்மா வீட்டுக்குள்ளே போயிரட்டா?” புகலற்ற கிலியில் கேட்கிற யூசுப். வெள்ளந்தியாகக் கேட்கிற அரும்பு.

பூவாயியின் பார்வை, யூசுப்பின் இடுப்பிலிருக்கும் தங்கச்சி மேல். பேச்சி மாதிரியோர் தோற்றம். அதே வயசு. அதே முகச் சாயல்.

பேச்சி... பேச்சி... பேச்சி...

அடிவயிற்றுக்குள்ளிருந்து மேலெழுந்து வருகிற பாச உணர்சசி. நேசமிகுந்து, குபுக்கென்று பீறிட்டு வருகிற சுயம். மானுடப் பேரன்பு. பூப்போன்ற தாயன்பு. எதையும் தாங்குகிற தீப்போன்ற தாய்ப்பாசம்.

"இங்க... உள்ளே வாப்பா..."

"எங்களாலே உங்களுக்குத் தொல்லை வருமே..."

"சாவே வேணும்னாலும் வரட்டும். நீங்களும் எம்புள்ளைகதான்..." அவர்களை உள்ளிழுத்து, கதவைச் சாத்தினாள், பூவாயி.

அச்சத்தைக் காலில் போட்டு மிதித்த தாய்மை வீரமாய் பூவாயி. நூறு கோடிப் பிள்ளைகளையும் ஆரத்தழுவிக் கொள்கிற பாரதத்தாயாக அவள் முகத்தில் கருணைப் பூவின் மலர்ச்சியும், ரௌத்ர வெக்கையும் கலந்து, பேரழகு பிரகாசித்தது.

–கல்கி, 3–11–2002.

# மழை தோற்றது

ஊற்றோ ஊற்று என்று பொழுதுக்கும் ஊற்றுகிறது மழை. விடுவேனா என்கிறது. தரையெல்லாம் தண்ணீர்க்காடு, சுவரெல்லாம் நீரூற்று அடித்துக் கிடக்கிறது. ஆகாயமே கண்ணில் தட்டவில்லை. தேன்தட்டாக மேகம் கனத்து கனத்து நகர்கிறது. ஏழெட்டு நாளாய் மழை.

காற்றெல்லாம் ஈரச் சொதசொதப்பாக ஊறிக் கிடக்கிறது. அடிக்கிற லேசான காற்றின் சிலுசிலுப்பில் கூதல் நடுக்குகிறது.

மேயப் போக வேண்டிய செம்மறியாடுகள்கூட தொழுவத்திற்குள் கனைக்கின்றன. கோழிகுஞ்சுகூட நடமாட்டம் இல்லை. மனுசமக்கள் எல்லாரும் கதவைச் சாத்திக்கொண்டு வீட்டுக்குள் அடைந்து கிடக்கின்றனர். தட்டான்கள் மட்டுமே தலைக்குமேல் பறக்கின்றன. மற்றபடி ஒரு சுடுகுஞ்சுகூட வெளியில் தலைகாட்ட வில்லை. மழைக்கு பயந்துபோய் வீட்டுக்குள்ளேயே சுருண்டு கிடக்கிற மனித மக்கள்.

சமுத்திரக்கனி உள்வீட்டு வாசல்படியில் குத்த வைத்திருந்தான். கதர் துண்டை இழுத்து மூடியிருந்தான்.

அப்பவும் அடிக்கிற கூதல். குளிர் நடுக்கத்தில் முழங்கால் மேல் முகத்தை வைத்து... "ஸ்ஸ்ஸ்ஸ்" என்று முனங்கினான். "யப்ப்பா... என்ன நடுக்குநடுக்குது, கூதலு..."

"ஏய்ய்... திங்க ஏதாச்சும் இருக்கா?" மனைவியிடம் கேட்டான்.

அடுப்பங்கரை வாசல்நிலையைப் பிடித்தபடி நின்றிருந்தது. வடிவு "என்ன?" என்றாள். அவளது விசாரிப்பில் ஒரு சிடுசிடுப்பு. தவிட்டுக்கு அலைகிற தாயிடம், இஞ்சிப் பச்சடி கேட்கிற பிள்ளையைப் பார்க்கிற கண்டனப் பார்வை. இயலாமையில் விளைகிற கோபப் படபடப்பு.

"ரொம்பக் கூதலடிக்குது. என்னத்தையாச்சும் வாயிலே போட்டு மென்னு திங்கணும்போல இருக்கு" நச்சரிக்கிற சமுத்திக்கனி.

"உங்களை மாதிரித்தானே நானும்? மழைக்குத் தலைகாட்டாம, முடங்கிக் கிடக்கேன். ஏங்கிட்டே மட்டும் என்ன இருக்கும்?"

மூத்தவளும், இளையவனும் ஒரே சத்தமாக இரைந்தனர்.

"எங்களுக்கும் என்னமாச்சும் வேணும். கூதலுக்குக் கதகதப்பா திங்குறதுக்கு வேணும்."

"அடுப்புக்கங்கு கெடக்கு வேணுமா?"

வடிவின் உதடுகளில் கோபப் பரிகாச மென்னகை. எகிறியடிக்கிற மூத்தவள் ராஜியின் பதிலடி.

"கங்கை நீதான் வாயிலே போட்டுக்க. அப்பத்தான் சுடச்சுட பேச்சை எறிய முடியும்."

“குச்சி வெளக்கமாறு தேஞ்ச கட்டையா கெடக்கு. அதை நறுக்கி, வேக வைச்சு, தாளிச்சுத் தரட்டா?”

“ஓந்தலையிலே அதாலே அடிச்சுக்கோ...”

சமுத்திரக்கனி வெடிச்சிரிப்பாக சிரித்தான். சின்னவன் முத்துவும் உடைந்த கண்ணாடிச் சில்லுகளாக சிரித்தான். மூன்றுபேரும் விழுந்து விழுந்து சிரிக்கிற சிரிப்பாணிக் கும்மாளத்தில் முகம் சிறுத்துப்போன வடிவு. உதட்டில் கூச்சச் சிரிப்பும், கண்ணில் வாட்டமு மாய் புண்பட்ட மனசின் சிணுங்கலாகப் பேசினாள்.

“தவுட்டுக்கு தாயை வுத்துட்டு தகப்பன்கூடச் சேர்ந்துக்கிட்டா, கூத்தடிக்கீக...? இருங்க. மாடுகளா... இருங்க. சோத்துக்கு ஏங்கிட்டேதானே வரணும்? ஆக்கி அவிச்சுப் போடுறதுக்கு ஆத்தாதானே வரணும்?”

சிரித்தடங்கிய சமுத்திரக்கனி சகஜநிலைக்கு வந்தான். காரியார்த்த தீவிரத்துடன் கேட்டான். “ஏய் வடிவு. அந்த நார்ப்பெட்டியிலே பாசிப்பயிறு கெடந்துச்சுல்லே?”

“ஆமா...”

“அதை அவிச்சு, தாளிச்சு தாயேன்... புள்ளைக கூதவாடைக்கு வாய்க்கு ருசியா திங்கட்டும்...”

“ம்... ம்... ம்... ம்...”

“என்ன யோசிக்கே?”

“நனைஞ்ச வெறகுதான் இருக்கு.”

“அடுப்பு மூட்ட தோதுப்படாதா?”

“மல்லுக்கட்டிப் பாக்கேன்... பொட்டைச் சென்மம் எடுத்தாச்சுல்லே?”

வடிவு சலித்துப் போயிருக்கிறாள். பிறப்பின்மீதே வெறுப்பு வருகிற அளவுக்கு சலிப்பு. மழையின் முற்றுகை யால் வந்த சலிப்பு செயல்பட முடியாத முடக்கத்தினால் அழுத்தப்பட்ட சலிப்பு. இயங்காத வாழ்வின் அச்சுகளில் ஏறிய துருவைப் போன்ற சலிப்பு.

உள்வீட்டு மூலைக்குள் கிடந்த சாக்கை எடுக்கிற சமுத்திரக்கனி. பழைய சாக்குத்தான். சாக்கின் அடித்தூரை இரண்டாக மடித்து, ஒன்றுக்குள் ஒன்றைச் சொருகி, கொங்காணி போட்டான்.

"தூரவா கௌம்பிட்டீக? இந்த நாசமெடுத்த மழையிலே"

"நீ ஜோலியைப் பாரு. இந்தா... வந்துர்றேன்..."

"மழை ஊத்துதுல்லே? மழைக்குள்ளே நனைஞ்சுக் கிட்டு என்னத்துக்குப் போறீக?"

"நனைஞ்சா... மொளைச்சுருவேனா?"

"தடுமன், சளி, காய்ச்சல்னு படுத்துக்கிட்டா... தொல்லைதானே?"

"கொங்காணி போட்டுக்கிட்டா... நனையாமப் பாத்துக்கலாம்."

கதவை மெல்லிசாகத் திறந்தவுடன் ஈரக்காற்று முட்டிக்கொண்டு பாய்ந்தது. சிலீரிடுகிற குளிர்ச்சி.

"கதவைச் சாத்துங்கய்யா... வெருசா சாத்துங்கய்யா... ஸ்ஸ்ஸ்... கூதலடிக்குது" பிள்ளைகளின் அலறல். கூவல்காடு. கொங்காணியை தலையில் போட்டான். முதுகெல்லாம் மறைத்து அடித்தொடை வரை நீண்டது.

சாத்திய கதவுக்கு வெளியே நின்று மழையைப் பார்த்தான், சமுத்திரக்கனி. முற்றமெல்லாம் வழிந்தோடு கிற சந்தனக் கரைசலான மழைத்தண்ணீர். 'சடச்சடச்சட' வென்று விழுகிற முரட்டு மழைத்துளிகள், தரைத் தண்ணீரில் விழுந்து, காயத்தழும்பாக தடித்து மறை கின்றன. நாக்கு நீண்ட சிறுமணி மல்லாக்கக் கிடந்து மறைவது போலிருக்கின்றன, மழைத்துளியின் நீர்ச் சுவடுகள்.

தெருத் தண்ணீர் அழுக்கில்லாத சந்தனப் பன்னீராக ஓடுகிறது. மஞ்சணத்தி, வேம்பு, இச்சி மரமெல்லாம் மழையால் கழுவப்பட்டு, குளிரில் உறைந்துபோன மாதிரி அசைவற்றிருக்கின்றன. இலைகளிலிருந்து சொட்டடிக்கிற துளிகள், அதன் உயிர்ப்புக்கு சாட்சியாக.

காற்றுகூட இல்லாத சூன்யத்தில் தெரு. ஒருயிர்கூட நடமாட்டமில்லாத வெறிச்சோடல். கோழிகள், சேவல்கள் இல்லை. ஆட்டுக்குட்டிகள் இல்லை. மைனா, காகம் இல்லை. டக்கர்கள் உருளவில்லை. சைக்கிள்கள் இல்லை. மாடு கன்றுகள், மனிதமக்கள் ஒருத்தருமில்லை.

ஏகப்பட்ட 'இல்லை'கள் எல்லாவற்றையும் 'இல்லை' களாக்கிவிட்ட அடைமழை. உயிர்ச்சூடு காணமுடியாத மழைக்குளிர்வு உண்டாக்கி வைத்த 'இல்லை'கள். வாழ்வின் சலனத்தையே ஓடி ஒளியச் செய்துவிட்ட தொடர்மழை தந்த 'இல்லை'கள்.

'இல்லை'களின் சூன்யப் பரவல்.

வேனாக் கொதிக்கிற அக்கிரம வெயிலுக்கு யாரும் பயப்படுறதில்லை. காடுகரை, ஊர்த்தெரு பூராவும் ஓடி

உழைக்குற உயிர்களின் வாழக்கை, வெயில் கண்டு பம்முறதுல்லே. பதறுவதில்லை. ஆனா... தருமமான ஈரமழைக்கு எல்லாரும் பதறிப் பதைத்து பம்முறதுக. ஈரத்தூற்றல் மேலே வுழுந்துரக்கூடாதுன்னு துள்ளத் துடிக்க ஓடி ஒளியுறதுக. நல்ல கூத்துதான். பாவ வெயிலுக்குப் பயப்படாத மனுசங்க, புண்ணிய மழைக்குப் பயந்தோடுறாக.

சமுத்திரக்கனிக்குள் கோணல் மாணலான நினைவுப் பின்னல்கள். குறுக்கும் நெடுக்கும் பாய்ந்தோடுகிற எண்ணங்கள்.

மழையை நம்புன பொழைப்புத்தான்... மண்ணுக்கும், மண்ணுலே உள்ள ஜீவராசிகளுக்கும். அப்பேற்பட்ட மழைக்குத்தான், மனுசன் பயப்படுறான். ஆகாயத்தை அளந்தாலும் அளந்துரலாம். மனுசக்கழுதை மனசை யாரும் அளந்துர முடியாது.

வெறிச்சோடிக் கிடக்கிற தெருவிலிருந்து பீறிட்டெழு கிற நினைவுகள். சமுத்திரக்கனி வாசல்படியில் நின்றான். அவன் முழங்கால் வரைக்கும் மழையின் நனைவு. சில்லிடுகிற ஊதல் காற்று. பொழுதுக்கால் தெரியாத மேகமூட்டம். நீர் சுமந்த சமுத்திர மேகம்.

மழைக்குள் ஊடுருவுவதில் ஒரு பயம். மனத்தயக்கம். அதைக் கரைத்துவிட்டுத்தான்... அம்பெனப் பாய்ந்தான். கரிச்சான் பறவையாகப் பாய்ந்தோட்டம். தெருத்தண்ணீர் 'சளப், சளப், சளப்'பென்று கதறியது. கிழக்காகப் பாய்ந்தான். வாழ்க்கைச் சலனமற்ற தெரு. உயிர்ச்சூடு இல்லாமல் நனைந்து இற்றுப்போன கிராமம். மழையில் நனைந்து துவண்டுபோன ஊர்ச்சத்தம்.

அருஞ்சுனை கடையிலும் ஆளே இல்லை. ஏதோ பழைய பேப்பரை இடது கையில் வைத்து வாசித்துக் கொண்டே, வலது கையால் காரச்சேவை எடுத்து எடுத்துத் தின்கிறான். அவ்வப்போது பொறிகடலையில் ஐந்தாறை அள்ளி வாயில் போடுகிறான்.

மழைக்கு கதகதப்பாக இருக்கும். காரச்சேவும் பொறி கடலையும் ருசியான இணைப்பு. அப்படியே தேங்காய்ச் சில்லையும் ஒரு கடிகடித்துக் கொண்டால்... அது ஒரு தனீ ருசி.

சரம்சரமாக கண்ணாடி இழைகளாக விழுகிற மழைத்தூறலுக்குப் பயந்து ஓட்டமாய் ஓடி கடைத்தாழ் வாரத்துக்குள் நுழைந்த சமுத்திரக்கனி. கொங்காணிச் சாக்கும் பாதியளவுக்கு நனைந்துவிட்டது.

"என்ன அருஞ்சொனை, கடைக்கு ஆளையே காணலே?"

"ஏன்? நீ ஆள் இல்லியா?"

"நசநசக்கிற இந்த மழைக்காட்டிலேயும் ஒனக்கு நக்கலா?"

சிரிக்கிற அருஞ்சுனை. கொங்காணியையும் மீறி விழுந்த மழைத்தூறலின் குளிரில் சிலிர்த்து நடுங்கிய சமுத்திரக்கனி.

"சவலைப்புள்ளே கழிஞ்ச மாதிரி வுடாம மழை ஊத்துறப்ப, கடைக்கு யாரு வருவாக? ஒனக்கு என்ன வேணும்?"

"மாதாங்கோவில்பட்டி காரச்சேவு இருக்கா?"

"ம்..."

"அரைக் கிலோ பாக்கட் குடு. எரநூறு பொறிகடலை குடு. எரநூறு பட்டாணிக் கடலை குடு."

"ம். வேற?"

"மொதல்லே ஒரு சிகரெட் குடு. கூதலுக்கு ஒரு இழுப்பு இழுத்துக்கிருவோம்."

நனைந்த ஈரக்கையை உடுத்தயிருக்கிற துணியில் நனையாத பகுதியில் துடைத்துக் கொண்டான், ஆர்வப் பரபரப்பாக. வாங்கிய சிகரெட்டை பதனமாக உதட்டில் கவ்வி... கிடுகிடுக்கிற கைகளால் பற்ற வைத்துக் கொண் டான். இழுத்த முதல் புகையை ஆர்வமாய் அனுபவித்து... நாசி வழியே விட்டான். உடலெல்லாம் பரவுகிற ஒரு கதகதப்பான இதம். இளஞ்சூடான வெதுவெதுப்பு.

சரக்குகளை வாங்கி மேல் துண்டில் கட்டி, கட்கத்தில் இடுக்கிக்கொண்ட சமுத்திரக்கனி. மண்டை வெல்லமும், தேயிலையும் வாங்கிக் கொண்டான்.

"கணக்குலே எழுதிக்கோ, அருஞ்சொனை."

"கடன் ஏறிக்கிட்டே போகுது. குடுக்குற வழியைப் பாரு."

"பால் ரூவாயிலே கணக்கை வரவு வைச்சிருவம். சரித்தானா?"

உற்சாகப் பரபரப்பில் சமுத்திரக்கனி. ராஜிக்கும் முத்துவுக்கும் தின்பண்டத்தைத் தருவதற்கு விரும்புகிற தகப்ப மனசு. "அய்ய்க்! சேவும் பொறி கல்லையுமா?" என்கிற பிள்ளைகளின் மலர்ச்சிரிப்பின் ஒளித்துள்ளலை காண விரும்புகிற பாசநெஞ்சு.

மழையின் சடசடப்பு தணிந்திருக்கிறது. ஊசி அரும்பு களாக உதிர்கிற தூசிமழை. தவிட்டு உமி பறக்கிற மாதிரி யான காட்டமில்லாத ஈரமழை.

ஏழெட்டு நாளாக ஊற்றுகிற மழை. இடி இல்லாமல், மின்னல் முழக்கம் இல்லாமல் விட்டுவிட்டுப் பெய்கிற அடைமழை.

மேயப் போகாத ஆடுகளுக்கு இரை பார்க்கிற வேதனை. அன்றாடக் கூலி ஜனத்துக்கு சோத்துப் பாட்டுக்கே 'ததிங்கிணத்தோம்' போட வைக்கிற அடை மழையின் முற்றுகை. கிராமத்து உயிர்களின் காலைக் கட்டி, நாலு சுவருக்குள் முடக்கிப் போட்டு கூத்து பார்க்கிற மூர்க்க மழை. கிராமத்து வாழ்க்கையே மழைச்சிறைக்குள், சிறகு பின்னிக் கிடக்கிற தேக்கம்.

ஓடியாடி பாடுபட்டுப் பாடுபட்டே பழகிப் போன திரேகங்களுக்கு ஒரு வேலையுமில்லாமல் துருவேறிக் கிடப்பதே மகாப்பெரிய நரகாவஸ்தை. மனசை பேயாய் பிடித்தமுக்குகிற சலிப்பு. எரிச்சல். சிடுசிடுப்பு.

தூசிமழைதான் என்றாலும் ஓட்டமாய் வருகிற சமுத்திரக்கனி. தன் காலடிகளின் 'சளப், சளப், சளப்' மட்டுமே தனித்து ஒலிக்கிற ஒற்றை உணர்ச்சி. கொங்காணி போட்டு மூடிய தலையை கவிழ்ந்த நிலையில் வருகிற சமுத்திரம்.

உயிர்ச்சூடு இல்லாத சலனமின்மை. உயிர்களின் நடமாட்டமில்லாத வெறுமை. மழை திணித்த சூன்யம்.

இன்னொரு சளப், சளப், சளப். யாரோ நடந்து வருகிற வியப்புணர்ச்சி. நிமிர்ந்து பார்த்தான்.

கொங்காணியோ, தலையில் துண்டோ இல்லாமல்... மழையில் முழுக்க 'தொப், தொப்'பென்று நனைந்து வருகிற செந்தூரான். வேகவேகமான 'சளப், சளப், சளப்' தெருத் தண்ணீரின் கதறல்.

"என்ன செந்தூரா, இம்புட்டு ஸ்பீடுலே?"

"கெணத்துலே தண்ணி மேலே ஏறியிருச்சாம். பம்ப் ஷெட் மோட்டாரு பெட்டுக்குள்ளே தண்ணியிலே முங்குற நெலைமையிலே இருக்காம். பம்பையும், மோட்டாரையும் அர்ஜெண்டா கழட்டி, மேலே கொண்ணாந்து, நனையாத எடத்துலே பாதுகாக்கணும்."

"கூட யாரும் வாராகளா?"

"இந்த மழையிலே யாரு வருவாக? ஒருத்தரும் வரமாட்டேங்காக."

"தீயுக்கும் வெயிலுக்கும் பயப்படாத சனங்க, மழைக்கு மட்டும் ஏன் பயப்படுறாங்களோ...?"

"இடி வுழுந்தா என்னாகும், மின்னல் தாக்குனா கரிக்கட்டையாகணும்னு எல்லாருக்கும் தெரியும்லே? அதான்... மழைன்னவுடனே துண்டைக் காணோம், துணியைக் காணோம்னு ஓட்டம் புடிச்சு, வீட்டுக்குள்ளே அடைஞ்சுக்கிடுறாக..."

"ஞாயந்தான். நீ ஒத்தையாளாவே பம்ப்பையும், மோட்டாரையும் கழட்டி தூக்கிருவீயா?"

"ஃபிட்டர் ராக்கப்பன் வாராரு... அவரை வைச்சுக் கிட்டு, பம்ப்பையும் மோட்டாரையும் தூக்கியாகணும். வேற வழி?"

இவ்வளவும் நின்று பேசவில்லை. நிற்காத மழை. நிற்க விடாத மழை. பேசி முடிப்பதற்குள் ரெண்டு பேருக்கும் இடையில் இருபதடி தூரம் எழுந்துவிட்டது. நடந்துகொண்டே நடந்து முடிந்த விசாரிப்பு.

தெருத் தண்ணீரில் நாலு பாதங்களின் நடையில் மண்டி கலங்கியிருக்கிறது.

சமுத்திரக்கனி கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தான். கொங்காணிச் சாக்கு 'சொத, சொத'வென்று நனைந்துவிட்டது. அதை அப்படியே கதவு நுனியில் தொங்கவிட்டான். தண்ணீர் சொட்டடித்தது.

கட்கத்திலிருந்து துண்டை எடுத்து வடிவிடம் தந்தான்.

"என்னது? மழையிலே நனைஞ்சுக்கிட்டுப் போயி... என்னத்தை வாங்கிட்டு வந்தீக?"

"பிரிச்சுப் பாரு. இருக்குறதை புள்ளைகளுக்கு பகுந்து குடு."

முத்து, ராஜி முகங்களில் ஆவல் பிரகாசம். சிறு கண்களின் ஒளித்துள்ளல். 'என்னது, என்னது' என்று அறியப் பரபரக்கிற ஆர்வப்பெருக்கு. மகிழ்ச்சிக்குரியது என்ற முன்னுணர்வின் குதூகலம்.

வீடெல்லாம் நிரம்பியிருந்த கூடுதலான குளிர். நரம்புகளுக்குள்ளும் ஊடுருவிப் பாய்ந்து பரவுகிற நடுக்கம். காரச்சேவின் மொறுமொறுப்பும், பட்டாணிக் கடலையின் கொறிப்பும் அந்தக் குளிருக்கு சுகமாக இருந்தது. பிள்ளைகளுக்கு இளஞ்சூட்டுக்குரிய இன்பம். வெந்நீரின் வெதுவெதுப்பு தருகிற சுகம். வடிவும்கூட

கை நிறைய சேவை அள்ளிக் கொண்டாள். பொடிக்கண் காரச்சேவு. கடித்தால்... நறுக். நாக்கில் பரவுகிற காரம் கலந்த கடலை மாவின் வேக்காட்டு ருசி. வடிவு முகமும் பூத்த பூவாகியிருந்தது.

"இன்னிக்குத்தான் புத்திசாலியாயிருந்துருக்கீக."

"என்ன சொல்லுதே வடிவு?"

"உருப்படியான காரியம் பண்ணியிருக்கீக. இந்தாங்க... நீங்களும் ரெண்டு சேவை அள்ளிக்கோங்க."

ராஜிக்கும், முத்துவுக்கும் ஒரே ஆதாளி. ஆனந்தக் கூத்தாட்டம். சிரிப்பும் கும்மாளமுமாகக் குதித்தனர். ஆசை ஆசையாக அள்ளித் தின்றனர். "அய்யான்னா... அய்யாதான். தங்க அய்யா" ராஜியின் பூவாசப் பாராட்டு. பொங்கிப் பூரித்துப் போகிற சமுத்திரக்கனி.

வடிவு சட்டியை கொதிக்க வைத்தாள். மண்டை வெல்லமும் தேயிலையும் போட்டு வேக வைத்தாள். ஆவி பறக்க கடுங்காப்பி குடித்தனர்.

சமுத்திரக்கனி கையிலும் எவர்சில்வர் கிளாஸ் ஒன்று. கறுஞ்சிவப்பு திரவமாக கடுங்காப்பி. மூன்று இழைகளாக பிரிந்தெழுந்த ஆவியின் தேயிலை வாசம்.

மழைக்கூதலுக்கு இதமான பானம். போர்வையாக போர்த்தித் தழுவிய பாசத்தின் வருடலைப் போல, சுகமான திரவம். ருசித்து ரசித்தான் சமுத்திரக்கனி.

இந்தச் சுடுதண்ணீரைக் குடித்து முடித்தவுடன் சிகரெட் அடித்தால் என்னமாய் இருக்கும் என்ற கனவில் லயித்திருக்கிற அவன்.

வெளியே, வாழ்க்கையின் அசைவற்ற அமைதி. முடக்கத்தில் புதைந்துபோன உயிர்ச்சலனம். மழையின் சத்தம் மட்டும்.

ஓட்டுச்சாய்ப்பில் துளி பட்டுத் தெறிக்கிற சலங்கைச் சத்தம். தெருத்தண்ணீர் ஓடுகிற சத்தம். 'வித்தெடு, விதையெடு' என்கிற தவளைகளின் ஓயாத சத்தம். சலிப்பூட்டுகிற கூரைத்தண்ணீரின் சொட்டடிப்புகள். குளிராலும் கூதலாலும் அச்சுறுத்துகிற மழைப்பூதம்.

கடுங்காப்பியை உறிஞ்சுகிற சமுத்திரக்கனி. உதட்டில் சுடுகிற அந்த உஷ்ண ருசி. அப்போது—

வெளியே—

மழையின் கூச்சலை அமுக்குகிற மனிதக் கூப்பாடு. நிறைய ஆட்கள் ஓடுகிற சத்தம். தெருத் தண்ணீரில் ஏகப்பட்ட 'சளப், சளப், சளப்'கள். "ஐயோ... பாதரவே, இப்புடியுமா கொடுமை நடக்கும்" என்று ஒப்பாரிப் புலம்பல்களாக பெண்களின் சோகச் சத்தம். பீதியும் பரிதவிப்புமான அங்கலாய்ப்புகள்.

வடிவுதான் அதை முதலில் கவனித்தான். முக பாவனையின் கலவரத் தோற்றம்.

"வெளியே... என்னமோ சத்தங் கேக்குதே..."

"ஆமா... நெசந்தான்."

சமுத்திரக்கனி விருட்டென்று வெளியே பாய்ந்தான். ஆட்களெல்லாம் முந்திப் போய்விட்டனர். தெருத் தண்ணீர் ஏகக் கலங்கலாகியிருந்தது.

மழை சற்று காட்டமாக சீறியது. முரட்டுத் தூறல்கள் 'சட்டச்சட, சட்டச்சட...'வென்று அறைந்தது. ஒவ்வொரு துளியும் ஒரு கல்லாக வந்து விழுந்தது.

பாட்டம் பாட்டமாக பெய்கிற மழை. இந்தப் பாட்டம் ரொம்ப முரட்டு ஊற்றலாக இருந்தது. ஆகாயம் முழுக்க அழுக்குப் புகை மேகப் பரவலாக—நீர் கோர்த்த சமுத்திர மேகமாக...

பதைப்பும், பதற்றமுமாய் முந்தி ஓடுகிற ஆட்களை பின் தொடாந்து ஓடுகிற சமுத்திரக்கனி. மேல்துண்டு, பனியன், மடித்த இடுப்பு வேட்டி எல்லாமே நனைந்து தோலோடு தோலாக அப்பிக் கொண்டன. கண்ணுக் குள்ளேயே தெறிக்கிற மழைச்சிதறல்கள்.

'என்னமோ, ஏதோ' என்ற கிலியில் எதையும் பொருட்படுத்தாமல் ஓடுகிற சமுத்திரக்கனி. 'இன்னது' என்று தெரியாத திகில்.

கிழடுகளும், இளவட்டங்களும், பொடிசுகளும், பெண் களுமாக மழையை மதிக்காமல் ஓடுகிற வேகம். அங்க லாய்ப்பில் கைகளின் அசைவுகள். மார்பில் அடித்துக் கொள்கிற பெண்கள். அவிழ்ந்து நனைந்து தொங்குகிற தலைமுடியைக்கூட அள்ளி முடியாமல் ஓடுகிற கிழவிகள்.

இவன் நடையை எட்டிப் போட்டான். கடைசியில் போய்க் கொண்டிருந்த சின்னச்சாமி மாமாவை நெருங்கினான்.

"என்னாச்சு மாமா..? என்னத்துக்கு ஓடுதாக?"

"பம்பு, மோட்டாரை கழட்டித் தூக்கப் போயிருந்த செந்தூரானை பாம்பு கடிச்சிருச்சாம்."

"ஐயய்யோ... எங்க வைச்சு?"

"பம்ப்புக்குள்ளே சுருண்டு கெடந்துச்சாம் பாம்பு. வகையாக கை நரம்புலே அடிச்சுருச்சாம்..."

"அடக் கொடுமையே..."

"உசுரு பொழைக்குறது கஷ்டமாம்."

சமுத்திரக்கனிக்குள் பகீரென்கிற அதிர்வு. ஆன்மாவின் அடிவேர்வரை அதிர்ந்து குலுக்குகிற பயச்சூறாவளி.

"அடடே... இப்பத்தான பாத்துப் பேசுனேன். அதுக்குள்ளே மாயமாயிட்டானா? அடக் கிரகச் சாரமே..."

அவனுக்குள் அசுரக்கையின் பிசைவு. அடிவயிற்றின் வெறுமை. நெஞ்சுக்கூட்டை நெறிக்கிற இழப்புத் துயரம். முட்டிக்கொண்டு வருகிற அழுகை. மனத்திணறல்.

"செந்தூரா... செந்தூரா... செந்தூரா..."

பாதி அழுகையும் பாதி பதற்றமுமாய் புலம்புகிற உதடுகளில் மழைத்துளிகள் பட்டுத் தெறிக்கின்றன. "ஐயோ... ஐயோ... ஐயோ..." என்று அரற்றுகிற அடிமனசு. மழையை மதிக்காத அன்பு மனசு.

ஆணும் பெண்ணும், சிறிசும், கிழடும் அதோ மனிதப் படையின் தடதடப்பு. சகமனிதன் இழப்பை தாங்கிக் கொள்ளாத அன்பு இதயங்கள். மானுடப் பிரவாகத்தின் பெருக்கு. அந்த—

மானுடத்தின் காலடியில், மழையின் மூர்க்கம் தோற்றது.

# புனிதவாசம்

ஏதோ வேற்றுச்சத்தம் கேட்டு முழித்தான், நடராசன். விடிவிளக்கின் மங்கலான பச்சைவெளிச்சம். எல்லாரும் உறங்குகிறார்கள். எங்கோ மயில்கள் கத்துகிற சத்தம். சிறகடிக்கிற சத்தம். பனை ஓலையின் சலசலப்பு. அடுத்த தெருவில் பொட்டை நாயை விரட்டுகிற நாய்களின் உறுமல்கள்.

எல்லாச் சத்தங்களையும் விலக்கி ஒதுக்கிவிட்டு, மனசை கூர்மைப்படுத்தி காதில் நிறுத்தி, நுட்பமானான். வேற்றுச் சத்தத்தை துல்லியப்படுத்துகிற முயற்சி.

'கீச், கீச்... கீச்... ஹ்யா... ஹ்யா..." என்ற மாதிரி மெல்லிய குரல். பூமிக்கே புதுசாக வந்த உயிரின் குரல்.

கோழி அடை கிடப்பது ஞாபகத்துக்கு வந்தது. 'அட... குஞ்சு பொறிச்சிருக்கா?' முட்டையைப் பிளந்துகொண்டு ஈரக் கொழகொழப்புடன் முதல் குஞ்சு வந்திருக்கும் தலைப்பிள்ளை.

குஞ்சை வாஞ்சையுடன் அலகால் உருட்டி பக்கத்தில் இழுக்கும் கோழியின் பாசஉறுமல். "ர்ர்ர்ர்...ரூ, ர்ர்ர்ர்ர்...ரூ"

கதவைத் திறந்தான். மாம்பலகைக் கதவு. ஊதிக் கொண்டு வர மறுக்கிறது. வெடுக்கென்று இழுத்தபிறகு வந்த கதவு. வெளியே வீட்டின் இடதுபக்கம் தாழ்வாரம். கூரைச்சாய்ப்பு. அதற்கு அடியில் சிமிண்டுத் திண்ணை. திண்ணையின் அடிப்பாகம் முழுக்க கோழிக்கூடு. உள்ளேதான்.

பாதி உடைத்த வட்ட மண்பானையில் மணல் நிரப்பி, அதன்மேல் பதிமூன்று முட்டைகள் வைத்து... வசதி பண்ணிக் கொடுக்க, முட்டைமேல் 20 நாளாக படுத்தே கிடக்கிற கோழி. இரை பொறுக்காமல், ஊர்மேயாமல்... குலைபட்டினியாக பத்தியம் காக்கிற கோழி. வைராக்கிய மாக பிரசவச் சுமையை சுமக்கிற கோழி. நாலு நாளைக் கொரு தடவை ரெக்கையடித்துக் கொண்டு கூவலோடு வெளியே வரும். வெள்ளை வெள்ளையாக பீய்ச்சும். வெளிப்பானைத் தண்ணீரில் அலகை வைத்து, உறிஞ்சி, அண்ணாந்து நாலு மடக்கு குடிக்கும். அதுதான் உணவு.

'முட்டைகளை யாரும் களவாண்டு விடுவார்களோ' என்ற பயப்பதைப்பில் மிரட்டலான கூவலோடு ரெக்கையடித்து ஓடிவந்து, முட்டை மேல் படுத்துக் கொள்ளும். முட்டைகளை எண்ணிச் சரிபார்க்கிற மாதிரி, 'ர்ர்ரூ... ர்ர்ரூ' என்ற உறுமல்களோடு ஒவ்வொரு முட்டையாக அலகால் உருட்டி, உருட்டி... அடிமடிக்குள் வைத்துக்கொள்ளும்.

கோழியின் முகமே வெளுத்துப் போயிற்று. ரத்தச் சிவப்பான கொண்டை, நாடி, செவியெல்லாம் ரத்தசோகை வந்தமாதிரி வெளுப்பேறிப் போய்விட்டன. அரைச் சொருகலாக வட்டக்கண்.

"ஹ்யா... ஹ்யா... ஹ்யா... க்கீ... க்கீ..." குஞ்சின் பிஞ்சுக்குரல். மனசே குதூகலப்படுகிறது. பார்க்க ஆசைப்படுகிற மனப்பரபப்பு. கோழிக் கூட்டுக்குள் குனிந்து பார்க்க பயம். தயக்கம்.

'செல்லு வந்து அப்பிக் கொள்ளுமோ... உடம்பெல் லாம் அரிக்குமே...'

கண்ணுக்குத் தட்டுப்படாத பொடி சைஸில் வெள்ளைப் புள்ளியாக கோழிப்பேன். ஜீவன் செத்த அடைக்கோழிகளிடம் மட்டுமே இருக்கும். பார்த்த கணத்தில் வந்து அப்பிக் கொள்ளும். செவியோரங்களில் ரொம்ப அரிக்கும். தோல் சுருக்க மடிப்புகளுக்குள் ஊர்ந்து நகரும். அரிக்கும். சொறிய சொறிய உடம்புதான் புண்ணாகும். அது சாகாது. தேங்காயெண்ணெய் 'குளு...ர'த் தேய்த்தால், அரிப்பு மடங்கும்.

நடராசன் டார்ச் லைட்டோடு கூண்டுக்குள் குனிந் தான். ஊமத்தைம் பூவைப்போல கோழிக்குஞ்சு. சிறு சீவன். பார்க்க பார்க்க லட்சணமாக இருக்கிறது. ஆசை ஆசையாக இருக்கிறது. உருட்டிய பூப்பந்து போலிருந்தது. அதன் சிறு அலகு, நெல்மணி போலிருந்தது.

இவனையே எதிரியாகப் பாவித்து "க்க்ர்ரூ... க்க்க்ர்ர்ரூ..." என்று பகை வெக்கையோடு உறுமுகிற தாய்க்கோழி. தாய்ப்பாசப் பயம். பாசக் கோபம். நல்ல சாதிக்கோழி. நாட்டுக்கோழி. இவன் தலையைக் கண்டதும், கறுஞ்சாம்பல் கோழி கோபப் பயத்தில் கொண்டை ரோமம் சிலிர்த்து, ரெக்கைகள் புடைக்க, எல்லா ரோமங்களும் சிலிர்த்து பயக் கூப்பாடாகக் கத்த ஆரம்பிக்க...

தலையை இழுத்துக்கொண்ட நடராசன். மூஞ்சி யெல்லாம் அப்பிய தூசிகள் நகர்கிற மாதிரியோர் கூச்ச உணர்வு. அப்பிக்கொண்ட செல். தேய்க்க தேய்க்க அரிக்கிறது. தாங்கமுடியாத அரிப்பு.

"ம்ம்... சனிக்கெழமை... நல்ல நாள்தான்... சனிப்பெருக்கு... மொதக் குஞ்சு..." என்று முணுமுணுத்துக் கொண்ட நடராசன்.

முகத்தைக் கழுவி.. உடம்பைக் கழுவி... துடைத்து, எண்ணெய் தேய்த்த பிறகும்... செவி மடிப்பில்— கண்ணோரத்தில்— செல் அரிப்பு.

தன் தலையைக் கண்டதும் மிரட்டலாய் உறுமிய கோழி. முட்டைகளையும், புது குஞ்சையும் கட்டிக் காக்கிற அக்கறை. அன்பில் துளிர்க்கிற கோபம். பாச ரெளத்ரம்.

நடராசன் ஆச்சரியமாக யோசித்தான். 'கோழிகிட்டே எம்புட்டுப் பாசமிருக்கு. பாசத்துக்கா தெனம் தவசம் போட்ட ஆளையே எதுத்துப் பாக்குற தீவிரம்... மனுசப் பாசத்தைவிட... அசலானது.'

* * *

அழுது சிணுங்குகிற கைக்குழந்தையை இடுப்பில் வைத்திருக்கிற பார்வதி. அந்தச் சிணுங்கலை நிறுத்து வதற்கு படாத பாடு படுகிறாள். ஒரு சீராகக் குலுக்கிக்கொண்டே... குழந்தையுடன் பேச்சு கொடுக்கிறாள். கவனத்தை அங்கும் இங்குமாய் திருப்புகிறாள். உலகையும் உறவையும் கற்றுத் தருகிறாள்.

"டேய் டேய்... டேய் டேய்... இங்க பாரு... மரம்... மரத்துலே பாரு குருவி. அந்தா... மைனா. காக்கா. அய்ய்க்...

காக்கா பறந்து வருது பாரு... இங்க பாரு... மாமா... ஆச்சி... பாட்டையா... அட... இந்தா... மாடு... பசுமாடுடா."

பதினோரு குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு வண்டிப்பாதைக்கு வருகிற கோழி. "கேர்... கேர்... கேர்" என்ற அழைப்புத் தொனியோடு முன்செல்கிறது. குஞ்சுகள் தொடர்கின்றனவா என்று நின்று கவனிக்கிறது. செவலை, கறுப்புக் குஞ்சுகளெல்லாம் வந்துவிட்டன. ரெண்டு வெள்ளைக் குஞ்சுகள் மட்டும் பயமறியாத இளங்குஞ்சாக ஆபத்தான இடத்தில் நிற்கின்றன.

'கேர்... கேர்' என்று அதன் மொழியில் அதட்டுகிறது. கேட்டுக்கொள்ளாத சேட்டை மழலைகள்.

"இந்தா... வருது, குஞ்சைத் தூக்குற பருந்து" என்கிற எச்சரிக்கை தருகிற தொனியில்... கழுத்தை உயர்த்தி நிமிர்கிற கோழி. "ங்ங்ர்ர்ர் ங்ங்ங்ர்ர்ர்" என்று ஒரே இழுப்பான நீள்கூவல்.

பயந்தடித்துக்கொண்டு ஓடிவருகிற வெள்ளைக் குஞ்சுகள். "வீயா, வீயா... வீயா..." என்ற பயக் கூச்சலில் எல்லாக் குஞ்சுகளும் கூரை நிழலுக்கு பயந்தோடுகிற ஓட்டம்.

பயம்— சஞ்சலம்— தெளிந்த நிலையில், கம்பீரமாக நடந்து வருகிற கோழி. பிள்ளைகளை 'வழிக்கு' கொண்டுவருவதில் வெற்றி கண்ட பெருமித நடை.

கூரை நிழலில் கூட்டி ஒதுக்கப்பட்ட குப்பை. மழைத்தண்ணீரில் வந்து ஒதுங்கி, காய்ந்துபோன கம்மங்கதிர்ச் சக்கைக் குவியல். குனிந்து கொத்துகிற கோழி. காலால் குத்திக் கிளறி, அலகால் கொத்துகிறது.

தானியமணிகள் இருப்பதைப் பார்த்துக் கொண்டது. புதையலைக் கண்ட குதூகலம். மனத்துள்ளல்.

“கெட்... கெட்... கெட்... கெட்...” கோழியின் வினோதமான கூவல். குஞ்சுகளைக் கூப்பிடுகிற குழைவுத்தொனி.

“வாங்கடா கண்ணுகளா... வந்து தின்னுங்கடா” என்றழைக்கிற தாய்மைக் கனிவான கொஞ்சலழைப்பு.

பூப்பந்துகளாக ‘குடு, குடு, குடு’வென்று ஓடிவருகிற குஞ்சுகள். வண்ணங்கள் வேற்றுமைப்பட்டாலும், ஈன்ற தாய் ஒன்று என்கிற ஒற்றுமையோடு ஓடிவருகிற பூங்குஞ்சுகள். கோழியின் காலைச் சுற்றிவந்து நின்றுகொண்டு “கீயா, கீயா, கீயா” என்கிற பிஞ்சுகள். கொத்திக் காட்டும் இரைக்கூட கொத்தித் தின்னத் தெரியாமல்... வெறும் கத்தலாகக் கத்துகின்றன.

கோழி “ட்டக்... ட்டக்...ட்டக்” என்று குரல் மாற்றி கூவுகிறது. அலகால் ஒரு தானியமணியைக் கொத்தி... குஞ்சுகளுக்குக் காட்டிவிட்டு... தவறவிடுகிறது.

ஒரு குஞ்சு அந்தத் தானியமணியை சிறு மஞ்சள் அலகால் கொத்துகிறது. கொத்திய வேகத்தில் உள்ளே போய்விட்ட தானியம். குஞ்சுக்கு விக்குகிறது. சிறுகழுத்தை உயர்த்தி, நெளித்து... விழுங்கமாட்டாமல் திணறுகிறது. மற்ற குஞ்சுகளும் தானியமணிகளைப் பொறுக்குகின்றன.

குப்பைக் குமிகள்... கூளக் குமிகள் தேடித்தேடி... கிண்டிக் கிளறுகிற கோழி. “நீங்களும் கிளறுங்க,

செல்லங்களா..." என்று கத்தும் குரலால் கற்றுத் தருகிற கோழி.

அழும் பிள்ளையை அமர்த்த முடியாமல் தத்தளிக்கும் அம்மாவை விட... இந்தக் கோழி, குஞ்சுகளுக்கு உலகையும், உறவையும், உயிர் வாழும் முறையையும் நன்றாகவே கற்றுத் தருகிறது.

நடராசன் கோழியையே கூர்ந்து கவனித்தான். உள்ளுக்குள் பூத்துச் சொரிந்த ஆச்சரியப் பூக்கள். நினைவிதழ் விரிப்புகள்.

"அதோ... அந்தப் பறவைபோல வாழ வேண்டும்" என்ற டி.எம்.எஸ்.ஸின் குரல், ஆழ்மனதில் எழுந்தன. பறவையிடம் கற்றுக்கொள்ள மனிதருக்கு நிறைய இருக்கத்தான் செய்கின்றனவா? கூடி வாழும் பண்பை காகத்திடம், கொண்ட லட்சியத்தில் குறியாக இருப்பதை கொக்கிடம், நன்றியை நாயிடம், நம்பிக்கையை யானையிடம், உழைப்பை காளையிடம் மனிதர்கள் கற்றுக் கொள்ளணுமா? பிராணிகள் மனிதருக்கு ஞானம் தரும் ஆசானா? நிசம்தானா?

நடராசனுக்குள் பூவாசமாகப் பரவிப் படர்கிற நினைவுகள்.

பார்வதியை நெருங்கினான், நடராசன்.

"தங்கச்சி, மாப்புள்ளே வூட்லே இருக்காரா?"

"அவர் எப்ப வூட்லே இருந்தாரு, அண்ணாச்சி?"

"பெறவு?"

“ஒலகத் தொழிலாளர்களே ஒண்ணு சேருங்கன்னு ஊரு ஊரா சுத்துவாரு. கேட்டா... ‘எல்லா மனுசரும் என் ரத்தம்தான். அவங்க கவலைக, ஏங்கவலைக’ ம்பார்.”

பார்வதி குரலில் பீறிட்ட சலிப்பும், கசப்பும்.

“எல்லா ஆம்பளைகளும் நாட்டைப் புடுங்கி வீட்லே போடுவாக. உங்க மாப்புள்ளே, “நாடு, நாடு’ன்னு வீட்டைத் தொலைக்காரு...”

பார்வதியின் மனவேதனையும் சோகமும் குரலில் கசிகிறது.

‘ஏண்டா... கேட்டோம்’ என்றிருந்தது நடராசனுக்கு.

‘என்னத்தையாச்சும் சொல்லிச் சமாளிக்கணுமே’ என்று வார்த்தைகளை மனசுக்குள் தேடிப் பொறுக்கினான்.

“சரி சரி... பார்வதி, மாப்புள்ளை நீ நெனைக்குற மாதிரியில்லே. நல்ல புத்திசாலி. நல்ல மனசுக்காரரு. ‘எல்லா ஊரும் நம்ம ஊரு, எல்லா மனுசரும் நம்ம ஒறவு’ன்னு சொல்லி வர்ற ஆதித்தமிழன் மனசை... இப்ப, நம்ம மாப்பிள்ளைதான் கொள்கையா வைச்சிருக்காரும்மா...”

“என்னமோ அண்ணாச்சி, உங்க மாப்பிள்ளையை நீங்கதான் மெச்சிக்கணும்.”

குழந்தையும் கையுமா அவள் நகர்ந்து செல்ல, அவளது விசும்பல் இவனுக்குக் கேட்கிறது. நடராசனுக்குள் பார்வதியின் கணவன்.

ஆச்சரியமான ஆளுதான். கூடப் பொறந்த அண்ணன் தம்பிக கூட... பங்காளிகளாக இல்லாமல், பகையாளிகளாக இருக்கிற இந்தக் காலத்திலும்... சோமாலியா மக்கள் சோகத்துக்கு இந்த ஆளு வருந்துவாரு. குஜராத்தில் குத்துண்ட சிசுவுக்காக மனம் கொதிப்பாரு. வித்தியாசமான ஆளுதான்.

நடராசன் கோழியைத் தேடினான். மேற்கில் வேப்பமரத்து நிழலில் நின்றது. கட்டற்று சுதந்திரமாக உலாவுகிற பூங்குஞ்சுகள்.

இவன் வைத்த கன்று. பார்த்துப் பார்த்து பாதுகாத்து வளர்த்த மரம். இன்றைக்கு மைனாக்கள், காகம், குயில்கள், குருவிகளுக்கு வாசஸ்தலமாகியிருக்கிற வேப்பமரம்.

வேப்பமரத்தை நோக்கி மெல்ல மெல்ல நடக்கிற இவனது மகன் செல்வம். மூன்று வயசு முல்லை. கையில் ஒரு நீளக்குச்சியோடு தத்தி தத்தி நடந்து போகிறான். தன் பிள்ளையின் தளிர் நடையை ரசித்துக்கொண்டே யிருந்த நடராசன்.

ஹைக்கூ கவிதைபோல நடக்கிற செல்வம். கால் முளைத்த கவிதை.

குச்சியோடு தத்திப்போன செல்வம், தன் குச்சியால் செவலைக் குஞ்சைத் துரத்தினான். 'வீயா, வீயா' என்று வீறிட்ட குஞ்சு. பயக்கத்தல்.

தூரத்தில் பழங்குப்பையைக் கிளறிக் கொண்டிருந்த சாம்பல் கோழி, தன் குஞ்சின் வீறிடல் கேட்ட கணத்தில்—

ரெக்கைகளை விரித்து, மாரடித்துக் கொண்டே கோப மூர்க்கமாகப் பாய்ந்துவந்த கோழி. குபீரென்று சீறிச் சினந்து, பாய்ந்த வேகத்தில் செல்வத்தின் மீது மோதிக் கொத்தி... ரெக்கையால் அடித்து...

பயத்தில் அதிர்ந்து, மல்லாக்க விழுந்து கத்தி வீறிட்ட செல்வம். துடித்துப் போன நடராசன். காற்றாகப் பாய்ந்து ஓடினான். பிள்ளையைத் தூக்கிய வேகத்தில்—

கோழியை எற்றலாமா என்று நிமிர்ந்தால்—

இவன் ஓடிவந்த அதிர்வில் திடுக்கிட்டு... பயந் தோடிப் போன கோழி.

நடராசனின் மனைவியும் சத்தம் கேட்டு ஓடிவந்தவள், செல்வத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டாள். செல்வத்தின் அழுகைக் சத்தம் இன்னும் கேட்கிறது.

குஞ்சைத் தூக்க குறிவைத்து கீழ்நோக்கி அம்பெனப் பாய்ந்து வருகிற பருந்தை... பறந்தடித்து விரட்டிய கோழியின் அதிசயத் துணிச்சலை பார்த்துப் பார்த்து பிரமித்திருக்கிற நடராசனுக்கு—

தன் மகனைப் பாய்ந்தடித்த துணிச்சலை நினைத்து நினைத்து மனம் கொதித்தான். பிரமிக்க முடியவில்லை. வெறுப்பாக இருந்தது. கோபம் கோபமாக வந்தது. நேரம் நகர்ந்தது. நகர நகர... கோபம் குறைந்து யோசித்தான்.

கோழியின் அன்பு, ஊமையன்பல்ல. செயலூக்க முள்ள அன்பு. எதிரி எத்தனை பெரிய ராட்சஸமாயிருந் தாலும் மோதிப் போரிடுகிற ஆற்றலைத் தருகிற அர்த்தமுள்ள அன்பு. குஞ்சுகளை நேசிக்கிற கோழி.

குஞ்சுக்கு உலகம் கற்றுத் தருகிறது. இரை பொறுக்கக் கற்றுத் தருகிறது. பகைப் பிராணிகளிடமிருந்து பாது காக்கும் முறையைக் கற்றுத் தருகிறது.

கோழி, குஞ்சுகளுக்கு தாய்; வாழும் முறை கற்றுத் தருகிற ஆசான்; வளரும் இயல்பை கற்றுத் தருகிற சமூகம். எல்லாமே கோழிதான். குஞ்சுகளின் உலகமே கோழிதான். பாசத்தின் இலக்கணம்தான்.

மனுசரைவிட கோழி மகத்தானதுதான். உயர்பண்பு கொண்டதுதான். மனுசருக்கு கோழியும் ஆசான்தான். நிசம்தான்.

* * *

ரெண்டு மாசமிருக்கும்.

நடராசன் பேருக்கு ஒரு காயிதம் வந்திருந்தது. நீலநிற இண்லெண்ட் லெட்டர். பதனமாக உடைத்தான். விரிப்பதற்கு முன்—

எங்கிருந்து வந்த கடிதம் என்று திருப்பிப் பார்த்தான்.

"பொற்கொடியம்மா

அருஞ்சுனை காத்த அய்யனார் சுவாமி கோயில்,

மேலப் புதுக்குடி,

தூத்துக்குடி மாவட்டம்."

பொற்கொடியம்மா என்றவுடன், மனசில் வந்த பெரியம்மா. மதுரைக்குப் போயிருந்த இடத்தில்... ஒரு வயதான அம்மாவுக்கு 'ரொம்ப அர்ஜெண்ட்' என்று தேடிக் கொண்டிருந்த ரத்தவகை இவனிடம் இருந்தது.

ரத்தம் தந்தான். அந்தப் பெரியம்மா பெயர் பொற்கொடியம்மா.

'எதற்கு கடிதம்?' நடராசனுக்குள் திகைப்பு. கேள்வி யோசனை. அவசரமாக விரித்தான்.

"அன்புள்ள தம்பி,

சௌகரியம். சௌகரியம் உண்டாக ஆசி.

நீங்கள் தந்த ரத்தத்தால் உயிர் பெற்றேன். முழுமையான ஆரோக்கியம் பெற்றேன். மிகமிக நன்றி தம்பி.

மதுரைதான் எனது ஊர். எங்கள் குலதெய்வம் கும்பிட வந்திருந்தோம் மேலப் புதுக்குடிக்கு. ரத்தம் தந்து, பணமும் பெற மறுத்துவிட்ட உங்கள் நல்ல உள்ளத்தை எண்ணி நெகிழ்ந்தோம். கோயிலிலும் உங்கள் ஞாபகம்தான்.

உங்கள் பெயருக்கும் ஒரு பூஜை நடத்தி, அதன் பிரசாதத்தை தனிப் பார்சலாக அனுப்பியிருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும்.

அருஞ்சுனை காத்த அய்யனார் உங்கள் நல்ல மனசையும், குடும்பத்தையும் காப்பாற்றி உயர்த்துவார். வாழ்க, வளர்க!

எனது ஆசிகள்.

இப்படிக்கு
**பொற்கொடியம்மா**"

நடராசனுக்கு நெகிழ்வு. நெகிழ்ந்த மனசின் பரவசம். தனது ஒரு சிறிய உதவிக்கு, இத்தனை பெரிய நன்றியா? உறவேயில்லாத ஓர் அம்மா... இத்தனை நெகிழ்ச்சியோடு உறவாகிறார்களே...

வலி நிறைந்த குஞ்சுகளின் கூச்சல். "நீயா... நீயா.. நீயா" என்று வீறிடுகிற குஞ்சுகள். ரணம் தாளாத வேதனைக் குரல்கள்.

திடுக்கிடலோடு வெளியே வந்த நடராசன். கோழி, புது மினுமினுப்போடு இருக்கிறது. ரோம மினுமினுப்பே தனி அழகாயிருக்கிறது. முகம், ரத்தச் சிவப்பாக தகதகக்கிறது. கொண்டையும், செவியும், மூஞ்சியும் ரத்தம் கோதின பருவச் சிவப்பு.

சேவலுடன் மேய்கிறது. 'கோ், கோ்...' என்று வாஞ்சைக் குரலோடு வட்டமடிக்கிற சேவலுக்கு, இடம் கொடுத்து, இணைக்குரல் தருகிறது. 'உர்ர்ரூ...' என்று மிரளவில்லை. ரோமம் சிலிர்க்கவில்லை.

தாயென்று வாஞ்சையோடு காலைச் சுற்றுகிற குஞ்சுகளை கோபமாய் கொத்தி விரட்டுகிற கோழி. கொத்திய கொத்தல்களில் குஞ்சுகளின் உச்சிமண்டையில் ரத்தப் புள்ளிகள். அண்டி அண்டி வருகிற பிள்ளைகளை அண்டவிடாமல் கொத்திக் குதறுகிற கோழி. விடலைக் கோழி.

காமப் பருவத்தில் தாய்ப் பாசத்தை தொலைத்து விட்ட கோழி. பருந்தை எதிர்த்து பாய்ந்து பறந்த தாய்மை. செல்வத்தையே கொத்தி மலர்த்திய தாய்மை. காமத்தில் மாயமாகிப் போன தாய்மை.

தன் உடம்பின் தேவையே உயிரின் தேவையாகிப் போன கோழி. மனதின் உறவாகப் படியாத—தற்காலிக உணர்ச்சியாக இருந்து மறைந்துவிட்ட பாசஉணர்ச்சி. உறவாக பரிணமிக்காத வெற்று மிருக உணர்ச்சி.

பறவைகளின் வாசஸ்தலமான வேப்பமரத்தை வைத்துப் பாதுகாத்த தனது உயிர்நேயம்.

உலக மனிதர்களை உறவு மனிதர்களாக நினைத்து கருணை வீரத்தோடு செயல்படுகிற பார்வதி கணவன்.

உறவேயில்லாமல், நன்றியினால் உறவாகிப் போகிற பொற்கொடியம்மா...

தன்னலப் பிறவியாக மட்டுமே பிழைக்கிற கோழி; பிராணிகள் சமூகப் பிறவியாகவே வாழ்கிற மனிதர்கள். சார்ந்தும் சுமந்தும் பிணைந்து பந்தமாகிற மனிதர்கள்...

நடராசனுக்குள் பூவாசமாகப் பரவிப் படர்கிற நினைவுகள். உள்ளுக்குள் இறங்கி இறங்கி வேர் பதிக்கிற உணர்வுகள்.

தன்னலப் பிராணிகள் மனிதருக்கு எப்போதும் ஆசானாக இருக்கவே முடியாது...

நடராசன் கையிலிருந்து சடசடத்த நீலநிறக் கடிதத்தைப் பார்த்தான். எல்லாப் பூவாசத்தையும் மிஞ்சுகிற மனிதவாசம் அதில் கமழ்ந்தது.

卐

கங்கை